
16-30 நவம்பர்'98 ரூ.4.00
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

**கல்வியைப் பார்ப்பன மயமாக்க பா.ஜ.க.வின் சதி**




படிப்பகம்

www.padippakam.com

# ஊழல் - மோசடி பேர்வழிகளின் பிடியில் போடி சுப்புராஜ் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற வார்த்தைகளுக்கு போடி சுப்பராஜ் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம், 'கூட்டுறவு கொள்ளையில் தமது வீட்டுயர்வு' என்ற புது அர்த்தம் கொடுத்துள்ளது.

இதை உருவாக்கிய காரண கர்த்தா சங்கச் செயலாளர் ஈ.நாகராஜன். 'இலஞ்சம் வாங்கினால், மோசடி செய்யாமல் காரியம் செய்து கொடுப்பார்' என்று பலரிடம் 'பேர்' வாங்கி, இதை மூலதனமாக்கி நாகராஜன் நடத்திய திரு(ட்டு) விளையாடல்களைப் பட்டியலிட்டு மாளாது.

✱ தனது பினாமிகள் பெயர்களில் சங்க வீட்டுமனைகளை ஒதுக்கி, பிறகு சட்டத்திற்குப் புறம்பாக வேறு நபர்களுக்கு விற்று பல இலட்சங்கள் சுருட்டியவர்.

✱ வீடு கட்ட கடன் வாங்க வருபவர்களிடம் ரூ. 10,000, 20,000 என்று பிடுங்கிக் கொண்டு, குறித்த காலத்தில் கடன் தராமல் ஏமாற்றுவது.

✱ கடன் கேட்டவர்களுக்கு தர மறுத்த நாகராஜன், ஜோதிமணி என்பவர் கையெழுத்தை தானே போலியாகப் போட்டு ரூ. 40,000 மோசடி செய்தவர். ஜோதிமணி இறந்தநாள் 18.3.93. இறந்த நபர் கையெழுத்துப் போட்ட நாளோ 31.3.93. இந்த மோசடியையும் சாமர்த்தியமாக ஜோதிமணி உறவினர்கள் மீது சுமத்தி தப்ப முயன்றவர்.

✱ மதுரை மண்டல துணைப் பதிவாளர் ஆணைப்படி இந்த வீட்டு மனைகளுக்கு சதுர அடிக்கு 25 பைசா நிலவரி போடவேண்டும். ஆனால் தான் வைத்ததே சட்டம் என ரூ. 1.25 வரி போட்டுச் சுரண்டியுள்ளார் நாகராஜன்.

ஏற்கனவே பல மோசடி, முறைகேடுகளுக்காக இருமுறை தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட நாகராஜன், பணத்தை வாரியிறைத்து பதவியைப் பெற்றவர்தான். தற்போது 3-வது முறையாகத் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுவும் கண்துடைப்பு நாடகமே!

தற்போது இச்சங்கம் மூலம் பணம் சம்பாதிப்பது போடி எம்எல்ஏ சுடலைமுத்து. சங்க நிர்வாகத்தில் சிக்கல் உள்ளது, சங்கத் தலைவர் மீது குற்றச்சாட்டு உள்ளது எனக் கூறி சங்கம் மூலம் பணப்பட்டுவாடா செய்ய தடை வாங்கினார் எம்எல்ஏ. தடை வாங்கிய இவரே, திரும்ப மேலதிகாரிகளிடம் பேசி, புதுக்காலனி தி.மு.க. கவுன்சிலர் வி.ஆர். முனியப்பா உட்பட சுமார் 7 பேருக்கு கடன் பெற்றுத் தந்துள்ளார். கட்சிக்காரர் என்பதால் அல்ல, பெற்ற லஞ்சத்திற்கு விசுவாசமாக வேலை செய்துள்ளார்.

இந்த மோசடி முறைகேடுகளுக்கு நேர்மையான சங்க ஊழியர்கள் இரண்டு பேர் தடையாயுள்ளனர். திமுக கைக்கூலிகளாக உள்ள மூன்று பேரும், நாகராஜனும் சேர்ந்து, இவர்களை சங்கத்தை விட்டு வெளியேற்ற சதி செய்து வருகின்றனர்.

ஏற்கனவே வீட்டுமனை பெற்றவர்களில் சிலர் சட்டத்திற்குப் புறம்பாக ரூ. 2.50 பத்திரத்தில் இடத்தை விற்றுவிட்டனர். தற்போது தான் சங்கத்திலிருந்து வீட்டுமனைப் பத்திரம் தருகிறார்கள். தற்போது மோசடி நாகராஜனும், ஏற்கனவே விற்றவர்களும், கூடுதலாகப் பணம் கொடுத்தால்தான், தற்போதுள்ள உரிமையாளர் பெயருக்கு பத்திரம் மாற்றித் தருவோம் என மேலும் சட்டவிரோதச் செயலில் இறங்கியுள்ளனர்.

இந்த மோசடிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும், ஊழல் மோசடிப் பேர்வழி ஈ.நாகராஜனை நிரந்தரப் பணி நீக்கம் செய்யக்கோரியும், எம்எல்ஏ சுடலை முத்துவை பதவி ரத்து செய்யக்கோரியும், போடி வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி துண்டுப் பிரசுரங்களை வினியோகித்து, இந்த ஊழல் மோசடிப் பேர்வழிகளைத் தண்டிக்க மக்களை அணி திரட்டி வருகிறது.

- விவசாயிகள் விடுதலை முன்னணி,
போடி வட்டம்.

# இந்து முன்னணியின் ஏவல் நாயாக திருச்சி நகர போலீசு

மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஜாபுவா மாவட்டத்தில் பழங்குடி மக்கள் வாழும் நவபரா என்னும் சிற்றூரில் நான்கு கிறித்துவ பாதிரிப் பெண்கள் வெறிபிடித்த கும்பலால் தாக்கப்பட்டு, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

பா.ஜ.க.வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் விசுவ இந்து பரிசத்தின் தலைவருமான பி.எல்.சர்மா சந்தோசப்பட்டு, 'நடந்த சம்பவம் இந்துக்களைக் கிறிஸ்த்தவர்களாக்கும் முயற்சிக்குக் கிடைத்த பின்விளைவு. இது தேச விரோத அமைப்புகளுக்கு (கிறிஸ்தவர்களுக்கு) எதிராக இந்து இளைஞர்கள் கொண்ட சீற்றத்தின் வெளிப்பாடு. கிறித்தவ நிறுவனங்கள் மூட்டை கட்டிக் கொண்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டும்' எனத் துள்ளிக் குதிக்கிறார்.

சமீபத்தில் திருச்சியில் கிறித்தவப் பாதிரிப் பெண்கள் மீதான பாலியல் வன்முறையைக் கண்டித்து கிறித்தவ அமைப்புகள் உண்ணாவிரதம், பேரணி, பொதுக்கூட்டம் நடத்தின. இந்து முன்னணியோ, 'கிறித்தவக் கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்பட்டதாகக் கண்ணீர்விடும் செயலாளரே, உன் மீதுள்ள பாலியல் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்கிறாய்?' என எதிர்த்து சுவரொட்டி ஒட்டியது.

ம.க.இ.க., பு.மா.இ.மு., போன்ற புரட்சிகர அமைப்புகள் 'கற்பழிப்பை நியாயப்படுத்தும் இந்து மதவெறி காட்டுமிராண்டிகளை முறியடிப்போம், கிறித்தவக் கன்னியாஸ்திரிகளைக் கற்பழித்த இந்துவெறியர்களைத் தூக்கில் போடு' என்பது போன்ற முழக்கங்களுடன் திருச்சி நகர் முழுக்க சுவரொட்டிகள் ஒட்டின. இவை மக்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்றன.

• தீபாவளியை முன்னிட்டு, 'இந்துக்களே, இந்துக் கடைகளில் பொருள் வாங்குங்கள்' என்று இந்து முன்னணி வேனில் ஒலிபெருக்கி கட்டி, பேசி, பிரசுரம் வினியோகித்தது. பேருந்திலும் பிரசுரங்களை ஒட்டியது. மேலும் பெரியாரை இழிவுபடுத்தி, முஸ்லிம்களை அடித்து விரட்டுவோம் என வெறியூட்டியது.

இந்து மதவெறியர்களின் மோசடிகளை முறியடிக்கும் விதமாக,

"இந்து முன்னணி யாருக்காக?

இந்து முதலாளிக்கா? இந்து தொழிலாளிக்கா? இந்து முதலாளிகளின் நலனுக்காக இந்துக் கடைகளில் பொருள் வாங்கச் சொல்லும் இந்து முன்னணியே டால்மியா, பஜாஜ், டிவிஎஸ்... முதலாளிகளை இந்துக்களுக்கு மட்டும் பொருள்களை விற்கச் சொல்லுவாயா?"

என்ற முழக்கங்கள் வடித்து, நான்கு சுவரொட்டிகளை இணைத்த மிகப்பெரிய சுவரொட்டிகள் தயாரித்து ம.க.இ.க., பு.மா.இ.மு. அமைப்புகள் நகரெங்கும் ஒட்டின.

மகஇக - புமாஇமுவின் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாத பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகள் போலீசை ஏவி, சுவரொட்டிகளைக் கிழித்துள்ளனர். அதே நேரம் உழைக்கும் மக்களை மதரீதியாகப் பிளவுபடுத்தும் இந்து முன்னணியினரின் சுவரொட்டிகள் பாதுகாப்பாக உள்ளன. அனுமதியின்றி சுவரொட்டி, சுவரெழுத்து செய்யக்கூடாது என்ற சட்டமியற்றி, ஜனநாயக உரிமையை புரட்சிகர அமைப்புகளுக்கு மட்டும் மறுத்து, பார்ப்பன மதவெறி அமைப்புகளை அரசே ஊட்டி வளர்க்கின்றது.

ம.க.இ.க. - பு.மா.இ.மு.,
திருச்சி.

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 13

இதழ்: 24

&

தொகுதி: 14

இதழ்: 1

1 நவ.'98 - 30 நவ.'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# தமிழக 'அமைதி'க்கு தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளைப் பலியிடுவதா?

இராமநாதபுரம் சாதியக் கலவரங்களைத் தொடர்ந்து, அண்மையில் நடந்த சர்வ கட்சி ஆலோசனைக் கூட்டத்தில், சாதியக் கலவரம் - வன்முறைகளைத் தடுப்பது என்ற பெயரில், எஞ்சியுள்ள ஜனநாயக உரிமைகளையும் பறித்து, சாதிய அடக்குமுறைக் கட்டுமானத்தைப் பாதுகாக்கும் நரித்தனமான சதிச்செயல் அரங்கேறியுள்ளது.

வன்முறையைத் தூண்டும் சாதிய அமைப்புகள் மீது நடவடிக்கை, வன்முறையைத் தூண்டும் சாதிய ஊர்வலங்களுக்குத் தடை, சாதிய வன்முறைக் கலவரத்தைத் தூண்டும் சுவரொட்டி - சுவரெழுத்துப் பிரச்சாரத்துக்குத் தடை, அரசு அனுமதி பெற்ற பிறகே சாதியத் தலைவர்களின் சிலைகளை வைக்கவும், சிலை வைத்தவர்களே அவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்கவும் ஏற்பாடு, ஓய்வு பெற்ற அரசு உயர் அதிகாரிகள் சாதிய சங்கங்களில் பங்கேற்பதைத் தடுக்க வழிவகை செய்தல், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், ஒவ்வொரு கிராமத்திலும் சாதி - மத நல்லிணக்கச் சமாதானக் குழுக்களை நிறுவுதல் முதலான 9 அம்சத் தீர்மானத்தை, கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியைத் தவிர, கூட்டத்தில் பங்கேற்ற ஆகப் பெரும்பான்மையான கட்சிகள் ஏகமனதாக நிறைவேற்றி யுள்ளன. இதனைத் தீவிரமாகச் செயல்படுத்தப் போவதாகக் கூறிக் கொண்டு, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்துக்கு ஒரு கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்கியுள்ள தி.மு.க. அரசு, சுவரெழுத்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட புதிய தமிழகம் கட்சியினரை ஆங்காங்கே கைது செய்து குரூரத்தனத்தைக் காட்டி வருகிறது.

ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சுதந்திரப் போராட்டத் தளபதியான வீரன் சுந்தரலிங்கனார் பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டபோது, தென் மாவட்டங்களில் மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோர் மீது வன்முறைக் கலவரங்கள் - கொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். அதைத் தொடர்ந்து நடந்த சர்வகட்சி கூட்டத்தில், 'சாதிய - சமுதாய - அரசியல் தலைவர்கள்' பெயரிலான அனைத்து மாவட்ட, போக்குவரத்துக் கழகப் பெயர்களும் அடியோடு நீக்கப்பட்டு, சமத்துவ - சமாதான நாடகம் நடத்தப்பட்டது. இப்போது அதே வழியில், புதிய தமிழகம் கட்சியினர் நடத்திய மாநாடு - பேரணிக்குப் போட்டியாக தேவர் சாதி வெறியர்கள் நடத்திய வன்முறை - கலவர மாநாடு - பேரணியைத் தொடர்ந்து, அனைத்துச் சாதிய அமைப்புகளின் பேரணி, சுவரெழுத்துப் பிரச்சாரத்துக்கும் தடைகள், கட்டுப்பாடுகள் போடப்பட்டு, சமாதான - நல்லிணக்க நாடகம் நடத்தப்படுகிறது.

''எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை; தாழ்த்தப்பட்டவன் இரு கண்களையும் இழந்து குருடாக வேண்டும்'' என்பதே ஆதிக்க சாதிவெறி சங்கங்களின் நயவஞ்சக நோக்கமாக உள்ளது. மாவட்டங்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆதிக்க சாதியத் தலைவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டாலும் பரவாயில்லை; ஆனால், தாழ்த்தப்பட்டோரின் தலைவரின் பெயரால் அவை ஒருபோதும் அமையக் கூடாது என்கிற மேல்சாதி வெறியர்களின் வக்கிரமான, வஞ்சக நோக்கத்தையே அன்று சர்வகட்சிக் கூட்டம் செயல்படுத்தியது. இப்போதும் அதே உத்தியோடுதான், தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளைப் பறித்து, சாதிய அடக்குமுறைக் கட்டுமானத்தைப் பாதுகாக்கக் கிளம்பியுள்ளது.

வன்முறையைத் தூண்டக் கூடிய சாதிய அமைப்புகள் - பேரணிகளுக்குத் தடை என்றால், எந்த சாதிய அமைப்பு வன்முறையைத் தூண்டக் கூடியது என்று முடிவு செய்வது எப்படி? அதில் பாரபட்சம் இருக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது? வன்முறை ஏற்படும் என்பதால் இராமநாதபுரத்தில் தேவர் சாதிவெறியர்களின் ஊர்வலத்துக்கு முதலில் அனுமதி மறுக்கப்பட்ட போதிலும், அந்த முடிவைச் செயல்படுத்த முடியவில்லை என்பதுதானே நடந்தது. உண்மையில், தாழ்த்தப்பட்ட சாதியினர் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக, தமது ஜனநாயக உரிமைக்கான பேரணி நடத்தினால், அது வன்முறையைத் தூண்டக் கூடியது என்று தடைவிதிப்பதற்கான ஏற்பாடுதான் இது!

தாழ்த்தப்பட்டோருக்குப் பாதுகாப்பில்லை எனும்போது, அவர்கள் நிறுவும் தலைவர்களின் சிலைகளை, அவர்களே பாதுகாத்துக் கொள்ளச் சொல்வது வக்கிரமான கட்டுப்பாடே அன்றி வேறென்ன? பொதுச் சுவற்றில் பிரச்சாரம் செய்ய விதிக்கப்பட்டிருக்கும் தடையால், ஆதிக்க சாதி சங்கங்களுக்கு பாதிப்பேதுமில்லை; ஏனெனில், தமக்குச் சொந்தமான வீடு - கட்டிடங்களில் அவர்கள் 'சாதிப் பெருமையை' எழுதிப் பிரச்சாரம் செய்து கொள்வார்கள் செய்யவும், அதே சமயம் சொந்தமாக வீடு - கட்டிடங்கள் இல்லாத ஒடுக்கப்பட்ட சாதியினரும், புரட்சிகர - ஜனநாயக அமைப்புகளும் பொதுச் சுவற்றில் பிரச்சாரம் செய்வதைத் தடுப்பதுதான் இத்தடையின் நோக்கம்! இது, உழைக்கும் மக்களின் உரிமையைப் பறிக்கும் செயலே அன்றி வேறென்ன?


சாதிய அமைப்புகளில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பங்கேற்பதைத் தடுக்க வழிவகை செய்வது என்ற பெயரில், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி தீண்டாமையை ஆதரிக்கும், தேவர் சாதிவெறி சங்கத்தில் பங்கேற்கும் மலைச்சாமிக்கும்

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

www.padippakam.com

# கடைச்சரக்கான கல்வி காவிமயமாகும் அபாயம்

**பா.ஜ.க., தனது இந்துமதவெறி பாசிச நோக்கங்களுக்காக, கல்வித் திட்டத்தில் கொண்டு வர முயலும் மாற்றங்கள், ஏற்கனவே இருந்து வரும் மெக்காலே கல்வித் திட்டத்தின் மக்கள் விரோதத் தன்மையை மேலும் ஆழப்படுத்துவதாகத்தான் முடியும்!**



அரசு அதிகாரத்தின் மூலம், தனது இந்துத்துவ நோக்கங்களுக்கு ஏற்ப இந்தியக் கல்வி முறையை மாற்றியமைப்பதற்கு, இந்துமத வெறியர்கள் செய்துவரும் சதிகள் அனைத்தும் நாடெங்கிலும் அம்பலப்பட்டுப் போய்விட்டன. தில்லியில் நடந்த மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகளான அகாலிதளம், தெலுங்கு தேசம் உள்ளிட்டு, பிற எதிர்க் கட்சிகள் காட்டிய எதிர்ப்பு; கல்வியாளர்கள், முற்போக்கு - சனநாயக சக்திகள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பு - இவை காரணமாக, இந்து மதவெறியர்கள், கல்வியைப் பார்ப்பன - இந்து மதமயமாக்கும் தங்களது முயற்சியில் தற்காலிகமாகப் பின் வாங்கியுள்ளனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளால் புகுத்தப்பட்டு, இன்று வரை நடைமுறையில் இருந்துவரும் இந்தியக் கல்வி முறையும்கூட, முழுமையாக விஞ்ஞானப் பூர்வமானதோ, முழுமையாக சனநாயகப் பூர்வமானதோ அன்று; இந்து மத மூட நம்பிக்கைளும், பெண்ணடிமைத்தனம் போன்ற ஆணாதிக்கக் கருத்துக்களும் நிறைந்தது தான்; ஆங்கில மோகம், ஏகாதிபத்திய அடிமைத்தனம் போன்ற மக்கள் விரோத, நாட்டு நலனுக்கு எதிரான சிந்தனைகளை மாணவர்களிடம் விதைக்கக் கூடியதுதான். இப்படி அரைகுறையாகக் கிடக்கும் இந்தியக் கல்வி முறையை, முழுமையாகப் பிற்போக்குத்தனம் நிறைந்ததாகவும், முழுமையாக மக்கள் விரோத அடிப்படைகளைக் கொண்டதாகவும் மாற்றியமைப்பதுதான், இந்துமதவெறியர்களின் நோக்கம்.

இதற்காகவே, இந்துமதவெறியர்கள் கடந்த ஆகஸ்டு மாதம் ஆர்.எஸ்.எஸ். சார்பான கல்வியாளர்கள், இராமகிருஷ்ணா மடம், சின்மயா மடம் போன்ற மடத் தலைவர்களைக் கூட்டி, கல்வி மாநாடொன்றை நடத்தி, இந்தியக் கல்வி முறையை இந்துமதமயமாக்கும் திட்டமொன்றை தயாரித்தனர்; இந்தியக் கல்வியை, ''இந்திய மயப்படுத்துவது, தேசிய மயப்படுத்துவது, ஆன்மீக மயப்படுத்துவது'' என்ற பெயரில், அத் திட்டத்தை நாடெங்கும் சுற்றுக்கும் விட்டனர். தில்லியில் நடந்த கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், இத் திட்டத்தை அதிகாரபூர்வமற்ற முறையில் விவாதிக்கவும் முயற்சி செய்தனர்.

✱ நமது நாட்டின் உச்சநீதி மன்றம், ''இந்துத்துவா என்பது மதமல்ல; அது ஒரு வாழ்க்கை முறை'' என வரையறுத்துள்ளது. எனவே, இந்தியாவின் விலை மதிப்பற்ற மரபுச் செல்வங்களான வேதங்களையும், உபநிடதங்களையும், ஆரம்பக் கல்வி தொடங்கி உயர் கல்வி வரையிலும், தொழிற் சார்ந்த பயிற்சிக் கல்வியிலும் பாடமாக வைக்க வேண்டும்.

✱ மூன்றாம் வகுப்பு தொடங்கி பத்தாம் வகுப்பு முடிய சமஸ்கிருதத்தை கட்டாய மொழிப் பாடமாக்க வேண்டும். ஏனென்றால், சமஸ்கிருதம் இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும், தேசத்தின் கலாச்சார ஐக்கியத்திற்கும், பழமையான அறிவுச் செல்வத்திற்கும் ஆதாரமாக உள்ளது.

✱ இந்தியாவின் நான்கு திசைகளிலும் சமஸ்கிருதப் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும்.

✱ பாடத் திட்டத்தில், இந்தியக் கலாச்சாரம் குறிப்பிட்ட அளவிற்கு புகுத்தப்பட வேண்டும்.

✱ ஆரம்பக் கல்வி முடிந்த பிறகு, மாணவிகளுக்கு வீட்டை நிர்வகிப்பது குறித்துப் போதிக்க வேண்டும்.

— இவையெல்லாம் இந்தியக் கல்வி முறையை மாற்றியமைக்க, பா.ஜ.க. அரசு வகுத்துள்ள வழிமுறைகள். இந்தியாவின் செல்வ உற்பத்தி, கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாற்றை உருவாக்கியதில் இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களின், அவர்களது மொழிகளின் வரலாற்றுப் பாத்திரத்தையெல்லாம் இருட்டடிப்பு செய்து விட்டு, பல்வேறு மதங்களின் பங்கையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு, இந்தியாவெங்கும் வருண - சாதி ஒடுக்குமுறையை நிறுவனமாக்கிய, சூத்திர - தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெரும்பாலான உழைக்கும் மக்கள் கல்வியறிவு பெறுவதை மறுக்கும் ஆரிய பார்ப்பனர்களின் வேதங்களையும், உபநிடதங்களையும், சமஸ்கிருதத்தையும் பயிலச் சொல்வது நாட்டை மீண்டும் அந்த இருண்ட காலத்திற்குள் தள்ளிவிடும் முயற்சிதானே? இதுவா இந்திய மயமாக்கம்? இல்லை, இது பார்ப்பனமயமாக்கம்!

விஞ்ஞானத்திற்குப் பக்கத்தில், பார்ப்பன புளுகு மூட்டைகளையும், மூட நம்பிக்கைகளையும் பயில்வது எத்தகைய மூடத்தனம் என்று சிந்தித்துப் பாருங்கள்? சமத்துவம், சம உரிமைக்காக இந்தியாவெங்கும் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கும் பொழுது, சாதிய ஒடுக்குமுறை சரியானதுதான் எனக் கூறும் பார்ப்பனர்களின் வேதங்களைப் படிப்பது அருவெறுக்கத் தக்கதாகாதா? ''சமஸ்கிருதம்தான் தேவ பாஷை; பிற மொழிகளெல்லாம் நீச பாஷை'' என்ற பார்ப்பனர்களின் ஆதிக்கத் திமிரை, இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கையைக் கட்டிக் கொண்டு படிப்பதற்கு, நாமென்ன சூடு - சொரணை அற்றவர்களா? தாய்மொழிப் பற்று இல்லாதவர்களா?


கல்வி, மாநிலங்களுக்கும் உரிமையுள்ள பொதுப்பட்டியலில் இருப்பதால் தான், இந்துமதவெறியர்களால், அவர்களின் திட்டப்படி, இந்தியாவெங்குமே கல்விக் கொள்கையில், பாடத் திட்டங்களில் ஒரே மாதிரியான மாற்றங்களைக் கொண்டு வர முடியவில்லை. ஆனாலும், கல்வி பொதுப் பட்டியலில் இருக்கும் வாய்ப்பையே பயன்படுத்திக் கொண்டு, இந்து மதவெறியர்கள் தாங்கள் ஆளும் மாநிலங்களில், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, அம்மாநில பாடத் திட்டங்களில் இந்துமத ஆதிக்கக் கருத்துக்களைப் புகுத்தவும் தவறுவதில்லை.

1991-ஆம் ஆண்டில், உ.பி. மாநிலத்தின் ஆட்சியதிகாரத்தை இந்துமதவெறியர்கள் முதன் முறையாகப் பிடித்தபொழுதே, அம்மாநிலக் கல்விக் கூடங்களைப் பார்ப்பன மயமாக்குவதற்கு பிள்ளையார் சுழி போட்டுவிட்டனர். பாபர் மசூதியை இடிப்பதற்காக, இந்துமதவெறியர்கள் நடத்திய ராம ஜென்ம பூமி இயக்கத்தின் பொழுது, உ.பி. போலீசு நடத்திய தாக்குதலில் இறந்து போனதாக இரண்டு கர சேவகர்கள் படத்தைப் போட்டு, 'தேசிய' நாயகன் இராமனுக்காக உயிரைக் கொடுத்த இவர்கள்தான் தேச பக்தர்கள் எனப் பள்ளிப் பாடங்களின் மூலம், முசுலீம் எதிர்ப்புதான் தேசபக்தி என்ற விஷத்தை மாணவர்கள் மனத்தில் விதைத்தார், கல்யாண்சிங்.

கணிதப் பாடத்தில் வேதக் கணக்குகளைப் புகுத்திய கல்



www.padippakam.com



யாண் சிங், இந்த முறை மூன்றாம் வகுப்பு தொடங்கி சமஸ்கிருத மொழியைக் கட்டாயப் பாடமாக்கி யுள்ளார். வகுப்பறையில், ''உள்ளேன் ஐயா'' எனக் கூறுவதற்குப் பதிலாக, ''வந்தே மாதரம்'' எனக் கூற வேண்டும்; ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் சரசுவதி வாழ்த்துப்பா பாட வேண்டும். மதிய உணவுக்கு முன் போஜன மந்திரங்களைக் கூற வேண்டும் என இந்தப் பட்டியல் அனுமார் வால் போல் நீண்டு கொண்டே போகிறது.

இராசஸ்தானிலோ, இன்னும் ஒரு படி மேலே போய், வெளிப்படையாகவே இந்துமதவெறியை மாணவர்களின் மனத்தில் விதைப்பதற்காக, ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் எழுதிய கட்டுரைகளையும், கவிதைகளையும் பாடங்களாகப் புகுத்தியுள்ளனர்.

✤ ஒன்பதாம் வகுப்பிற்கான இந்தி மொழி பாடத் திட்டத்தில், ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராஜேந்திர சிங், ''பழைமை வாய்ந்த இந்திய விஞ்ஞானம் - இந்திய விஞ்ஞானி''களைப் பற்றியும், ஆர்.எஸ்.எஸ்.இன் துணைத் தலைவர் கே.சி. சுதர்சன், ''மரபு சார்ந்த இந்திய அறிவு'' பற்றியும் எழுதியுள்ளனர்.

✤ பதினோராம் வகுப்பிற்கான ''அரசியல் சிந்தனை'' பாடத் திட்டத்தில், பா.ஜ.க.வின் முன்னாள் அவதாரமான ஜன சங்கத்தைத் தோற்றுவித்த தீன் தயாள் உபாத்யாய் எழுதிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

✤ ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் ஏடான பஞ்சஜன்யா ஆசிரியர் தருண் விஜய், சுதேசி ஜாக்ரான் மஞ்ச்-ஐச் சேர்ந்த ஜலம் சிங் ராலட் எழுதிய கட்டுரைகள், ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த கஜேந்திர சிங் சோலங்கி எழுதிய கவிதை - இவையனைத்தும் இராசஸ்தான் மாநில பள்ளி பாடப் புத்தகங்களில் புகுத்தப்பட்டுள்ளன.

✤ பன்னிரெண்டாம் வகுப்பிற்கான பாட நூலில், ராஜபுதன சாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்களை, ஜாட் சாதியைச் சேர்ந்த விவசாயிகள் எதிர்த்துப் போராடியதைக் கூறும் பாடம், பா.ஜ.க.வின் இந்து ஒற்றுமை மோசடித்தனத்தை அம்பலப்படுத்துவதால், அப்பாடத்தை நீக்கி விட்டனர்.

✤ இராசஸ்தான் மாநிலப் பள்ளிக் கல்வி குழுமத்தின் தலைவர் ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த கோமேஷ்வர் தயாள் மாதூர்; அம்மாநிலப் பல்கலைக் கழகங்களுக்கான பாடத் திட்டங்களை வகுக்கும் அரசு அமைப்பின் தலைவராக இருக்கும் மதுகர் ஷியாம் சதுர்வேதி ஆர்.எஸ்.எஸ்.-க்கு மிகவும் நெருக்கமானவர்.

✤ தில்லி யூனியன் பிரதேச நிர்வாகத்தின் கீழ் வரும் கல்லூரிகளில் ஆர்.எஸ்.எஸ்.-க்கு நெருக்கமான 200 பேர் விரிவுரையாளர்களாகவும் 7 பேர் கல்லூரி முதல்வர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், தில்லியிலுள்ள சிவாஜி கல்லூரி, மோதிலால் நேரு கல்லூரி, தீன்தயாள் உபாத்யாய் கல்லூரி, சத்யவதி ஆண் - பெண் கல்லூரி உள்ளிட்ட எட்டு கல்லூரிகளில் பா.ஜ.க. சார்பு முதல்வர்களை நியமிக்கவும் பா.ஜ.க. அரசு முயன்று கொண்டுள்ளது.

கல்வித் துறையில் மட்டுமல்லாது, இந்திய வரலாற்று ஆராய்ச்சி மையம், லலித் கலா அகாடமி, நவீன ஓவிய தேசியக் கூடம், கலாச்சார உறவுகளுக்கான இந்திய மையம் போன்றவற்றிலும் ஆர்.எஸ்.எஸ். ஐச் சேர்ந்த இந்துமதவெறியர்கள், சட்டம் - மரபுகளை மீறி, தலைவர்களாக உறுப்பினர்களாக பா.ஜ.க. அரசால் நியமிக்கப்படுகின்றனர். இந்துமதவெறி பாசிஸ்டுகளின் இந்த ஊடுருவலை எதிர்த்தால், ''காங்கிரசு கட்சி இதுபோல் செய்யவில்லையா? கம்யூனிஸ்டு அனுதாபிகள் அரசுப் பதவிகளில் உட்காரவில்லையா? அது போல்தான் எங்கள் கட்சிக்காரர்களை நியமிக்கிறோம்'' என நியாயப்படுத்தி விடுகின்றனர்.

இவை போன்ற அரசுப் பதவிகளில் உட்காரும் இந்துமதவெறியர்கள், மற்ற கட்சிக்காரர்களைப் போல, இப்பதவிகளின் மூலம் கிடைக்கும் வசதி - வாய்ப்புகளைப் பொறுக்கித் தின்று விடுவதோடு மட்டும் நின்றுவிடமாட்டார்கள்.

''புகழ்மிக்க பண்டைய பாரதத்தின் நாகரீகம் பண்பாட்டின் பிதா மகன்கள் ஆரியர்கள் - பார்ப்பனர்கள்; ஓங்கி வளர்ந்திருந்த பாரதம், மதவெறி பிடித்த கொலைகாரர்களான இசுலாமியர்களின் ஆக்கிரமிப்பினால் வீழ்ச்சியைச் சந்தித்தது; இந்திய தேசத்துக்கு எதிரிகள் ஏகாதிபத்திய காலனியவாதிகள் அல்ல; முசுலீம்கள்தான்'' எனக் கல்வி தொடங்கி வரலாறு முடிய அனைத்தையும், தங்களின் இந்து ராஷ்டிரக் கனவிற்காகத் திரித்து எழுதுவார்கள்.

இப்படிப்பட்ட அடிப்படைகளைக் கொண்ட கல்வியைக் கற்று வரும் ஓர் இந்து மாணவன், இந்த நாட்டின் முசுலீம் மக்களைப் பற்றி என்ன நினைப்பான்? அண்டை நாடான பாகிஸ்தானைப் பற்றி என்ன கருதுவான்? அவன் எந்தக் கட்சியினுடைய ஓட்டு வங்கியாக இருப்பான்?

கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், எதிர்க் கட்சிகள் காட்டிய சடங்குத்தனமான எதிர்ப்பையடுத்து, பா.ஜ.க. பின் வாங்கிக் கொண்டதை நாம் முழு வெற்றியாகக் கருது முடியாது. பா.ஜ.க., தனது இந்துத்துவக் கல்வித் திட்டத்தை நாடு முழுவதும் திணிப்பதற்கு மீண்டும் முயலும் என்பது ஒருபுறமிருக்க, கல்வியைத் தனியார்மயமாக்கியிருப்பதன் மூலம் புற்றீசல் போல் முளைத்திருக்கும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள், மற்றும் மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கேந்திரியா வித்யாலயாக்கள் மாநிலக் கல்வி - பாடத் திட்டத்தைப் பின்பற்றுவதில்லை. மாறாக, இவையனைத்துமே மைய பாடத் திட்டத்தை (CBSE) தான் பின்பற்றுகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பா.ஜ.க., தான் ஆளாத மாநிலங்களில் கூட, புறக்கடை வழியாக இந்துத்துவக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வரலாம். மாநிலங்களுக்கும் உரிமையுள்ள பொதுப் பட்டியலில் இருந்து, கல்வியை மையப் பட்டியலுக்கு மாற்றிக் கொள்வதன் மூலமும் கூட, இந்துமதவெறியர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முயலலாம்.

மேலும், பா.ஜ.க.வின் இந்துத்துவக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் காங்கிரசு, இடது - வலது போலிகள், தி.மு.க. உள்ளிட்ட அனைத்து எதிர்க் கட்சிகளும், மெக்காலே கல்வித் திட்டத்தைதான் தூக்கிப் பிடிக்கின்றன. சுதந்திரமான, சனநாயகப் பூர்வமான, விஞ்ஞான பூர்வமான கல்வியை விரும்பும் எவரும் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த இரண்டு வகையான மக்கள் விரோத, நாட்டின் நலனுக்கு எதிரான கல்வித் திட்டம் - கொள்கைகளுக்கு மாற்றாக, இந்திய நாட்டின் மாணவர்கள் அனைவரும் தங்கள் தாய்மொழியிலேயே ஆரம்பக் கல்வி தொடங்கி ஆராய்ச்சிக் கல்வி வரை பெறுவதை உத்தரவாதப்படுத்தும், கல்வியுடன் வேலை வாய்ப்பை இணைக்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும், நிலப்பிரபுத்துவ எதிர்ப்பையும் அடிப்படையாகக் கொண்ட புதிய ஜனநாயகக் கல்விக்காகப் போராட முன் வருவதுதான் இப்பிரச்சினைக்குத் தீர்வாகும்.

• செல்வம்



தில்லி கல்வி மாநாட்டில், கல்வியில் இந்துத்துவத்தைப் புகுத்த பா.ஜ.க. எடுத்த முயற்சிகளை எதிர்க்கும் மாநிலக் கல்வி அமைச்சர்கள்



படிப்பகம்

# நாற்காலிக்கு தேசியம் மேடைக்கு திராவிடம்

## -மு.க.வின் இரட்டை முகம்!

அக்டோபர் 20-ஆம் தேதி சென்னையில் இரு கவிதை நூல்களை வெளியிட்டு உரையாற்றிய முதல்வர் கருணாநிதி 'நீங்கள் இராவணனை இழிவுபடுத்துவது என்னை இழிவுப்படுத்துவதாகும்' எனப் பேசினார். "இராவணன் ஒரு திராவிட மன்னன். இராமாயணம் ஆரியர் - திராவிடர் இடையே நடந்த போர் என நேரு தனது நூல் ஒன்றில் கூறியுள்ளார். இராவணன், திராவிட மன்னன் என்பதற்கு நேருவின் இந்தக் கூற்றே சான்றாக உள்ளது.

''இராவணன் வாழ்வில் சில தீய சம்பவங்கள் நடந்து இருக்கலாம். அதற்காக அவனைக் கொடியவன் என சுட்டிக் காட்டுவதை ஏற்க முடியாது. எனவே இனியாவது கவிஞர்கள் இராவணனைக் கொடியவன் எனக் கூறி கவிதை இயற்றாமல் இருக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்'' என முதல்வர் தமது பேச்சினிடையே குறிப்பிட்டார்.

அட, கருணாநிதி புறப்பட்டுவிட்டார், ஆரியக் கூட்டத்தின் கொட்டமடக்க என மகிழ இதில் ஏதுமில்லை. இதே கருணாநிதிதான் அக்டோபர் 1-ஆம் தேதி நடைபெற இருந்த பெரியார் திராவிட கழகத்தின் இராவண லீலாவைத் தடை செய்தது. அதற்கு முதல் நாள் மாலையில் பெரியார் தி.க. நடத்த இருந்த 'தமிழினிப் பண்பாட்டுப் போர் முழக்கம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் - கவியரங்கத்தையும் தடை செய்து, பெரியார் தி.க.வினரைக் கைது செய்து சிறையிலடைத்தது.

1971-இல் சேலத்தில் பெரியார் இராமர் படத்தை செருப்பாலடித்து, 10 அடி உயர இராமர் பொம்மையைத் தீயிட்டுக் கொளுத்திய போது, இதே கருணாநிதிதான் முதல்வர். அன்று பெரியாரின் செயலை ஆதரித்த இவர், இன்று பெரியார் தி.க.வைத் தடுத்து கைது செய்தது எதற்காக?

இந்து முன்னணி இராமகோபலனும், பா.ஜ.க.வினரும் இருக்கிறார்கள் என்று பயந்து நடுங்கித் தான் தடை செய்தார் என்பது மிகையான கூற்று அல்ல. இன்றைக்கு 356 சட்டப்பிரிவு முன் வந்து அவரை அச்சுறுத்திக் கொண்டுள்ளது. ஆட்சியை பொன் போலப் பாதுகாத்து, சிந்தாமல் சிதறாமல் தனது வாரிசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கவலை சதாகாலமும் அரித்துத் தின்கிற போது, இராவண லீலாவை எப்படி அவரால் அனுமதிக்க முடியும்?

கட்சி தொடங்கியவுடன் நாங்கள் தான் உண்மையான கம்யூனிஸ்டுகள் என்று தி.மு.க.வினர் மார்தட்டினார்கள். பகுத்தறிவு, நாத்திகம், தமிழின உணர்வு, மொழி என இவர்கள் எழுதாத பிரச்சினை ஏதுமில்லை. அனைத்துலக அரசியலை அலசினார்கள். ஆட்சிக்கு வந்த பின்போ, அனைத்தையும் மறந்தார்கள். 'பொறுப்பான' பதவி ஏற்ற பின், 'பொறுப்பற்று' இருக்க முடியுமா? என்று எதிர்க் கேள்வி கேட்டார்கள். இருமுறை மத்திய அமைச்சரவையில்.பங்கேற்ற போதுகூட, தில்லியில் நடந்த 'இராமலீலா'வை எதிர்க்காது நாகரிகத்துடன் நடந்து கொண்டவர்களாயிற்றே!

அவ்வளவு ஏன்? ஐ.மு. ஆட்சி கவிழ்வதற்கு முன் தீ மிதி திருவிழாவில் இறங்கிய தி.மு.க. மந்திரியின் செயலைக் கண்டிக்கும்போது, காட்டுமிராண்டித்தனம் என்று சரியாகவே மு.க. சாடினார். இராமகோபாலன்கள் 'பார்! இவர் இந்து விரோதி! இந்துக்களையெல்லாம் காட்டு மிராண்டி என்கிறார்' என எகிறிப் பாய்ந்த பிறகு, அப்படி நான் சொல்லவில்லை என்று பல்டியடித்தவர்தானே!




நந்தவனத்து ஆண்டியாக, ஆட்சி எனும் தோண்டியைப் போட்டுடைத்து விட இவர் தயாராக இல்லை. எனவேதான் ஓட்டு வங்கி போனால் கூட கவலையில்லை, ஆட்சி போகக் கூடாது என்று தானே, ''தடா''வை விடக் கொடிய ''பொடா''வைக் கொண்டு வந்தார். இவர் தான், தான் ''தடா''வை எதிர்த்ததாக மார்தட்டியவர்.

இப்படி ரெட்டை வேடம் போடுவது கருணாநிதிக்கு கைவந்த கலை. கொள்கை கோட்பாடு எல்லாம் எப்போதோ கை கழுவிவிட்ட விசயம். பதவி நாற்காலி மட்டுமே குறி என்றான பிறகு, தாங்கள் கூறியதற்கு மாறாக திராவிட நாடு கோரிக்கையை சுடுகாட்டுக்கு அனுப்பியவர்களாயிற்றே. அதனால்தான் மொழிப் போர் தியாகிகளின் தியாகத்தை ஓட்டுக்களாக அறுவடை செய்து, ஆட்சியைப் பிடித்த பின் அவர்களை முற்றாக மறந்து, மறைத்து விட்டு, தமிழினத் துரோகி பக்தவச்சலத்திற்கு கூச்ச நாச்சமின்றி மணி மண்டபம் கட்டினார்.

ராஜீவின் சாவுக்கான பழி தம் மீதோ, தமது கட்சி மீதோ சுமத்தப் பட்டு பழிவாங்கப்படலாம் என்று நடுநடுங்கிக் கிடந்தாரே தவிர, துன்பத்தில் அவர்களுக்கு துணை நிற்கவில்லை. ராஜீவ் கொலைக்குக் காரணம் என்று 26 பேருக்கு அநியாயமாக தூக்குத் தண்டனை விதித்த போது, உலகம் முழுதும் கண்டனக் குரல் எழுந்தது. இந்தத் 'தமிழினத்' தலைவரோ, அதில் தி.மு.க.வினர் யாரும் இல்லையே என்று அர்ப்பத்தனமாகப் பிதற்றினார்.

இன்று பார்ப்பன பாசிச ஜெயாவை விடக் கொடூரமாக ஈழத் தமிழ் அகதிகள் ஒடுக்கப்படுகின்றனர். திறந்த வெளிச் சிறையும் கால் வயிற்றுக் கஞ்சி என்ற அவலம் மட்டுமல்ல. அவர்கள் பொறுக்கி - கிரிமினல்கள் போல் நடத்தப்பட்டு, வீடியோ படம் எடுத்து, கைரேகை பதியப்படுகிறது.

தமிழிசை வளர வேண்டும் என்று வாய்கிழியப் பேசுகிறார் கரு



படிப்பகம்

www.padippakam.com

ணாநிதி. அந்தத் தமிழிசை தீட்டு எனக் கூறி
இழிபடுத்தப்படுகிறது திருவையாறு தியா
கராத ஆராதனையில். 'தமிழில் பாடு! இல்
லையேல் தமிழகத்தை விட்டு ஓடு!' என
கடந்த ஆண்டு மக்கள் கலை இலக்கியக்
கழகம் இந்த பார்ப்பனத் திமிருக்கு எதிரா
கப் போராடியது. கருணாநிதியோ,
போலீசை ஏவி ம.க.இ.வினரின் மண்டை
யைப் பிளந்து, சிறையிலடைத்தார்.

இவ்வாண்டு திருவையாறு பொதுக்
கூட்டத்தில் பேசிய, ம.க.இ.க. மாநில
இணைச் செயலர் தோழர். காளியப்பன்
'தமிழில் பாட வைப்போம்' என போர்க்கு
ரல் எழுப்பினார். இந்த மொழி உணர்வை
மதிக்க வேண்டிய கருணாநிதியோ
'மொழி, இனவெறி தூண்டியதாக' பொய்
வழக்குப் போட்டு சிறையிலடைத்தார்.

இப்படி சொல்லும் செயலும் வேறாக
உள்ள முதல்வர் கருணாநிதியின் யோக்கி
யதை, காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக
நலனுக்குத் துரோகமிழைத்துள்ளது. இனி
பேச்சு வார்த்தையால் பலனில்லை என்று
கருணாநிதி முடிவாக அறிவித்து விட்டார்.
ஆனால் வாஜ்பாயின் ஆட்சிக் கலைப்பு
அஸ்திரத்துக்கு அடிபணிந்து, தமிழகத்
திற்கு துரோகமிழைத்து, ஒப்பந்தத்தில்
கையெழுத்தும் இட்டுவிட்டார்.

பாரதீய ஜனதாவோ எத்தனை முகம்
காட்டினாலும் அதன் இலக்கு இந்தி - இந்து
- இந்தியாதான். இந்த மதவெறி கும்பலை
நுழைய விட்டால் தமிழகம் அமைதியிழக்
கும் என்றுகூட கருணாநிதி தேர்தலின்
போது முழங்கினார். இன்று, கூட்டு வைக்
கக் கூட தயாராயுள்ளது தி.மு.க. அதற்குத்
தயாராகவே வாஜ்பாயை 'தவறான கட்சி
யில் உள்ள சரியான நபர்' என முன் கூட்
டியே புகழாரம் சூட்டினர். நாங்கள் அவர்க
ளின் நெடுநாள் நண்பர்கள் என பழங்
கணக்கைப் புரட்டுகிறார்கள்.

இப்போது விசயம் என்னவென்றால்
பார்ப்பன மதவெறியர்களை எதிர்த்து முறி
யடிப்பதா? பணிந்து வீழ்வதா? என்பது
தான். ராமகோபாலன் அழைப்புக்கு
இணங்கி, விநாயகர் சதுர்த்தி கொழுக்
கட்டை சாப்பிடுவேன் என்ற கருணாநிதி,
பணிந்து வீழ்கிறார். ஆனால், இவை எல்
லாம் ராஜதந்திரம் என அவர் நியாயப்ப
டுத்தலாம்.

இல்லை! கடைந்தெடுத்த பிழைப்பு
வாதமும் சந்தர்ப்பவாதமும்தான் இது என்
கிறோம். எப்படியாவது ஆட்சிக் கவிழ்ப்
பைத் தவிர்ப்பது என்ற பகீரதப் பிரயத்த
னங்களே அன்றி வேறென்ன? இராவண
னைப் பழிப்பது தன்னைப் பழிப்பது போல
என கருணாநிதி மேடையில் பேசியதுகூட
கைதட்டல் வாங்கத்தானே அன்றி களத்தில்
இறங்கிப் போராட அல்ல. இல்லை என்
றால் பராசக்தியில் பகுத்தறிவுப் பிரச்சாரம்
செய்தவர், 'மஞ்சள்' துண்டுக்கு விஞ்ஞான
விளக்கம் தரவேண்டிய அவலம் நடந்தி
ருக்குமா?

• பூத்து

# டாலருக்காக பஞ்சு ஏற்றுமதி! தமிழகப் பஞ்சாலைகளுக்குச் சாவுமணி!!

நெசவுத் தொழிலில் ஒவ்வோர்
ஆண்டும் நெருக்கடி ஏற்பட்டு, இலட்சக்க
ணக்கான தொழிலாளிகளின் வாழ்வு இரு
ளடைந்து வருகிறது. இதே போல பஞ்சா
லைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி, பூதா
கரமாகி, இன்று மீளமுடியாத சிக்கலை
நோக்கிச் செல்கிறது. இதில் வாழ்வை
இழப்பது தொழிலாளிகள்தான். இந்த
நெருக்கடிகளுக்கு ஆட்சியாளர்கள் நடை
முறைப்படுத்தி வரும் புதிய பொருளாதா
ரக் கொள்கைகள்தான் முழுமுதற் காரணம்.

தமிழகத்தில் மட்டும் 1700 பஞ்சாலை
கள் உள்ளன. 1991-இல் 'இதோ வளங்
கொழிக்கும் இந்தியா உருவாகப் போகிற
து' என காங்கிரசுக் கயவர்கள் ஆரவார
மாக அறிவித்தார்களே, அந்த புதிய பொரு
ளாதாரக் கொள்கைகள்தான் பஞ்சாலைக
ளையும் பாதித்தது. தாராளமயம் - தனி
யார்மயம் - உலகமயம் என நாட்டை மறு
காலனியாக்கும் அதே நாச்காரப் பாதை
யில்தான் பாரதீய ஜனதாவும் செல்கிறது.

எனவே அன்று தொடங்கிய நெருக்க
டிகள் முற்றி, இன்று பஞ்சாலைகளின் மூடு
விழா என்ற கட்டத்தை எட்டியுள்ளது. இப்
போது தமிழகத்தில் 2½ லட்சம் பஞ்சா
லைத் தொழிலாளிகளை வீதியில் விசிறி
எறியும் அவலம் அரங்கேறி வருகிறது.

கோவை, ஈரோடு, சேலம், மதுரை,
திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல், சிவ
கங்கை, விருதுநகர் முதலிய மாவட்டங்க
ளில் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட
நெருக்கடியால் 200-க்கும் மேற்பட்ட பஞ்
சாலைகள் மூடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பஞ்சாலைகளுக்குத்
தேவையான முழு அளவு பருத்தி இங்கு
உற்பத்தி ஆகாமல் பற்றாக்குறை இருப்பி
னும், கூடுதலாக விளையும் பஞ்சாப், குஜ
ராத், மகாராட்டிர மாநிலங்களிலிருந்து
பருத்தியை வாங்கி பஞ்சாலைகள் இயங்கி
வந்தன. உள்நாட்டு பஞ்சாலைத் தொழில்
பற்றி கவலைப்படாத மத்திய அரசோ, எல்
லாம் ஏற்றுமதிக்கே என்ற நாசகாரப் பொரு
ளாதாரக் கொள்கையைத் தொடர்கிறது.
பருத்தியை ஏற்றுமதி செய்வது தொடர்ந்து,
பஞ்சாலையில் நெருக்கடியும்
தோன்றியது.

இந்தியா ஒரே நாடு, ஒரே மக்கள்
என்று மோசடியை அரங்கேற்றி வரும்
பா.ஜ.க. பருத்தி ஏற்றுமதியைத் தடுத்து
நிறுத்தி, தமிழக பஞ்சாலைகளுக்கு உயி
ரூட்டவில்லை. ஆற்று நீரை ஏற்றுமதி
செய்ய வாய்ப்பிருந்தால், காவிரி நீர் நாட
கத்தைக் கூட அரங்கேற்றாமல் அதையும்
ஏற்றுமதி செய்திருப்பார்கள் இந்த தேசத்து
ரோக பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகள்.
இவர்கள் பஞ்சாலை நெருக்கடியைத் தீர்ப்
பார்கள் என்பது மண்குதிரையை நம்பி
ஆற்றில் இறங்கின கதையாக முடியும்.

பஞ்சாலைகளில் உற்பத்தி குறைந்து,
நூற்பாலைகளுக்குப் போதிய பஞ்சு
கிடைக்காமல் நெருக்கடி தோன்றியது.
இந்த நெருக்கடி சங்கிலித் தொடராக கைத்

**பஞ்சு ஏற்றுமதி, பஞ்சாலைத் தொழிலில் மட்டுமல்ல, தொழிலாளர் வாழ்விலும் கோர விளைவுகளை ஏற்படுத்தும்**





படிப்பகம்

தறி, விசைத்தறி, பின்னலாடை, ஆயத்த ஆடை, நூல்-துணி பதப்படுத்துதல், இவற்றோடு தொடர்புடைய இயந்திர உற்பத்தித் தொழில் என அனைத்துத் துறைகளிலும் நெருக்கடிகளை உருவாக்கியது. இவற்றை நம்பி வாழும் பல இலட்சம் தொழிலாளிகளின் வாழ்வு கேள்விக்குறியானது.

'91-ஆம் ஆண்டிலிருந்து அடுத்தடுத்து ஆண்டுதோறும் நெருக்கடி முற்றி வந்ததே தவிர, தீரும் வழியைக் காணோம். ஏற்கனவே தமிழகத்தில், பெருமளவு பருத்தி வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வர வேண்டியிருந்தது. பெட்ரோல், டீசல் விலை ஏற்றம் செய்யப்பட்ட ஒவ்வொரு முறையும் பருத்தி கொண்டு வரும் செலவு அதிகமாகி, பஞ்சு விலை கூடியது. மின்கட்டண உயர்வால் உற்பத்திச் செலவு அதிகமானது. விற்பனை வரி விகிதம் அதிகரித்ததையொட்டி, தொழிலே நசியத் தொடங்கியது. இந்த விலை உயர்வு, நூல் விலையை உயர்த்தி, நெசவுத் துணி விலை உயர்ந்து இதனால் துணி விற்பனை தேங்கியது.

இப்படி ஒரு விசச் சூழலில் பஞ்சாலைகளும், அது தொடர்பான தொழில்களும் நசிந்து விழிபிதுங்கிய நிலையில்தான் ஏற்கனவே தொடர்ந்து நடந்து வந்த கட்டுப்பாடற்ற பருத்தி ஏற்றுமதி, இடியெனத் தாக்கி நிலைகுலைய வைத்தது.

இப்படி தமிழகத்தில் மட்டுமல்ல. இந்தியா முழுவதிலுமே பஞ்சாலைகள், அது தொடர்பான தொழில்கள் நெருக்கடியில் சிக்கி சீரழிகிறது. இந்த நிலையிலும் கூட மத்திய அரசு தனது பொருளாதாரக் கொள்கையை பரிசீலனை செய்யக் கூட தயாராக இல்லை. மாநில அரசுகளோ இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசிடம் வலியுறுத்தி போராடத் தயாராக இல்லை.

> **பஞ்சாலை நெருக்கடி முற்றிய பின்னும், பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்யாத பா.ஜ.க., குண்டு ஏதும் போடாமலேயே இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வை மரணப்படுகுழிக்குள் தள்ளி விட்டது.**

பருத்தி ஏற்றுமதியால் அந்நியச் செலாவணி கிடைக்கிறது என நியாயப்படுத்துகின்றனர். ஒரு வாதத்திற்கு, இது சரி என ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். இதனால் பஞ்சாலை நெருக்கடி, அதைத் தொடர்ந்து உள்ள தொழில்கள் நெருக்கடியாகி, பல இலட்சம் (தமிழகத்தில் மட்டும்) தொழிலாளிகள் வேலையிழந்து, அவர்களின் குடும்பம் பரிதவிக்கிறது. கிடைக்கின்ற அன்னியச் செலாவணியோ, ஒரு சில தரகு முதலாளிகளின் தொழிற்சாலைகளை நவீனப்படுத்தத்தான் கொட்டப்படுகிறது.

மேலும் அவர்களின் ஆடம்பர, உல்லாச, ஊதாரித்தன வாழ்வுக்கான நுகர்பொருள் இறக்குமதிக்கும் பெரும்பகுதி டாலர் செலவிடப்படுகிறது. மறுபுறம் கைத்தறி, பட்டுச்நெசவு, பின்னலாடைத் தொழில்கள் நசிந்து, இந்த உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியால் கிடைக்கும் அன்னியச் செலாவணி குறைய நேரிடுகிறது!

எனவே இப்போது நடக்கும் இந்த அநியாயத்தை எதிர்த்து தொழிலாளிகள் போராட முன்வர வேண்டும். பருத்தி ஏற்றுமதியைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்குக் காரணமான மத்திய அரசின் மக்கள் விரோத புதிய பொருள்தாரக் கொள்கைகளை எதிர்த்து முறியடிக்காத வரை, இந்தப் பிரச்சினை ஓயப்போவதில்லை.

---

**தலையங்கம் தொடர்ச்சி**

தடை; வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்தவும் தீண்டாமையை ஒழிக்கவும் தாழ்த்தப்பட்டோர் சங்கத்தில் பங்கேற்கும் கருப்பனுக்கும் தடை என்றால், அது எந்த வகையில் நியாயமாகும்? இது சாதிய ஒடுக்குமுறைக் கட்டுமானத்தைப் பாதுகாக்கும் நயவஞ்சக சதியே அன்றி வேறென்ன? தனித் தேநீர்க் குவளை வைத்து அவமானப்படுத்தும் சாதி ஆதிக்கத் திமிருக்கு எதிராகப் போராடும் தாழ்த்தப்பட்டோர், புரட்சிகர - ஜனநாயக அமைப்புகள் மீது நடவடிக்கை; சிறட்டை ஊர்வலம் நடத்தி, தீண்டாமையை நிலைநாட்டக் கிளம்பும் சாதிவெறி அமைப்புகள் மீதும் நடவடிக்கை என்றால் அது எந்த வகையில் நியாயமாகும்?

சாதிய அடக்குமுறை ஒழுங்கின் அடிப்படையில், பலவந்தமாகத் திணிக்கப்பட்ட சமாதானம் - அமைதி - நல்லிணக்கம்தான் இவ்வளவு காலமும் நிலவி வந்தது. இந்த அநீதிக்கெதிராக தாழ்த்தப்பட்டோர் விழிப்புறும்போது, மேல் சாதிவெறியர்கள் தமது ஆதிக்கத்தை இழந்து விடாதிருக்கவும், அடிமைகளாக வாழ்ந்தவர்கள் தலை நிமிர்வதா என்ற ஆதிக்க வெறியோடும் வன்முறை கலவரங்கள் - கொலை வெறியாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இது அநீதியான வன்முறை. அதேசமயம், தாழ்த்தப்பட்டோர் மனிதனாக வாழவே சாதி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் தேவையாக உள்ளது. அப்போராட்டத்தில் வன்முறை தவிர்க்கவியலாதது. இது நீதியான வன்முறை. கலவரம், வன்முறை, உயிரிழப்பு, சூறையாடல், நடக்கிறது; சமூக விரோதிகள் இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்காக, நிரந்தரமாக சாதி அடிமைகளாக தாழ்த்தப்பட்டோரை இருத்தி வைப்பது எந்த வகையில் நியாயமாகும்?

இதில் பொதுவில் நின்று கொண்டு 'வன்முறை'யில் ஈடுபடும் இருதரப்பையும் குற்றஞ்சாட்டி, தடைகள், கட்டுப்பாடுகள் விதிப்பதும், சமாதானமாகப் போகுமாறு உபதேசிப்பதும் சாதிய அடக்குமுறை கட்டுமானம் முற்றிலும் நொறுங்கிவிடாமல் பாதுகாக்கும் கீழ்த்தரமான சதிச் செயல்தான். சாதிய அமைப்பும் ஆதிக்கமும் வன்முறையாக நிறுவப்பட்டுள்ள நிலையில், தாழ்த்தப்பட்டோரின் நியாயமான போராட்டங்களை வன்முறையாகச் சித்தரித்துத் தடை விதிப்பதும், உரிமைகளைப் பறிப்பதும் சாதிய அடக்குமுறையைக் கட்டிக் காக்கும் அயோக்கியத்தனமான செயல்தான்.

சாதிய மோதல், வன்முறை, கலவரம் ஆகியவற்றை வெறும் சட்டம் - ஒழுங்கு கண்ணோட்டத்தில் பார்த்து தடைகள், கட்டுப்பாடுகள்; கருப்புச் சட்டங்களைப் போடுவதன் மூலம் சாதிய ஆதிக்கத்தைத் தகர்க்கவோ, ஒடுக்கப்படும் சாதிகளின் உரிமையை நிலைநாட்டவோ ஒருக்காலும் முடியாது. இது அதிகார வர்க்கம் - போலீசு - நீதித்துறை அடங்கிய அரசு எந்திரத்தின் கையில் மேலும் வரம்பற்ற அதிகாரத்தைக் குவித்து, ஒடுக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தவே செய்யும். சாதிய அடக்குமுறையை நிரந்தரமாக்கவே செய்யும்.

எனவே, சாதிய அடக்குமுறையைக் கட்டிக் காக்கும் சமாதான - நல்லிணக்கப் பசப்பல்களை அம்பலப்படுத்தி, ''ஆதிக்க சாதிவெறி சங்கங்களைத் தடை செய்! தாழ்த்தப்பட்டோர் மீது வன்முறை - கலவரங்களில் ஈடுபடும் ஆதிக்க சாதிகளின் இட ஒதுக்கீட்டுச் சலுகையை ரத்து செய்! வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்து! பொதுவில் வன்முறையைக் காரணம் காட்டி தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளைப் பறிக்கும் தடைகள், கட்டுப்பாடுகளை நீக்கு!'' என்று ஒடுக்கப்பட்ட சாதியினரும், புரட்சிகர - ஜனநாயக சக்திகளும் போராடுவதே, சாதிய ஆதிக்கத்தை வீழ்த்துவதற்கான முதற்பணியாக இருக்க முடியும்.

---

## 14-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

*அன்பார்ந்த வாசகத் தோழர்களே,*

*இந்த இதழோடு அரசியல் போராட்டக் களத்தில் உங்களது புதிய ஜனநாயகம் 13 ஆண்டுகள் நிறைவெய்துகிறது. உங்களின் ஊக்கமான ஆதரவும் ஒத்துழைப்பும் இறுதிவரை தொடரும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் 14-ஆம் ஆண்டில் எமது போராட்டப் பயணத்தைத் தொடர்கிறோம்!*

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

## நாகபூஷண் பட்நாயக் மறைவு:

# துரோகிகளின் புரட்சி வேடமும் மறைந்தது

நக்சல்பாரிப் புரட்சிகர இயக்கத்தின் பெயரைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டு இயங்கும் ''இ.பொ.க. (மா.லெ) - லிபரேஷன் குழு'' எனப்படும் அதிநவீன புரட்டல்வாத கும்பல், அதன் மூத்த தலைவர் ஒருவரை இழந்து விட்டது. அக்கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராகச் செயல்பட்ட நாகபூஷண் பட்நாயக் கடந்த அக்டோபர் 9-ந் தேதியன்று தனது 64-வது வயதில் சென்னை தனியார் மருத்துவ மனை ஒன்றில் காலமாகிவிட்டார்.

பின்னாளில் போலி கம்யூனிச — துரோகக் கட்சித் தலைவர்களில் ஒருவராக அவர் சீரழிந்து விட்ட போதிலும், ஆரம்ப ஆண்டுகளில் அவர் புரட்சிகர கம்யூனிசப் பாரம்பரியம், பாட்டாளி வர்க்கப் போர்க்குணத்துடன் நக்சல்பாரிப் புரட்சியாளராகத் திகழ்ந்தார் என்பதை மறுக்க முடியாது.

மாணவராக இருந்த போதே கம்யூனிச இயக்கத்தில் ஈடுபட்ட அவர், கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட போது, வலது சாரி திருத்தல்வாதிகளுக்கு எதிராக 'மார்க்சிஸ்ட்' கட்சியில் இணைந்து செயல்பட்டார். ஆனால் அக்கட்சியும் நவீன திரிபுவாதப் பாதையில் செல்லவே, அதற்கெதிரான சித்தாந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார். வசந்தத்தின் இடி முழக்கமாக எழுந்த நக்சல்பாரி பேரெழுச்சியைத் தொடர்ந்து, ஆந்திராவில் அன்றைய கம்யூனிசப் புரட்சியாளர்களாக விளங்கிய நாகிரெட்டி, கொல்ல வெங்கையா, தேவுலபள்ளி வெங்கடேசுவரராவ், சந்திரபுல்லா ரெட்டி ஆகியோருடன் சேர்ந்து நக்சல்பாரி புரட்சியை ஆதரித்து 'மார்க்சிஸ்ட்' கட்சியின் துரோகத்துக்கு எதிராகப் போராடினார். இப்புரட்சியாளர்கள் இணைந்து 1968 ஏப்ரலில் நடந்த 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பர்துவான் பிளீனத்தில் மாற்று அரசியல் - அமைப்பு அறிக்கையை வைத்த போது, அவர்கள் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் இவர்கள் கம்யூனிசப் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டியை நிறுவி தெலுங்கானா புரட்சியைப் போன்ற எழுச்சியை ஆந்திராவின் சிறீகாகுளம் பகுதியில் கட்டியமைக்கும் நோக்கத்துடன் மலைவாழ் மக்களைத் திரட்டி நிலப்பிரபுக்களுக்கு எதிராக தீரமிக்க பல போராட்டங்களை நடத்தினர். தேஜேஸ்வர ராவ், வெம்படப்பு சத்திய நாராயணா ஆகிய போராளிகளுடன் சேர்ந்து, நிலப்பிரபுக்கள் பதுக்கி வைத்துள்ள உணவு தானியங்களைக் கைப்பற்றி விநியோகித்தல், கடன் பத்திரங்களை எரித்தல் முதலான போர்க்குணமிக்க நடவடிக்கையை நாகபூஷன் பட்நாயக் முன்னின்று வழி நடத்தினார். சிறீகாகுளம் பகுதியை ஒட்டிய ஒரிசாவின் கோரபுட், மல்கான் கிரி வட்டாரத்தில் இப்புரட்சிகர இயக்கம் பற்றிப் பரவியது. ஒரிசாவில் பிறந்து வழக்கறிஞரான நாகபூஷண், இப்பகுதிவாழ் பழங்குடியின மக்களின் அன்புக்குரிய தலைவராக உயர்ந்தார்.

போலீசாரிடமிருந்து பல முறை தப்பிய அவர் விசாகப்பட்டினத்தில் 1969 ஜூலையில் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, அக்டோபரில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் நடத்திய சிறை உடைப்பு நடவடிக்கையின் மூலம் அவர் சிறையிலிருந்து தப்பி தலைமறைவாகி, அன்றைய நக்சல்பாரி கட்சியான இ.பொ.க.(மா.லெ)யின் மத்திய கமிட்டி உறுப்பினரானார். பின்னர் 1970-இல் கல்கத்தாவில் அவர் கைதானார். சிறீகாகுளம் பகுதியில் உள்ள பார்வதிபுரம் மலையில் அரசைக் கவிழ்க்க ஆயுதங்களுடன் சதி செய்ததாகக் கூறப்படும் பார்வதிபுரம் சதி வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனாலும் அரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பி உயிர்ப் பிச்சை கேட்க அவர் மறுத்து விட்டார். மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு தனது உடலை மருத்துவ ஆராய்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மரண சாசனம் எழுதி பகிரங்கமாக வெளியிட்டார். நாடெங்கிலுமுள்ள ஜனநாயக சக்திகளின் கோரிக்கைகளுக்குப் பிறகு அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. 14 ஆண்டுகள் சிறைவாசத்தின் போதும், கைதிகளின் உரிமைக்கான பல போராட்டங்களில் ஈடுபட்டு கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளானார். பலமுறை நோய்வாய்ப்பட்டு குடல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, குற்றுயிரான நிலையில் 1982-இல் அவர் பரோலில் விடுதலை செய்யப்பட்டார். உடல் நிலை சற்று தேறியதும், வினோத் மிஸ்ரா தலைமையிலான அதிநவீன போலி கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

மறைந்த முன்னாள் புரட்சியாளர் - நாகபூஷன் பட்நாயக்



தன்னார்வக் குழுக்களால் சீரணிக்கப்பட்டு தேர்தல் பாதையில் வீழ்ந்து சீரழிந்து விட்ட வினோத் மிஸ்ரா தலைமையிலான லிபரேஷன் குழுவுடன் அவர் சங்கமமாகி விட்ட பிறகு, அவரது தியாக உணர்வு, அர்ப்பணிப்பு மற்றும் அவரது முந்தைய பங்களிப்பு அனைத்தையும் இது துடைத்தொழிப்பதாகி விட்டது. அறிந்தே அவர் கம்யூனிசத் துரோகிகளின் சந்தர்ப்பவாத சாக்கடையில் போய் விழுந்தார். இடது சாரி ஒற்றுமை என்ற பெயரில் 'இடது', வலது போலி கம்யூனிஸ்டுகளுடன் நாற்காலி கூட்டு சேருவதையே அவர் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டார். அதற்காகவே சென்னையில் நடந்த வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டுக்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார்.

கம்யூனிச இயக்க வரலாற்றில் இத்தகைய சீரழிவுகள் விந்தையானதோ, புதிய விஷயமோ அல்ல. ரஷ்யாவில் மார்க்சியத்தை அறிமுகப்படுத்தி, ஆசானாக விளங்கி, பின்னர் திருத்தல்வாதியாகச் சீரழிந்து போன பிளக்கானெவ்-விலிருந்து, நக்சல்பாரி புரட்சியாளராக இருந்து பின்னர் சீரழிந்துவிட்ட நாகபூஷன் பட்நாயக் வரை ஏராளமானோரை அனைத்துலக புரட்சிகர கம்யூனிச இயக்கம் பார்த்துவிட்டது. இவற்றிலிருந்து படிப்பினைகளைப் பெற்று, போலி கம்யூனிச சித்தாந்த சீரழிவுகளுக்கு எதிராக புரட்சிகர கம்யூனிச இயக்கம் எஃகுறுதி பெற்று மேலும் முன்னேறி வருகிறது.

''ஆரம்ப கால நக்சல்பாரி புரட்சியாளர் எமது கட்சியின் தலைமையில் உள்ளார்'' என்று ஒரு புரட்சிகர தோற்றத்தைக் காட்டி, புரட்சிகர அணிகளையும் மக்களையும் லிபரேஷன் குழுவினர் ஏய்ப்பதற்குத் தான் நாகபூஷன் பட்நாயக் பயன்பட்டார். இப்போது, கம்யூனிசத் துரோகிகளான வினோத் மிஸ்ரா தலைமையிலான லிபரேஷன் குழு இதுவரை காட்டி ஏய்த்துவந்த புரட்சிகர தோற்றமும் மறைந்துவிட்டது — நாகபூஷண் பட்நாயக்குடன்!

• பாலன்



படிப்பகம்

www.padippakam.com

## வை.கோ., இராமதாசு:

# பார்ப்பன பாசிச பல்லக்குத் தூக்கிகள்

மத்திய அமைச்சரவை விரிவாக்கம் நான்கு வட மாநிலத் தேர்தலுக்குப் பிறகு தான் என வாஜ்பாய் கூறிவிட்டார். கூட்டணி கட்சிகளின் நிர்ப்பந்தம் மட்டுமல்ல, பாரதீய ஜனதாக் கட்சிக்குள்ளேயும் நடந்த கழுத்தறுப்புகளும் காரணம் என பத்திரிக்கைகளில் நாறியது.

பார்ப்பன பாசிச ஜெயாவோ, வாழப்பாடியின் பெட்ரோலியத் துறையைப் பறித்து, அ.தி.மு.க.விற்குத் தர வேண்டும் என நிர்ப்பந்தித்தார். ம.தி.மு.க.விற்கு முக்கிய பதவி தரக் கூடாது என்றார். இது மட்டுமின்றி, தில்லி தேநீர் விருந்தில் கலந்து கொள்ளச் சொல்லி தமிழக கூட்டணிக் கட்சிகளுக்கு கடைசி நேரத்தில் அழைப்பு அனுப்பினார்.

வழக்கம் போல வாழப்பாடியார் இந்த அவமானங்களைத் துடைத்தெறிந்து விட்டு, தேநீர் விருந்தில் பங்கேற்றார். 'தமிழினத்' தலைவரான ராமதாசோ, ஜெயலலிதா தம்மை புறக்கணிப்பதாக ஆத்திரமானார். ம.தி.மு.க.வும் தேநீர் விருந்தில் பங்கெடுக்கவில்லை.

ஏற்கனவே ம.தி.மு.க. தலைவர் வைகோ, 356 சட்டப் பிரிவைப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைக்கக் கூடாது என்று 'கொள்கை' முழக்கமிட்டு விட்டார். அப்போதெல்லாம் பார்ப்பன ஜெயுடன் சேர்ந்து கொண்ட ராமதாசுக்கு, 'ஜெ'யின் சமீபத்திய போக்கு எரிச்சலூட்டவே, ஆத்திரமாக ஒரு அறிக்கை விட்டார். தமிழின உரிமைக்கல்ல. வன்னியர் வாழப்பாடியின் மந்திரி பதவி மாற்றப் பட்டால், பா.ம.க. அமைச்சரவையிலிருந்து விலகும் என்ற சாதி நல உரிமைக்கு தான்.

உடனே தமிழக கிசுகிசுப் பத்திரிக்கைகள், மத்திய அரசின் ஆயுள் பற்றி எழுதுவதை விட்டு, அ.தி.மு.க. கூட்டணி நீடிக்குமா என்ற புதிய கதைக்குத் தாவி விட்டனர்.

அ.தி.மு.க. கூட்டணி அமைந்த போது, 'ஜெ'யின் பொற்பாதங்கள் தமது கட்சி அலுவலகங்களில் பதிந்ததை நற்பேராக எண்ணி புழகாங்கிதமடைந்தனர் வை.கோ.வும் இராமதாசும். அந்தோ! அக்டோபர் 17-இல் அ.தி.மு.க. கட்சியின் 27-வது பிறந்த நாள் விழாவிற்குக் கூட்டணிக் கட்சிகளுக்கு அழைப்பிதழ் கூட இல்லை.

அ.தி.மு.க. கூட்டணிக்குள் குத்து வெட்டு நடக்காதது ஒன்றுதான் பாக்கி. ஜெயலலிதா மத்திய அரசுக்கான ஆதரவை எந்நேரமும் திரும்பப் பெறலாம் என சமீபத்திய பத்திரிக்கையாளர் பேட்டியிலும் கோடி காட்டினார். வைகோவும் இராமதாசும் மத்தியில் பா.ஜ.க.வுக்கான ஆதரவு உறுதியாகத் தொடரும் என சேர்ந்திசைக்கின்றனர்.

வைகோவும் சரி, இராமதாசும் சரி, தங்களை தமிழினத் தலைவர்களாக பட்டம் சூட்டிக் கொண்டு வலம் வந்தவர்கள். இராமதாசு மார்க்ஸ், பெரியார், அம்பேத்கார் படங்களைத் தமது கட்சி சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்களில் அச்சிட்டுக் கொண்டு ஒட்டுப் பொறுக்கினார். வைகோவோ நவீன திரிபுவாதிகளான சி.பி.எம். கட்சியினருடன் கூட்டணி கண்டு, 'இடது சாரி' சிந்தனை கொண்டவராகக் காட்டிக் கொள்ள முயன்றார்.

இன்று, இவற்றுக்கு நேர்மாறாக இந்துத்துவ பார்ப்பன - பாசிச சக்திகளுடன் கைகோர்த்துத் திரிகிறார்கள். 'அரசியலில் நிரந்தர நண்பர்களோ, பகைவர்களோ கிடையாது' என்று தமது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத, பிழைப்புவாத, ஓட்டுப் பொறுக்கி அரசியலுக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.


தமது கட்சிக்கு தேர்தல் கமிசனிடம் அங்கீகாரம் பெறவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்று முதலில் இவர்கள் நியாயப்படுத்தினார்கள். ஆனால் பா.ஜ.க.வுடன் கூட்டணி கண்டபோது இப்படி ஏதும் காரணம் கூடக் கூறவில்லை.

''அ.தி.மு.க. தவிர பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்ததால் எங்களால் மத்தியில் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது'' என்று பெருமைப்படுகிறார் இராமதாசு. ஆனால் மத்தியில் ஆட்சியில் பங்கேற்று சாதித்தது என்ன? வெறுமனே ஈழ ஆதரவு, காவிரி நீர் உரிமை என வாய்ச் சவடால் அடித்தாலே தமிழினத் தலைவராகலாம் என்றுதான் உள்ளனர்.

ம.தி.மு.க. தலைவர் வைகோவோ, 'நாங்கள் மந்திரி சபையில் பங்கேற்க மாட்டோம்' என ஏதோ கொள்கைக்காக நிற்பவர்கள் போல வேசம் போட்டார். இப்போது, ஒரு எம்.பி.க்காவது மந்திரி பதவி வேண்டும் எனக் கெஞ்சி நிற்கிறார்.

இந்தப் பிழைப்புவாத ஒட்டுண்ணிக் கட்சிகளின் தயவில்தான் இன்று பார்ப்பன மத வெறி பாசிச பாரதீய ஜனதாவின் ஆட்சியே நீடிக்கிறது. ஏதோ பிழைப்புவாத, காரியவாத, சுயநலக் கட்சியான கருணாநிதியின் தி.மு.க. போன்ற கட்சிகளுடன் மாறி மாறி கூட்டு வைப்பதைப் போல இதை சாதாரண

தேர்தலுக்கு முன்பு பார்ப்பன - பாசிச ஜெயாவே சரணம்!






படிப்பகம்

www.padippakam.com

மாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

'அக்கினி அம்புகள்' என்ற கட்டுரைத் தொடர் எழுதிய இராமதாசு அதில் குறிப்பிட்டபடி மக்களின் முதன்மையான எதிரி பாரதீய ஜனதாக் கட்சிதான். இந்த இந்துத்துவ பாசிசக் கட்சியைத்தான் முற்போக்கான மாற்றமடையும் கட்சியாகச் சித்தரித்துப் புகழ்கிறது பாட்டாளி மக்கள் கட்சி. அதன் தலைவர் இராமதாசு ''... எங்களுக்கு அரசியலில் எதிரிகளே கிடையாது!'' என்று கூறுகிறார் இன்று. ஆனாலும் 356 சட்டப்படி தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று விடாப்பிடியாகக் கூறுகிறார். பீகார் ஆட்சியைக் கலைத்தது சரிதான் என்கிறார், 'தமிழர் இன விடுதலை'க்குக் குரல் கொடுத்த 'தமிழினத்' தலைவர்.



**தேர்தலுக்குப் பின்பு பார்ப்பன பாசிச பா.ஜ.க.வே சரணம்!**

மந்திரி பதவி ஏற்ற ஒரு மாதத்திற்குள் பா.ம.க. பொதுச் செயலாளரான தலித் எழில்மலை துக்ளக்கிற்கு அளித்த பேட்டியில், ''பி.ஜே.பி. 'ஹிந்துத்துவா'வில் பிடிவாதமாக இல்லை. .... சமீப கால பா.ஜ.க.வின் நடவடிக்கைகளில் சிறுபான்மையினருக்கு எதிராக என்று எதுவுமில்லை'' என்று புகழ்கிறார்.

வைகோ பா.ஜ.க.வை இந்தியாவின் நாஜிக் கட்சி என்றார். மதவெறியர்கள் என்று சாடினார். இன்று ஊழல்வாதிகள் - கிரிமினல்களின் கூடாரமாக உள்ள பாசிச பா.ஜ.க.வைப் பற்றி 'இன்று வரை பாரதீய ஜனதா அரசு மீது ஒரு ஊழல் குற்றச் சாட்டையும் யாராலும் சொல்ல முடியாது' என அடித்துப் பேசுகிறார்.

ஆனால் இவர்கள் போற்றிப் புகழும் ஜெயலலிதா, பிரதமர் அலுவலகம் மீதே ஊழல் குற்றச்சாட்டு கூறியது பற்றி துரதிருஷ்டவசமானது என மழுப்புகிறார். பார்ப்பன பாசிச ஜெயலலிதா ஊழல் வழக்குகளின் தண்டனையிலிருந்து தப்ப வேண்டுமென்றால் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும். இதை பா.ஜ.க. செய்யாததால் ஆதரவை விலக்குவதாகக் கூறி மிரட்டுகிறார். வைகோ, இராமதாசோ ஆதரவு தொடரும் எனக் கூறி பா.ஜ.க.வின் பாசிசக் கொடூரங்களுக்கு வலு சேர்க்கின்றனர்.

• பஜ்ரங்தள், விசுவ இந்து பரிசத் போன்ற பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகள் சிறுபான்மையினர் மீது நடத்தும் கொலை வெறித் தாக்குதலைக் கண்டிக்காது, மௌனமாயிருந்து ஆதரிக்கின்றனர்.

• ஸ்டெர்லைட் ஆலையால் சுற்றுச் சூழல் பாதிக்கிறது எனப் போராடிய வை.கோ. - இராமதாசு, நாட்டையே நாசமாக்கும் அணுவெடிச் சோதனையை பா.ஜ.க.வின் அதே தேசிய வெறியுடன் வரவேற்கின்றனர்.

• அண்ணா பிறந்தநாள் மாநாட்டில், 'பாகிஸ்தானுக்கு பதிலடி தர, பிரதமருக்கு நாம் உறுதுணையாக இருக்க வேண்டும்' எனப் போர் வெறியூட்டினார் வைகோ.

• மத்தியப் பிரதேச மாநிலத்தில் கிறித்தவ மடப் பெண் துறவிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதை இன்று வரை கண்டிக்கவில்லை, இந்த இரு பிழைப்புவாதத் தலைவர்களுமே.

• இராமர் கோயில் கட்டுமானப் பணிகள் விரைந்து நடப்பதையும், பா.ஜ.க. தலைவர் உட்பட அனைவருமே கோயில் கட்டியே தீருவோம் என்பதை ஒப்புக்குக் கண்டித்து ஒரு அறிக்கை விட்டதோடு நின்று கொண்டனர்.

• கல்வியில் 'இந்துத்துவா'வைத் திணித்து, பார்ப்பன மதவெறி நஞ்சூட்டும் கல்வித் திட்டம் பற்றி எல்லாக் கட்சிகளும் எதிர்த்த பின்பு, ஆற அமர, ஒப்புக்கு ஒரு எதிர்ப்புத் தெரிவித்தனர். தலித் எழில்மலையோ, இது பற்றி அமைச்சரவையில் பேசி இருக்கலாம் என்கிறார்.

— இப்படி பலவழிகளிலும், தெரிந்தே பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகள் ஆட்சியதிகாரத்தில் வலுவாகக் காலூன்ற, வைகோவும், இராமதாசும் துணை நிற்கின்றனர்.

★☆★

'வெளியிலிருந்து வந்த ஆரியப் பார்ப்பனர்கள்தான் தங்களது வஞ்சகத்தாலும் சூழ்ச்சியாலும் தமிழ்நாட்டில் பார்ப்பனியத்தைப் புகுத்தி, தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக் கிறார்கள். தமிழர்கள் ஏமாளிகளாகவும் முட்டாள்களாகவும் இருப்பதால் இதை இன்னும் புரிந்து கொள்ளவில்லை' என்ற ஒரு கருத்தை ஒரு சில 'தமிழினத்' தலைவர்கள் நீண்டகாலமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். பார்ப்பனர்கள் சதி, வஞ்சகம் செய்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பது பாதி உண்மைதான்.

பெரும்பான்மை உழைக்கும் தமிழர்களைச் சுரண்டிக் கொழுத்து வந்த கையளவேயான தமிழ் நிலப்பிரபுக்களும் மன்னர்களும் தங்களது ஆதிக்கச் சுரண்டலை மூடி மறைக்க, பார்ப்பனியம்தான் மிகச் சிறந்த சித்தாந்த ஆயுதம் என்பதை, சரியாக உணர்ந்து கொண்டு ஏற்றுக் கொண்டனர் என்பதுதான் முழு உண்மையாகும்! நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே தமிழரிடையே பார்ப்பனீய ஆதிக்கம் நிலைபெற்ற வரலாற்று உண்மை இது!

இவ்வரலாறு இன்றும் தொடர்கிறதே! வாயில் விரலை விட்டால் கடிக்கத் தெரியாத பச்சிளம் பாலகர்களா வைகோ, இராமதாசு, வாழப்பாடி? இவர்கள் நலனும் பார்ப்பன மதவெறி பாசிச நலனும் ஒன்றுக்கொன்று துணையாய்க் கூட்டணி கட்டிக் கொண்டதன் மர்மம் என்ன? பார்ப்பன ஜெயாவுக்குப் போட்டியாக, பார்ப்பன இந்து மதவெறி பாசிசத்தை தூக்கிப் பிடிப்பது தமிழக நலனுக்கா? எந்த வஞ்சக, சதி வலையை வீசி இந்த 'தன்மானத்' தமிழர்களை, பார்ப்பன பாசிஸ்டுகள் வளைத்துப் பிடித்தார்கள்? தமிழர்களுக்குக் தலையையும் கொடுப்பேன் என ஆவேசமாகப் பேசி, அறிக்கை விடுவது உழைக்கும் தமிழர்களை பார்ப்பனியத்திற்குப் பலியிடும் தமது துரோகத்தை மூடி மறைக்கும் நயவஞ்சகமல்லவா? அரசு சலுகைகள், சன்மானங்களைப் பொறுக்கித் தின்னும் தமது அற்பத் தனத்திற்கு, தமிழின உரிமையை விலை பேசும் கழிசடைகளே இவர்கள் என்பதுதான் உண்மை!

**தமிழர்கள் பார்ப்பனியத்தின் சதி, வஞ்சகம், சூழ்ச்சியைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதைப் போலவே, பார்ப்பன – பாசிசத்திற்குக் காவடி தூக்கும் தமிழக சூத்திரர்களான வை.கோ., இராமதாசின் வஞ்சகத்தையும், துரோகத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். சில தமிழினத் தலைவர்கள் ''பார்ப்பனர்கள் மட்டும்தான் தமிழர்களை ஏய்த்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள்'' எனக் கூறுவது அரைகுறை உண்மையாகும்.**

• கருப்பன்

www.padippakam.com



# கருணாநிதியின் விசாரணை நாடகம்! ஜெயாவின் முதலைக் கண்ணீர்!!



சென்னையில், விருகம்பாக்கம் பகுதியில் வசித்து வந்த சித்ரா என்ற இளம் கர்ப்பிணிப் பெண், 13.10.98 அன்று தனது வீட்டிலேயே தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். தூக்கில் தொங்கிய அவரது உடல் அருகே, ''விசாரணைக்கு அழைத்துச் சென்ற போலீசார் தன்னைக் கற்பழித்து விட்டதால் தான், நான் தற்கொலை செய்து கொள்கிறேன்'' என எழுதப்பட்ட கடிதமொன்று இருந்தது. சித்ராவின் மீது அன்பும், மதிப்பும் வைத்திருந்த அப்பகுதி மக்கள், சித்ராவின் மரணத்திற்கு நீதி கோரி சாலை மறியல் போராட்டத்தில் இறங்கினர்.

சித்ராவை விசாரணைக்கு அழைத்து செல்லவேயில்லை என தடாலடியாக மறுத்த சென்னை மாநகர போலீசு, பொது மக்களின் விடாப்பிடியான போராட்டத்திற்குப் பின், 12.10.98 அன்று நள்ளிரவில் சித்ராவின் கணவர் ரவி, தான் வேலை பார்த்த நிறுவனத்திலேயே திருடி விட்டதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக சித்ராவை விசாரணைக்கு அழைத்துச் சென்றதை ஒப்புக் கொண்டது. நான்கு போலீசாரைத் தற்காலிக பணிநீக்கம் செய்த தமிழக அரசு, சித்ராவின் உடலைப் பிரேதப் பரிசோதனை செய்யுமாறும், சித்ராவின் மரணம் குறித்து ஆர்.டி.ஓ. விசாரணைக்கும் உத்தரவிட்டது.

ஆர்.டி.ஓ. விசாரணையிலும், சித்ராவின் பிரேதப் பரிசோதனையிலும், ''சித்ரா பாலியல் பலாத்காரப்படுத்தப்படவில்லை'' என்று செய்திகள் வெளிவந்துள்ளன. இதைக் காட்டி, தி.மு.க. அரசு, ''போலீசார் தங்கள் கடமையைச் செய்தனர்; சித்ரா, தன் கணவர் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளதால், மானத்திற்குப் பயந்து தற்கொலை செய்து விட்டார்'' எனக் கூறி, இந்தப் பிரச்சினையின் மீது தண்ணீர் தெளித்துவிட முயலுகிறது.

''மாலை ஆறு மணிக்கு மேல் பெண்களை போலீசு நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லக் கூடாது; பெண்களை, பெண் போலீசார்தான் விசாரிக்க வேண்டும்'' - இவையிரண்டுமே, போலீசின் யோக்கியதை சந்தி சிரித்துப் போனதால் வந்த சட்டங்கள். சித்ராவை விசாரணைக்கு அழைத்துச் சென்ற பொழுது, இந்த இரண்டு சட்ட விதிகளையும், சென்னை போலீசு தெரிந்தே மீறியுள்ளது.

இந்த திருட்டு வழக்கைப் பொறுத்தவரை, சித்ரா குற்றவாளியோ, நேரடி சாட்சியோ கிடையாது. ஆனாலும், கிரிமினல் - மாஃபியா கும்பலை திடீர் தாக்குதல் நடத்தி வளைத்துப் பிடிப்பது போல, நான்கு போலீசார் நள்ளிரவு நேரத்தில் சித்ராவின் வீட்டிற்குள் புகுந்து, அவரை விசாரணைக்கு இழுத்துச் சென்றுள்ளனர். ஒருவரை விசாரணைக்கு அழைத்துச் செல்லும் போது என்னென்ன விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற உச்சநீதி மன்றத் தீர்ப்பை சித்ரா விவகாரத்தில், சென்னை போலீசு மயிரளவு கூட மதித்து நடக்கவில்லை.

குடியுரிமைகளுக்கான மக்கள் கழகம், சித்ரா போலீசு நிலையத்தில் மானபங்கப்படுத்தப்பட்டதாகக் குற்றஞ் சுமத்தியுள்ளது. மேலும், சித்ராவின் கணவர் ரவி போலீசாரால் தாக்கப்பட்டு, சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கும் கூட அவரது கால்களுக்கு விலங்கிட்டு, மனித உரிமைகளுக்கு தான் கொடுக்கும் மதிப்பை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டது, சென்னை மாநகரப் போலீசு. சித்ராவின் தற்கொலைக்கு, போலீசின் அச்சுறுத்தலுக்கும், அவமானப்படுத்தலுக்கும் பங்குண்டு என்பதை ஒதுக்கித் தள்ளுவது, போலீசின் அத்துமீறல்களை மறைக்கும் அயோக்கியத்தனமான முயற்சி தான்!

இரண்டு வருடங்களுக்கு முன்பு, கருணாநிதி முதல்வர் பதவியில் அமர்ந்த பொழுது, போலீசுதுறையை, கெட்டுப் போய் கிடக்கும் கல்லீரல் எனச் சாடினார். சிறிது காலம் கழிந்த பின், தனது ஆட்சியில், தமிழகப் போலீசார் திருந்தி நடப்பதாகப் பாராட்டத் தொடங்கினார். கருணாநிதி கூறியபடி கெட்டுப் போன கல்லீரல் குணமாகி விட்டதா என்பதை அதன் நடத்தையை வைத்துத் தானே முடிவு செய்ய முடியும்?

✸ சித்ராவின் தற்கொலை சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்கள் முன்பாக, சென்னையைச் சேர்ந்த பார்வதி என்ற இளம் பெண், தன் உடம்பு முழுவதும் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக் கொண்டு, மாண்டு போனார். தனது பக்கத்து வீட்டுக்காரரின் மதிவண்டி உருளையின் காற்றைப் பிடுங்கி விட்டார் என்ற 'குற்றத்திற்காக', விசாரணை என்ற பெயரில் இப்பெண்ணை போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவமானப்படுத்தியதால்தான், பார்வதி தற்கொலை செய்து கொண்டார். குற்றமாகவே கருத முடியாத அற்ப விவகாரத்தைப் பெரிதுபடுத்தி, ஓர் இளம் பெண்ணைப் பலி கொண்ட தமிழகப் போலீசை 'கடமை' உணர்வு கொண்டவர்கள் என்பதா? காட்டுமிராண்டிகள் என்பதா?

✸ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துள்ள திருட்டு, பாலியல் வன்முறை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பூச்சி என்ற சமூக விரோதியை, மதுரைக்கு அருகேயுள்ள



சித்ராவின் தற்கொலைக்கு நியாயம் கேட்ட பொது மக்களை விரட்டியடிக்கும் சென்னை போலீசு. (உள்படம்) சித்ரா

www.padippakam.com



வலச்சிகுளம் கிராம மக்கள் கையும், களவுமாகப் பிடித்து, ஒத்தக்கடை போலீசு நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீசு விசாரணையின் பொழுது பூச்சி, உசிலம்பட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள டி. கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த குருவய்யாவைத் தனது கூட்டாளி என்று கூறினான்.

குருவய்யாவைப் பிடித்து வரச் சென்ற போலீசு, அவர் வீட்டில் இல்லாததால், அவரது மனைவி அங்கம்மாளை, பணயக் கைதியாகப் பிடித்துக் கொண்டு, ஊமச்சிகுளம் போலீசு நிலையத்திற்கு இழுத்து வந்தனர். குருவய்யாவையும் தேடிப் பிடித்து இழுத்து வந்து, 'உண்மை'யை வரவழைக்க அவரது கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி, அடிக்கத் தொடங்கினர். கணவனைக் காப்பாற்ற, குறுக்கே புகுந்த அங்கம்மாளின் கை, போலீசின் மிருகத்தனமான தாக்குதலால் முறிந்து போனது.

கணவனையும், மனைவியையும் ஊமச்சிகுளம் போலீசு நிலையத்தில் இருந்து கருப்பாயூரணி போலீசு நிலையத்திற்குக் கடத்தி வந்து, போலீசார் சித்திரவதையைத் தொடர்ந்தனர். குருவய்யாவை நிர்வாணப்படுத்தி, தலைகீழாகத் தொங்க விட்டு தாக்கினர். ஆனாலும், போலீசு எதிர்பார்த்தபடி அவர் பதில் சொல்லாததால், கணவனின் கண் முன்னாலேயே அங்கம்மாளை நிர்வாணப்படுத்தி, அவர் நிர்வாண உடம்பின் மீது படுத்துப் புரண்டு, அவர் உடலெங்கும் கடித்துக் குதறி, உண்மையைக் கண்டுபிடிக்கும் 'கடமையை' நிறைவேற்ற முயன்றது போலீசு. மீண்டும் இருவரையும் ஊமச்சிகுளம் போலீசு நிலையத்திற்குக் கொண்டு வந்து, போலீசார் ஒவ்வொருவரும் மாறி, மாறி தாக்கியதில், குருவய்யாவின் பிட்டத்து சதைகள் கிழிந்து, இரத்தம் வழியத் தொடங்கியது.


இரத்தக் கசிவால், அடிக்கடி நினைவிழக்கத் தொடங்கிய குருவய்யாவை, உசிலம்பட்டி துணைக் கண்காணிப்பாளர் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சைக்காகச் சேர்த்த போதும், குருவய்யாவின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

✦ திருவாரூருக்கு அருகேயுள்ள சொரக்குடி கிராமத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான தொகுப்பு வீடுகளை ஒதுக்குவதில் அ.தி.மு.க.வினருக்கும் 'கம்யூனிஸ்ட்' கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு, இரு தரப்புமே ஒருவரையொருவர் அரிவாளால் வெட்டிக் கொண்டனர். இம்மோதல் தொடர்பாக, வலங்கைமான் போலீசார் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 11 பேரை போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று தாக்கினர். இவர்களுள் சின்னையன் என்பவரை, போலீசார் குறி வைத்துத் தாக்கினர். சொரக்குடி கிராமத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அ.தி.மு.க. கிளை தொடங்கிய கல்யாணி என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட வழக்கில், சின்னையன் நேரடி சாட்சி. இவ்வழக்கில், போலீசு கூறியபடி, சின்னையன் சாட்சியத்தை மாற்றிச் சொல்ல மறுத்துவிட்டதால், அந்த ஆத்திரத்தை அவரை மிருகத்தனமாக தாக்கித் தீர்த்துக் கொண்டனர். போலீசு தாக்குதலில் நிலைகுலைந்து போன சின்னையன் அன்று நள்ளிரவே திருச்சி மருத்துவமனையில் இறந்து போனார்.

✦ நெல்லை மாவட்டத்திலுள்ள நெல்கட்டும் செவல் கிராமத்தைச் சேர்ந்த மாரிச்சாமி என்பவரை, மாரி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக 13.9.98 அன்று நள்ளிரவில் கூட்டிச் சென்ற சங்கரன் கோவில் போலீசார், மூன்று நாட்கள் கழித்து, மாரிச்சாமியின் உயிரற்ற உடலைத்தான் அவரது இளம் மனைவியிடம் கொடுத்தனர்.

— இவை அனைத்துமே கடந்த மூன்று, நான்கு மாதங்களுக்குள் தமிழக போலீசு நடத்தியிருக்கும் நரபலிகள். முடிந்தவரை போலீசாரின் அத்துமீறல்களை மறைப்பது; முடியாதபட்சத்தில் ஓர் அதிகார வர்க்க விசாரணைக் கமிசனை நியமித்தும், நட்ட ஈடுத் தொகையை வீசியெறிந்தும், மக்களின் கோபத்தை சாந்தப்படுத்தி, தனது பெயரைக் காத்துக் கொள்ள முயலுகிறது, தி.மு.க. அரசு.

எதிர்க்கட்சிகளோ போலீசின் அத்துமீறல்களை மனித உரிமைப் பிரச்சினையாகப் பார்ப்பதில்லை; மாறாக, சுயநலம் - தேர்தல் ஆதாயம் கருதித்தான் போலீசின் அத்துமீறல்களை எதிர்க்க முன் வருகின்றன. அதேசமயம், இந்த எதிர்க்கட்சிகள் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள



மாரிச்சாமியின் மனைவி காளித்தாய்



போலீசாரால் தாக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்ட அங்கம்மாள்

உள்ளூர் அளவில் போலீசிடம் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வதால், போலீசின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதில், எதிர்ப்பதில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் செல்வதில்லை.


எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுது போலீசின் அத்துமீறல்களை எதிர்ப்பதாகக் கூறி ஓட்டுப் பொறுக்குவதும், ஆளுங்கட்சியான பின் போலீசின் மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதும் எல்லா ஓட்டுக் கட்சிகளுக்கும் கைவந்த கலை. அதனால்தான், ஐந்து வருடம் போலீசு இராஜ்ஜியம் நடத்திய ஜெயா, இப்பொழுது, சித்ராவின் தற்கொலைக்கு நீலிக் கண்ணீர் வடிக்கிறார். ஜெயாவின் ஆட்சியில் நடந்த அத்துமீறல்களை பிரச்சாரம் செய்து ஓட்டு வாங்கிய கருணாநிதி, இப்பொழுது, ''சித்ரா விவகாரம் குறித்து 'தவறாக' செய்தி வெளியிடும் பத்திரிகைகள் பற்றி பிரஸ் கவுன்சிலில் புகார் கொடுப்பேன்'' என மிரட்டுகிறார்.

மேலும், ஆட்சியைப் பிடிக்கும் ஒவ்வொரு ஓட்டுக் கட்சியும், சமூகப் பாதுகாப்பு என்ற பெயரில் போலீசுக்கு அதிகாரங்களை வாரி வழங்கி, அதனை சர்வாதிகார அமைப்பாக மாற்றி அமைக்கின்றனர். இதனால், ஒவ்வொரு போலீசு அதிகாரியும் போலீசுக்காரனும் தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில், தனியொரு குட்டி சாம்ராஜ்ஜியத்தை நடத்தத் தொடங்கி விடுகிறான். போலீசின் இச்சட்டவிரோத இணை அரசு அமைப்பை யாரும் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது.

இன்னும் சொல்லப் போனால், இந்தப் பாராளுமன்ற ஆட்சி முறை, சட்ட திட்டங்கள், சமூக ஒழுங்குகள் இவையனைத்துமே மக்கள் நலனுக்கு விரோதமானவை; இந்த மக்கள் விரோத சமூக அமைப்பைப் பாதுகாப்பதற்குத் தான், ஆயுதப் பயிற்சியும், சிறப்பான அதிகாரங்களும் கொடுத்து கொடுத்து தனிவகை சாதியாக போலீசு துறை உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய அடியாள் கும்பலிடம், மனித உரிமைகளை மதிக்கும் பண்பை ஒருக்காலும் எதிர்பார்க்க முடியாது!

● பாரி

www.padippakam.com







இற்ற
உலக






## படக்குறிப்புகள்:

1. 'நாகரீக' உலகின் கோரம்: ஏகாதிபத்தியங்களும் உலக வங்கியும் உருவாக்கிய பஞ்சத்தில் சிக்கிப் பரிதவிக்கும் சூடான் குழந்தை. வட - மத்திய ஆப்பிரிக்க கண்ட நாடுகள் அனைத்தும் பஞ்சத்தில் சிக்கி 10 இலட்சம் பேர் சாவின் விளிம்பில் நிற்கின்றனர்.

2. சந்தைப் பொருளாதாரத்தின் மகிமை: ரசியாவில் கஞ்சித் தொட்டிகளில் ஊற்றப்படும் 'சூப்'பை வாங்கிக் குடிக்கும் வேலையிழந்த, வீடிழந்த தொழிலாளர் குடும்பம். ரசியாவில் 2 இலட்சம் பேர் வீடற்றவர்களாக பட்டினியிலும் கடுங்குளிரிலும் பரிதவிக்கின்றனர்.

3. ஏகாதிபத்திய உலகின் காட்டுமிராண்டித்தனம்: இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தா அருகே குப்பையைக் கிளறி வாழும் வேலையிழந்த தொழிலாளர் குடும்பங்கள்.

4. ஏகாதிபத்தியவாதிகளின் தோல்வி: ஐரோப்பிய ஒன்றிய வல்லரசு நாடான பிரான்சில் வேலையின்மை, ஊதிய வெட்டு, ஆட்குறைப்பு, நலத் திட்டங்களுக்கான மானிய வெட்டு முதலானவற்றை எதிர்த்து பாரீசு நகரில் நடந்த தொழிலாளர் ஆர்ப்பாட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# வீழும் முதலாளித்துவம்
# வெல்லும் கம்யூனிசம்

நவம்பர் 7, 1917

இப்பூவுலகின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்க ஆட்சி மலர்ந்த நாள். ஏகாதிபத்தியம் காகிதப் புலியே என நிரூபித்துக் காட்டி காலனிய நாட்டு மக்களின் மனங்களில் கனலை மூட்டிய நாள். முதலாளித்துவ சகாப்தம் முடிந்து சோசலிச சகாப்தம் தொடங்கி விட்டதை உலகறிய பறைசாற்றிய நாள். ரசியாவில் பாட்டாளியின் முதல் சோசலிச அரசு உதித்த அந்த நவம்பர் புரட்சிக்கு இன்று 82-வது ஆண்டு பிறந்தநாள்!

முதல் உலகப் போருக்குப் பிறகு ஏகாதிபத்திய நாடுகளிலே வறுமையும் வேலையின்மையும் சீரழிவுகளும் தலைவிரித்தாடிய போது, அவற்றின் வாடைகூட இல்லாமல் சோசலிச ரசியா மண்ணுலக சொர்க்கமாக மலர்ந்தது. கொள்ளைச் சுரண்டலும் கொடூர அடக்குமுறையும் முதலாளித்துவ நாடுகளில் பெருகியோடிய போது, அச்சுரண்டல் அமைப்பை ஒழித்து, பாட்டாளிகளை நாட்டின் எஜமானர்களாக்கி ஜனநாயகத்தை நிலைநாட்டி வளர்த்தது சோசலிசம். கொலை, கொள்ளை, போதை, விபச்சாரம் என சீரழிவையே ஏகாதிபத்திய கலாச்சாரம் அமோக விளைச்சலாக்கிய போது, இதற்கு நேரெதிராக சமத்துவம், மனித நேயம், பொதுமை நலம், கூட்டுத்துவ வாழ்வு எனும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை சோசலிசம் உலக மக்களுக்கு வற்றாத ஊற்றாக வாரி வழங்கியது.

தோழர் லெனின் தலைமையிலான 1917 நவம்பர் புரட்சியும் அதைத் தொடர்ந்து தோழர் ஸ்டாலின் தலைமையிலான சோசலிசக் கட்டுமானமும் உருவாக்கிய புதிய மனிதர்கள், உலக அதிசயங்களோடு ஒப்பிடும் அளவுக்கு அனைத்து அரங்கிலும் அற்புதங்களை மிகக் குறுகிய காலத்தில் ரசியாவில் நிகழ்த்திக் காட்டினார்கள். அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களும் 200 ஆண்டுகளில் ஏற்படுத்திய தொழிற்துறை - விவசாய சாதனைகளை, வெறும் 20 ஆண்டுகளில் சோசலிசம் சாதித்துக் காட்டியது. உழைப்பும் சமூக சேவையும் மதிக்கப்பட்டன. கல்வி - கலாச்சாரம், நாகரிகம், நல்லொழுக்கம், மகளிர் நலன் ஆகிய அனைத்திலும் முன்னுதாரணமிக்க புதிய வளர்ச்சி எட்டப்பட்டது. கிழக்கே பெரியார், நேரு, தாகூர், சுகர்னோ முதல் மேற்கே ரஸ்ஸல், பெர்னார்டுஷா, சார்லி சாப்ளின் வரை பலநாடுகளைச் சேர்ந்த ''அறிஞர்கள் - தலைவர்கள்'', இது தான் உலகின் உன்னதமான நாகரீகமிக்க சமுதாயம் என்று வியந்து பாராட்டினார்கள்.

உலகப் புரட்சியின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த ரசியாவில் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர், கட்சியையும் ஆட்சியையும் உள்ளிருந்தே கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்கள் சோசலிச ரசியாவை சமூக ஏகாதிபத்தியமாகச் சிதைத்து சீரழித்தனர். துரோகி கோர்பச்சேவ், யெல்ட்சின் காலத்தில் சோசலிச முகமூடியும் கழற்றி எறியப்பட்டு அம்மணமான முதலாளித்துவம் அதிகாரத்துக்கு வந்தது. சோவியத் ஒன்றியமும் சிதறுண்டு போனது.

ஏகாதிபத்தியங்களின் ஆசியோடும் ஆதரவோடும் நடந்த இந்த வீழ்ச்சியைக் காட்டி, கம்யூனிசம் தோற்று விட்டது; சோசலிசம் வீழ்ந்து விட்டது என்று எக்காளமிட்டுக் கொண்டு உலகெங்கும் கம்யூனிச எதிர்ப்பு யுத்தத்தை ஏகாதிபத்தியவாதிகள் கட்டவிழ்த்து விட்டனர். கம்யூனிசம் - சோசலிசம் என்றால் சர்வாதிகாரம்; அது சுதந்திரம் - ஜனநாயகம் ஏதுமற்ற இரும்புத் திரை போடப்பட்ட இருண்ட சமுதாயம் என்று அவதூறு செய்து, சந்தைப் பொருளாதாரக் குடையின் கீழ் உலகைக் கொண்டு வந்துவிட்ட ஏகாதிபத்தியங்கள் சாதித்தது என்ன? தீராத பொருளாதார நெருக்கடி, வறுமை, வேலையின்மை, விபச்சாரம், போதை, எயிட்ஸ், இனவெறி, கிரிமினல் - மாஃபியாக்களின் ஆதிக்கம் முதலானவற்றைத்தான்! ஏகாதிபத்திய உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும், எங்கு திரும்பினாலும் இந்தச் சீரழிவுகள், அவலங்கள்.

✱ இந்தோனேசியாவில் நாணய மதிப்புச் சரிவினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, அந்நாட்டின் பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையின்றி வருவாயின்றிப் பரிதவிக்கின்றனர். வேலை இழந்த தொழிலாளர் குடும்பங்களோ, தலைநகர் ஜகார்த்தா அருகே பண்டார்ஜெர்பங் எனுமிடத்தில் நாள்தோறும் குவிக்கப்படும் குப்பைகளைக் கிளறி பிளாஸ்டிக் பொருட்கள், காகிதம், ஆணி முதலானவற்றைப் பொறுக்கி எடுத்து கடைகளில் விற்று வயிற்றைக் கழுவுகின்றனர்.

✱ ஆசியாவின் பொருளாதாரச் சூரப்புலிகளின் ஒன்றாக சித்தரிக்கப்பட்டு, இப்போது சீன ஆட்சியின் கீழுள்ள ஹாங்காங்கில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து பரிதவிக்கின்றனர். வெளியே அவதிப்படுவதை விட சிறைக்குச் செல்வதே மேல் என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். வேலையிழந்த தொழிலாளர்கள் சிறு குற்றங்களில் ஈடுபட்டு சிறைக்குச் செல்லும் போக்கு அங்கே அதிகரித்து வருகிறது.

✱ ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள சூடானில் ஏகாதிபத்தியங்களும் உலக வங்கியும் உருவாக்கிய பஞ்சத்தின் கோரத்தாலும் தொடரும் உள்நாட்டுப் போரினாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் செத்து மடிகிறார்கள். 15 ஆண்டுகளுக்கு முன்பு எத்தியோப்பியாவில் தொடங்கிய பட்டினிச் சாவுகள் இப்போது சோமாலியா, சூடான், சாட், நைஜர் என வட மத்திய ஆப்பிரிக்கா எங்கும் நிரந்தரமாகி விட்டது. ஐந்து நட்சத்திர விடுதிகள், உல்லாச - சூதாட்ட - விபச்சார மாளிகைகள், களிவெறியாட்டங்கள் என வக்கிர வாழ்வு நடத்தும் கையளவேயான முதலாளிகளாலும் கிரிமினல் குற்றக் கும்பல்களாலும் ஆளப்படும் ஏகாதிபத்திய உலகம், பிச்சைக்காரனுக்கு வீசியெறிவதைப் போல அற்ப நிவராணங்களுடன் பட்டினியால் துடிக்கும் ஆப்பிரிக்க மக்களை அலட்சியப்படுத்துகிறது. நாகரீக உலகின் அவமானச் சின்னங்களாக எலும்பும் தோலுமான சூடான் குழந்தைகள் பல்லாயிரக்கணக்கில் இரத்த சாட்சியாக நிற்கிறார்கள். ஐ.நா. மன்றத்தின் உலக உணவுத் திட்ட அதிகாரிகளின் கூற்றுப்படி ஏறத்தாழ 10 இலட்சம் வட மத்திய ஆப்பிரிக்க மக்கள் பட்டினியில் சிக்கி சாவின் விளிம்பில் நிற்கிறார்கள்.

ஏறத்தாழ நான்காண்டுகளுக்கு முன்பு அமெரிக்க ஏகாதிபத்திய வாசலிலேயே உள்ள மெக்சிகோவில் ஏற்பட்ட பொருளாதார திவால் நிலை, அதைத் தொடர்ந்து பிரேசிலைத் தாக்கியது. அதன் பிறகு, அண்மையில் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட நாணய மதிப்புச் சரிவினால் அந்நாடுகளின் தொழிலும் வர்த்தகமும் படுபாதாளத்தில் வீழ்ந்து, மஞ்சள் கடுதாசி கொடுக்கும் அவலத்திற்கு ஆளாயின. அதன் விளைவாக உலகின் மிகப் பெரிய பொருளாதார வல்லரசாகிய ஜப்பானிலும் பங்குச் சந்தை சரிவும் பொருளாதார நெருக்கடியும் முற்றியது. ஏற்கனவே நெருக்கடியில் சிக்கித் தவித்த ரசிய 'வல்லரசு' நாணய மதிப்புச் சரிவினால் குப்புற விழுந்து மீண்டெழ முடியாமல் தத்தளிக்கிறது.

அடுத்து எஞ்சியுள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வல்லரசுகள் எப்போது தம்மை இந்நெருக்கடிகள் தாக்கி வீழ்த்துமோ என்று பீதியடைந்து நிற்கின்றன. அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் கடந்த நிதியாண்டில் வெறும் 2% ஆகச் சரிந்து விட்டது. அதன் தொழிலும் வர்த்தகமும மந்த நிலையை எட்டிவிட்டது. பன்னாட்டு ஏகபோக தொழில் நிறுவனங்களில் ஆட்குறைப்பும், லே-ஆஃப்பும் ஆரம்பமாகி விட்டன.


படிப்பகம்

www.padippakam.com

ஜார்ஜ் சோரசிலிருந்து பில்கேட்ஸ் வரை அமெரிக்க ஏகபோக கோடீசுவர முதலாளி களின் சொத்து மதிப்பு வேகமாகச் சரிந்து வருகிறது. ஒட்டு மொத்த ஏகாதிபத்திய உலகின் பொருளாதார வளர்ச்சி 4.1% லிருந்து 2.5% ஆக வீழ்ந்து விட்டது. 1929 அக்டோபர் 29-ந் தேதி ''கறுப்பு செவ் வாய்'' நாளன்று ஏற்பட்ட அமெரிக்கப் பங் குச் சந்தை வீழ்ச்சியும், அதைத் தொடர்ந்த உலகளாவிய பொருளாதார நெருக்கடி யும், முறைகுலைவும் அராஜகமும் மீண் டும் வெடிக்குமோ என்று ஏகாதிபத்தியவா திகள் அச்சத்தில் குழம்பி நிற்கிறார்கள். சந் தைப் பொருளாதாரத்தின் தோல்வி - வீழ்ச் சியிலிருந்து தப்பிக்க வழி தெரியாமல் தத்த ளிக்கிறார்கள்.

கம்யூனிசம் - சோசலிசம் என்பது சர்வாதிகாரம்; அது சுதந்திரம், ஜனநாய கம், மனித நேயத்துக்கே எதிரானது என்று அவதூறு செய்து, சதிகள் பல புரிந்து, இறுதி யில் அந்த உன்னத சமுதாயத்தை வீழ்த்தியதற்காக எக்காளமிட்ட ஏகா திபத்தியவாதிகள் இறுதியில் சாதித் தது என்ன? வறுமை, வேலை யின்மை, பட்டினி, விபச்சாரம், கிரிமி னல் குற்றங்கள், போர்கள் - இவற் றைத்தானே! பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது; அமைதி - சமாதானத் துக்கான சகாப்தம் தொடங்கிவிட்டது என்று பசப்பிய ஏகாதிபத்தியங்கள் செசன்யா, கொசாவோ, போஸ் னியா, சியாபாஸ் எங்கும் இரத்த ஆற் றைத்தானே ஓடவிட்டுள்ளார்கள்? சந்தைப் பொருளாதாரம்தான் ஒரே தீர்வு என்று உலக நாடுகள் அனைத் தையும் ஒற்றைத் துருவப் பொருளா தாரக் குடையின் கீழ் கொண்டு வந்து விட்டதாக மார்தட்டிய ஏகாதிபத்திய வாதிகள், விலையேற்றம், பணவீக் கம் - தேக்கம், நாணயமதிப்பு வீழ்ச்சி, திவால் நிலை எனும் பொருளாதாரச் சீரழிவுகளைத் தவிர வேறு என்ன சாதித்தார்கள்?

ஜனநாயகம், நாகரீகம், மனித உரிமை என்றெல்லாம் நீட்டி முழக் கிய ஏகாதிபத்தியங்கள் சூடானிலும் சோமாலியாவிலும் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் பரிதவிக்கும் போது காந்தீயக் குரங்குகளாக நிற்கிறார்களே, அதுதான் மனித நேயமா? சுயாட்சி உரிமை கோரி செசன்யாவில் போராடிய தனது சொந்த நாட்டு மக்களையே துடிக்கத் துடிக்க் கொன்றொழித்த ரஷியாவின் சர் வாதிகாரி யெல்ட்சினை, உலகின் மிகச் சிறந்த மனிதர் என்று பாராட்டி கௌரவித் தார்களே, அதுதான் ஜனநாயகமா? ஈராக் கிலிருந்து கியூபா, வடகொரியா என கோடிக்கணக்கான குழந்தைகள் சத்துண வின்றியும், நோய்த்தடுப்பு மருந்துகள் இன் றியும் கொத்துக் கொத்தாக மடியும் போது, அந்நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதித்துள்ளார்களே, அதுதான் மனித உரி மையா? ஒழுக்கமும் பண்பாடும் நாகரீக மும் கொண்ட மனிதர்கள் வாழத் தகுதியற் றவையாக மாற்றி, உலக நாடுகளை காட்டு மிராண்டிகளின் பூமியாக சிதைந்து விட் டார்களே, இதுதான் நாகரீகமா?

இல்லை; இனியும் இந்த மோசடி களை நம்பி ஏமாறத் தயாராக இல்லை என்று தென்கிழக்காசிய நாடுகள் எங்கும் உழைக்கும் மக்கள் போராட்டங்களில் - கலகங்களில் இறங்கி விட்டார்கள். ஆப்பி ரிக்க - தென் அமெரிக்க நாடுகளில் உலக வங்கி - ஐ.எம்.எப் - இன் கட்டளைக்கு அடிபணிந்து கிடக்கும் சர்வாதிகார ஆட்சி யாளர்களுக்கு எதிரான போராட்டங்கள் தொடர்கின்றன. ஏகாதிபத்திய ரசியாவில் சர்வாதிகார அதிபர் யெல்ட்சினுக்கு எதிரா கவும், சந்தைப் பொருளாதாரக் கோரத் துக்கு எதிராகவும் தன்னெழுச்சியான போராட்டங்கள் வெள்ளமெனப் பெருகி வருகின்றன. ஐரோப்பாவில் ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன், இத்தாலி ஆகிய வல்ல ரசு நாடுகளில் ஆட்குறைப்பு, ஊதிய வெட்டு, வேலையின்மைக்கு எதிராக தொழிலாளர் போராட்டங்கள் வெடித்தெ ழுகின்றன. ஏகாதிபத்திய உலகின் தலை மையகமான அமெரிக்காவில், ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தில் நடந்த ஆட்கு றைப்பு நடவடிக்கைக்கு எதிராக தொழிலா ளர் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் நாடு முழுவதும் பற்றிப் படர்ந்து விடுமோ என்று பெருமுதலாளிகள் பீதியடைந்து நிற் கிறார்கள்.


ரீகனிசம், தாட்சரிசம், பெரஸ்த் ரோய்கா, நவீனமயம், தாராளமயம், புதிய பொருளாதாரக் கொள்கை என்று பல முகங்களுடன் கிளம்பி ஆட்டம் போட்ட முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத் தின் கொடுமையையும் கோரத்தையும் இனியும் சகித்துக் கொள்ள முடியாமல் உல கெங்குமுள்ள உழைக்கும் மக்கள் கோடிக் கால் பூதமாகக் கிளம்பி விடுவார்களோ என்று ஏகாதிபத்தியவாதிகள் அஞ்சி நடுங் குகிறார்கள். தோற்றுவிட்டதாக அவதூறு செய்து ஒடுக்கி, சிதைத்த கம்யூனிசம் மீண் டும் புதிய வலிவுடன் உயிர்த்தெழுந்து விடுமோ என்று பீதியில் கையைப் பிசைகி றார்கள். படுதோல்வியடைந்து மரண வாயிலில் நிற்கும் சந்தைப் பொருளாதாரத் துக்கு அரிதாரம் பூசி ஒப்பனை செய்து உயிர்ப்பிக்க கீன்ஸ், அமர்த்தியா சென் போன்ற பொருளாதாரவாதிகள் அவர்க ளுக்குத் தேவைப்படுகிறார்கள். ''மனித முகம் கொண்ட முதலாளித்துவம்'', ''ஜன நாயகமும் நல்வாழ்வும் கூடிய சந்தைப் பொருளாதாரம்'' என்று பசப்பிக் கொண்டு ஏகாதிபத்திய நெருக்கடிகளை மூடி மறைத்து, முட்டுக் கொடுக்கும் ரசியாவின் கென்னடி ஜுகானவ், பிரிமகோவ், சீனாவின் ஜியாங்ஜெமின் போன்ற போலி கம்யூனிசத் துரோகிகள் அவர் களுக்கு அவசரமாகத் தேவைப்படுகி றார்கள்.

மரணப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் ஏகாதிபத்திய ஓநாய்களே, இத்தகைய வடிகால்கள் மூலம் மக்க ளின் சீற்றத்தை தணித்து விடலாம் என்று இனிமேலும் நீங்கள் மனப்பால் குடிக்க முடியாது. எலிகளைப் போல ஏழை நாடுகளை நசுக்கிய நீங்கள், தீவிரமாகிவிட்ட சந்தைப் பொருளா தார வீழ்ச்சியால் சிறைப்பட்ட எலிக ளாக அலைபாய்ந்து தவிப்பதை இனி மறைக்க முடியாது. அச்சத்தையும் மர ணத்தையும் ஏற்றுமதி செய்த உங்கள் முகம் அச்சத்தால் வெளிறிப் போய் கிடப்பதை இனி மூடிமறைக்கவும் முடியாது.

ஏகாதிபத்திய உலகின் சீரழிவை யும் கொடூரத்தையும், பித்தலாட்ட மோசடிகளையும் அனுபவபூர்வமாக உணர்ந்துவிட்ட உழைக்கும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு போரா டத் தொடங்கி விட்டார்கள். போராட்ட வளர்ச்சிப் போக்கில் அவர்கள் தமக்கே உரித்தான கம்யூனிச சித்தாந்தத்தை பற்றி நின்று உயர்த்திப் பிடிப்பார்கள். ஏகாதிபத் திய உலகின் முதுகெலும்பை முறிக்கும் புரட்சியைச் சாதிப்பார்கள்.

அது காடுகள், மலைகளைக் கடந்து உலகெங்கும் எதிரொலிக்கும். வறண்ட பாலை நிலத்தையும் வளமான மண்ணாக் கும். ஆலைகளில் இயந்திரங்களின் ஓசை யாய் எழும்பும். மேடைகளில் கலைஞர்க ளின் இசையாய் முழங்கும். பட்ட மரங்களி லும் பசுந்தளிர்கள் முளைவிடும். பாரெங் கும் செங்கொடி உயர்ந்தோங்கும்!

• மனோகரன்



பிரேசில் நாட்டுத் தலைநகரின் தெருவில் தீப்பந்த வித்தை காட்டி, ஏதாவது வேலை தருமாறு கேட்கும் ஒரு தொழிலாளி



படிப்பகம்

www.padippakam.com



## துயர வெள்ளத்தில் மக்கள் பாசிசத் திமிரில் சோனியா

வட மாநிலங்களை அண்மையில் தாக்கிய பெருமழை வெள்ளத்தால் மக்கள் வீடு - வாசல் இழந்து தத்தளித்துக் கொண்டிருந்தபோது, மே. வங்கத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மால்டா பகுதியை காங்கிரசுத் தலைவி சோனியா கடந்த அக்டோபர் 11-ந் தேதி பார்வையிட வந்தார். பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகளால் அப்பகுதி மக்கள் சோனியாவை நெருங்கக்கூட முடியவில்லை. பாதுகாப்புப் படையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலர் மட்டுமே சோனியாவின் அருகில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு மட்டுமே நிவாரணமாக ஒரு ஆடை வழங்கப்பட்டது.



வெள்ளம் காரணமாக அப்பகுதியில் குடிக்கக் கூட நீரின்றி மக்கள் தவித்துக் கொண்டிருந்தனர். குடிநீர் தட்டுப்பாடு காரணமாக, சோனியாவுக்கு சிறப்பாக பாதுகாக்கப்பட்ட தாதுநீர் புட்டிகள் (மினரல் வாட்டர்) கொண்டு வரப்பட்டன. சோனியாவைத் தவிர, மற்றொரு முக்கிய புள்ளிக்கும் இதே போல சிறப்பு உணவும், தாது நீரும் வழங்கப்பட்டது. அந்த முக்கிய புள்ளி வேறு யாருமல்ல; பாதுகாப்புப் படையின் மோப்ப நாய்தான்! தனிப்பட்ட ஒருவரின் பாதுகாப்புக்காக வரும் நாய்க்குக் கூட குடிநீர் வழங்கப்பட்ட அதேசமயம், மால்டா வட்டார மக்களோ ஒரு குவளை குடிநீர் கூட கிடைக்காமல் தவித்தனர். நாட்டு மக்கள் மீது எதிர்க்கட்சித் தலைவி காட்டும் கரிசனத்தின் லட்சணம் இதுதான்!

## இந்து வெறியர்களின் 'சுதேசி' ஒப்பனை கலைந்தது

இந்துவெறி ஆட்சியாளர்கள் நடத்திய அணு குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, இந்தியா மீது பொருளாதாரத் தடை விதிப்பதில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகள் முன்னணியாகச் செயல்பட்டன. இப்பொருளாதாரத் தடைகளை எதிர்த்து பாரதீய ஜனதாவும் ஆர்.எஸ்.எஸ்.-ம் வெற்றுச் சவடால் அடித்து வந்தன. சுதேசி கூப்பாடு போட்டன. ஆர்.எஸ்.எஸ்.-ன் குடை அமைப்புகளில் ஒன்றான சுதேசி ஜக்ரான் மன்ச் (சுதேசி விழிப்புணர்வு இயக்கம்) அன்னியப் பொருட்களைப் புறக்கணிக்க வேண்டுமென பாதயாத்திரை நடத்தியது. இவையெல்லாம் வெறும் நாட்கம்தான் என்பதையும், தனது ஏகாதிபத்திய விசுவாசத்தையும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் அண்மையில் நிரூபித்துக் காட்டிவிட்டது.



இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.-ன் தலைமை குருபீடமான நாக்பூரில், ''நவராத்திரி'' - ''விசயதசமி'' விழாக்களை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் கோலாகலமாகக் கொண்டாடினர். ''விசயதசமி'' விழாவின் முக்கிய விருந்தினர்கள் யார் தெரியுமா? அமெரிக்கா மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியங்களின் தூதரக அதிகாரிகள்தான்! அவர்களை வரவேற்று உபசரிப்பதில் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டார்களாம்! புரிந்து கொள்ளுங்கள். இதுதான் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் 'தேசபக்தி!'

## அணு குண்டுக்காகக் கொல்லப்படும் ஆதிவாசிகள்

பொக்ரான் அணுகுண்டு வெடிப்பைத் தொடர்ந்து இந்து வெறியர்களும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரும் இது நாட்டிற்கு ஏற்பட்ட பெருமை, விஞ்ஞான தொழில்நுட்பச் சாதனை என்று வெட்கமின்றி ஆரவாரம் செய்த அதே நேரத்தில், அணுகுண்டு வெடிப்புக்கான யுரேனியம் வெட்டி எடுக்கும் ஆதிவாசி மக்கள் அணுக்கதிர் வீச்சினால் கொஞ்சம் கொஞ்சமாக மடிந்து வருகிறார்கள்.

பீகாரின் ஜார்கந்து பகுதியில் உள்ள ஜாடுகுடாவில் வாழும் 4000 பழங்குடியின குடும்பங்கள் யுரேனிய சுரங்கங்களில் வேலை செய்து பிழைக்கின்றன. இந்தியாவின் 'மகத்தான' அணுசக்தி திட்டத்துக்காக, இவர்கள் அணுக் கதிரியக்கத்தால் நாளும் பலியாகி வருகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 53 யுரேனியச் சுரங்கத் தொழிலாளர்கள் கதிரியக்கத்தால் மாண்டு போயுள்ளனர். காசநோய், இரத்தப் புற்றுநோய், மயக்கமடைந்து முடமாதல் முதலான நோய்கள் இப்பகுதியில் தீவிரமாகியுள்ளது. உடல் ஊனத்துடன் குழந்தைகள் பிறப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

இந்திய யுரேனிய கார்ப்பரேஷன் (UCIL) என்ற அரசுத்துறை நிறுவனம் இப்பகுதியிலுள்ள சுரங்கங்களிலிருந்து யுரேனியத்தை வெட்டி எடுத்து, ஐதராபாத்திலுள்ள அணுசக்தி எரிபொருள் கழகத்துக்கு (NFC) அனுப்புகிறது. அங்கு யுரேனியம் சுத்திகரிக்கப்பட்டு அணுசக்தி திட்டத்துக்குத் தேவையான எரி குச்சிகளாக மாற்றப்படுகிறது. இங்கு ஏற்படும் கதிரியக்கம் கொண்ட கழிவுகள் மீண்டும் ஜாடுகுடாவுக்கே கொண்டு வரப்பட்டு அங்கு பழங்குடியினர் வாழும் கிராமங்கள் அருகே பெரிய குட்டைகள் உருவாக்கப்பட்டு கொட்டப்படுகிறது. இதற்கான நிலமும் அப்பழங்குடியினரிடமிருந்தே பறிக்கப்பட்டுள்ளது.

இக்கழிவுக் குட்டைகளிலிருந்து கதிரியக்கத் தாக்குதலால் 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இப்போது இந்திய யுரேனிய நிறுவனம் ஒப்புக் கொண்டாலும், 53 தொழிலாளர்கள் மாண்டதற்கு இது காரணமல்ல என்கிறது. பீகார் மாநில அரசு இப்பகுதியில் ஒரு மருத்துவ ஆய்வை நடத்திய போதிலும் அதன் முடிவுகளோ, விபரங்களோ வெளியிடப்படாமல் ரகசியமாக மறைக்கப்பட்டுவிட்டது.

பாதிப்புகளை உணர்ந்து விழித்தெழுந்த பழங்குடியின மக்கள், தன்னெழுச்சியாகத் திரண்டு உரிய மருத்துவ - நிவாரண உதவிகள் கோரியும், கதிரியக்கத்துக்கு யுரேனிய நிறுவனம் தான் பொறுப்பு என்பதை வெளிப்படையாக அறிவிக்கக் கோரியும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதனால் பீதியடைந்த யுரேனிய நிறுவனம், பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு இடங்களில் வீடு கட்டித் தருவதாகவும், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு தருவதாகவும், நிவாரண உதவிகள் செய்வதாவும் ஒப்புக் கொண்டுள்ளது. அதேசமயம் நச்சு யுரேனியக் கழிவுகளை இப்பகுதியில் கொட்டுவதை நிறுத்த மறுக்கிறது. எதிர்ப்பு இருந்த போதிலும் இப்போது மீண்டும் நச்சுக் கழிவுக் குட்டைகளைக் கட்டி வருகிறது. கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்தினால் அது அணுசக்தி திட்டத்திற்கே சவாலாகிவிடும் என்பதால்,



படிப்பகம்

www.padippakam.com



மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து அடாவடித்தனம் செய்கிறது.

1962-ஆம் ஆண்டின் அணுசக்தி சட்டப்படி, இந்திய யுரேனிய நிறுவனம் தனது ஊழியர்கள் - தொழிலாளர்களுக்குக்கூடத் தெரியாமல் தனது செயல்பாடுகளை ரகசியமாக வைத்துக் கொள்ளலாம். வெளியிலிருந்து எவரும் இப்பகுதியில் மருத்துவ ஆய்வு செய்வதைத் தடுக்கலாம். அணு பொருட்களின் போக்குவரத்து, கழிவுகளைக் கொட்டுதல், அணுச் சோதனை, கதிரியக்க பாதிப்புகள் பற்றி எந்த வகையிலும் தகவல் கசியாமல் தடுக்கலாம். இதைச் சாதகமாக்கிக் கொண்டு தொழிலாளர்களின் உயிரோடு விளையாடுகிறது இந்திய அரசு. இது இந்திய அரசியல் சட்டத்தின் 19 மற்றும் 21-வது பிரிவின்படியான வாழும் உரிமையையும், பேச - எழுத சுதந்திரம் தரும் ஜனநாயக உரிமையையும் பறிக்கும் பாசிச சட்டமாகும். நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து, அணுகுண்டுக்காக ஜார்கந்து மக்களைப் பலியிடும் கொடுமையை ஜனநாயக உணர்வுள்ள உழைக்கும் மக்கள் இனியும் அனுமதிக்கக் கூடாது; அனுமதிக்கவும் முடியாது.

## நாகரீகக் கோமான்களின் காட்டு மிராண்டித்தனம்



கடந்த ஏழாண்டுகளில் 350 சிறைக் கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இன்னும் 3300 பேர் தண்டனை நிறைவேற்றப்பட காத்திருக்கிறார்கள். தூக்குக் கயிறை எதிர்நோக்கியுள்ள சிறைக் கைதிகளில் 65 பேர் சிறுவர்கள்! மனநிலை பாதிக்கப்பட்டவர்களைத் தூக்கிலிடக் கூடாது என்று அனைத்துலக பொது மன்னிப்பு விதி இருந்த போதிலும் கூட, தொடர்ந்து அத்தகையோர் கொல்லப்படுகிறார்கள். இவை ''தாலிபான்'' எனும் இசுலாமிய மத வெறி யுத்தப் பிரபுக்கள் ஆளும் ஆப்கானிஸ்தானில் நடக்கும் கொடுமை அல்ல. நாகரீக உலகின் ஜனநாயகத் தொட்டிலாக வர்ணிக்கப்படும் அமெரிக்காவில் தொடரும் காட்டு மிராண்டித்தனம்தான் இவை.



மனித உரிமை மீறல் அட்டூழியங்களுக்கு எதிராக அமெரிக்காவிலுள்ள ஹெய்தி நாட்டு அகதிகள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

''ஏழை - பணக்காரர்கள், வெள்ளையர் - கருப்பர்கள், ஆண் - பெண் என்கிற பாகுபாட்டின் அடிப்படையில் அமெரிக்காவில் மனித உரிமை மீறல் அட்டூழியங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. கடந்த ஆண்டில் மட்டும் 30,000 மனித உரிமை மீறல் பற்றிய புகார்களும் வழக்குகளும் குவிந்துள்ளன. ஏழை நாடுகளின் கொடிய சர்வாதிகார ஆட்சிகளைவிடக் கேவலமான மூன்றாந்தர கொடிய அடக்குமுறையும் சித்திரவதைகளும் அமெரிக்காவில் தொடர்கின்றன'' என்று அனைத்துலக பொது மன்னிப்பு நிறுவனம் (ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்) அந்நாட்டில் கடந்த ஈராண்டுகளாக ஆய்வு செய்து ஓர் அறிக்கை மூலம் அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளது.

பெண் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவதும், பாலியல் வன்முறைக்கு ஆளாவதும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. பொதுவில் கைதிகளின் கை-கால்களில் விலங்கிட்டு வதைப்பதும், இரும்புச் சங்கிலியால் தூண்களிலும், நாற்காலிகளிலும் பிணைத்து வைப்பதும், இரும்புச் சவுக்கு, மின்சார அதிர்ச்சிக் கொம்பு, உணர்விழக்கச் செய்யும் அதிர்ச்சித் துப்பாக்கி முதலானவற்றால் சிறைக் கைதிகளை வதைப்பதும் சர்வசாதாரணமாக உள்ளது. அதிலும் குறிப்பாக, குடியேறிய பிற ஏழை நாட்டவர்கள், அகதிகள் ஆகியோர் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக வதைக்கப்படுகின்றனர். சிறு குற்றங்களுக்குக் கூட அவர்கள் நிறவெறி - இனவெறி அடிப்படையில் 'நீதி' வழங்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள். மரண தண்டனைகள் ஒருதலைப் பட்சமாகவும் நிறவெறி - இனவெறி அடிப்படையிலும் நிறைவேற்றப்படுகின்றன. சர்வதேச சிவில் - மனித உரிமை ஒப்பந்தங்களில் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ள போதிலும், குற்றங்களில் ஈடுபட்ட இளஞ்சிறுவர்களுக்குக் கூட மரண தண்டனை விதித்துக் கொன்றொழிக்கிறது - இப்படி அடுக்கடுக்கான உண்மைகளை ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது, பொது மன்னிப்புக் கழகத்தின் அறிக்கை.

மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் அமெரிக்கக் காட்டு மிராண்டிகளுக்கு, ஏழை நாடுகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி கூச்சல் போட்டு பொருளாதாரத் தடைகளை விதிக்கவும், உலகின் போலீசுக்காரனாக நாட்டாமை செய்யவும் என்ன யோக்கியதை இருக்கிறது?

## ஆந்திர போலிசாரின் பயங்கரவாத வெறியாட்டம்

அரசு பயங்கரவாத வெறியாட்டம் போட்ட பஞ்சாப் போலீசுக்கே பாடம் சொல்லித் தரும் அளவுக்கு, ஆந்திரப் போலீசு பயங்கரவாதக் கொலைகளைச் செய்வதில் முன்னேறிவிட்டது. ஆந்திராவின் மேடக் மாவட்டத்தில் உள்ள நவாப் பேட்டையில் கடந்த ஜூலை 26-ந் தேதி பயங்கரவாதப் போலீசார் நடத்திய கோரமான கொலை வெறியாட்டத்தைக் கண்டு அம்மாநிலமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. நக்சல்பாரி புரட்சியாளர்களான மக்கள் யுத்தக் குழுவின் தொழிற்சங்கப் பிரிவைச் சேர்ந்த 8 பேர் நவாப் பேட்டையிலுள்ள ஒரு வீட்டில் ஜூலை 25-ந் தேதியன்று தங்கியிருந்தனர். ஒரு ஆள்காட்டி மூலம் தகவல் அறிந்த சிறப்பு வேட்டைப்படை போலீசு சூப்பிரண்ட் வினய் குமார்சிங், மறுநாள் ஜூலை 26-ந் தேதியன்று நள்ளிரவில் 50 பேர் கொண்ட போலீசுப் படையுடன் அவ்வீட்டைச் சுற்றி வளைத்தான்.

அவ்வீட்டின் உரிமையாளரான ஒரு பெண் மணி உட்பட, அங்கு தங்கியிருந்தவர்களுக்கு எவ்வித முன்னெச்சரிக்கையோ, சரணடைய அறைகூவலோ ஏதுமின்றி கையெறி குண்டுகளை வீசித் தாக்கியதோடு, போலீசார் கண் மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி அவ்வீட்டைச் சல்லடையாகத் துளைத்தனர். காட்டு மிராண்டித்தனமான இப்படுகொலையை நடத்திவிட்டு, போலீசுடன் நடந்த ஆயுத மோதலில் அவர்கள் இறந்ததாகக் காட்டுவதற்காக, கொல்லப்பட்ட போராளிகளின் உடல்களை அக்கிராமத்தில் ஆங்காங்கே வீசியெறிந்தனர். அவற்றின் அருகே துப்பாக்கி மற்றும் கையெறி குண்டுகளைப் போட்டு வைத்தனர். இக்கொலை வெறியாட்டத்தைப் பற்றி வெளியே மூச்சு விடக் கூடாது என்று கிராம மக்களை அடித்து மிரட்டி வைத்தனர்.

ஆனாலும், ஆந்திரப் போலீசாரின் மனிதத் தன்மையற்ற இப்பயங்கரவாத வெறியாட்டம் மெதுவாகக் கசிந்து இப்போது அம்பலமாகிவிட்டது. சேஷண்ணா, ஜெயக்கா, கவிதா, ராம்தாஸ், பலட்ட கிருஷ்ணா ஆகிய தோழர்கள் உள்ளிட்டு, மாணவப் பருவத்திலிருந்தே முன்னணிப் போராளியாகத் திகழ்ந்த தோழர் ரவியும் இப்பயங்கரவாதத் தாக்குதலில் பலியாகியுள்ளார். நரவேட்டையாடி வரும் ஆந்திரப் போலீசாரின் இந்த 'மோதல்' நாடகத்தை எதிர்த்து மனித உரிமைக்கான அமைப்புகள் போராடி வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## போலீசு அதிக்கிரமத்தில் போலிகளின் ஆட்சி முன்னணியில்

போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரள மாநிலம், போலீசு அதிக்கிரமங்களிலும் கொட்டடிக் கொலைகளிலும் புதிய சாதனை படைக்கத் தொடங்கிவிட்டது. கடந்த ஆகஸ்டு மாதத்தில் மட்டும் கேரளாவில் 4 கொட்டடிக் கொலைகள் நடந்துள்ளன. ஆகஸ்ட் 8-ந் தேதியன்று ஆலப்புழையில் ஓய்வு பெற்ற அரசு ஊழியரான தங்கல் குஞ்சு என்ற முதியவர், போலீசாரால் தேடப்பட்ட அவரது மகன் கிடைக்காததால், போலீசு கொட்டடியில் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். ''போலீசாரின் அட்டூழியங்கள் கேரளாவில் எல்லை மீறிவிட்டன. இடது சாரி அரசு இவற்றைக் கட்டப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. மாண்டு போன குஞ்சுவின் குடும்பத்துக்கு நிவாரணமாக ரூ. 2 லட்சம் தரவேண்டுமென தேசிய மனித உரிமைக் கமிஷன் உத்திர விட்டும்கூட, இன்றுவரை மாநில அரசு அதைச் செயல்படுத்தவில்லை'' என்று குற்றம் சாட்டுகிறார், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியான கிருஷ்ணய்யர். கேரள சிவில் உரிமைக் கழக அமைப்பாளரான முகுந்தன் மேனன், ''கேரளா ஒரு போலீசு ராஜ்ஜியமாக வேகமாக மாறிவருகிறது'' என்று போலீசு அட்டூழியங்களைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார்.

போலீசு அதிக்கிரமங்கள் மட்டுமல்ல; கிரிமினல் குற்றங்களும் கேரளாவில் பெருகிவிட்டன. தேசிய குற்றவியல் பதிவுத் துறை, கிரிமினல் குற்றங்களில் நாட்டிலேயே மூன்றாவது இடத்துக்கு கேரள மாநிலம் வந்து விட்டதாகக் கூறுகிறது. ஒரு மாதத்திற்கு, ஒரு லட்சம் பேருக்கு 185 குற்றங்கள் என்கிற தேசிய சராசரிக்கும் அதிகமாக, 275 குற்றங்கள் கேரளாவில் நடக்கின்றன என்று புள்ளி விபர ஆதாரங்களை அடுக்குகிறது.

இவற்றைக் கண்டு பீதியடைந்த போலி கம்யூனிஸ்டு முதல்வர், இடதுசாரி அரசைக் கவிழ்க்க சதி நடப்பதாக கருணாநிதியைப் போல் புலம்புகிறார். அண்மையில் கொலைகள் - அட்டூழியங்களில் ஈடுபட்ட 10 போலீசாரை தற்காலிக நீக்கம் செய்தும், 1994-இல் நடந்த துப்பாக்கிச் சூடு பற்றிய விசாரணைக் கமிஷன் முடிவின்படி 18 போலீசாரைக் கைது செய்ய உத்திரவிட்டும் உரிய நடவடிக்கை எடுத்துவிட்டதாக கணக்குக் காட்டுகிறார். சாலை விதிகளை மீறல், சிறு குற்றங்கள் முதலானவற்றையும் சேர்த்து குற்றவியல் பதிவுத்துறை கணக்கு காட்டியுள்ளதாகவும், இவற்றை நீக்கிவிட்டால் தேசிய சராசரியைவிட குறைவானக் குற்றங்களே நடந்துள்ளதாகவும் விளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறார்.

தாங்கள் ஆளும் மாநிலத்தை போலிசு அதிக்கிரமங்களிலும் கிரிமினல் குற்றங்களிலும் முன்னணிக்குக் கொண்டு வந்துவிட்ட போலி கம்யூனிஸ்டுகள், இதர மாநிலங்களில் நடக்கும் போலீசு அட்டூழியங்களை எதிர்க்க ஏதாவது அருகதை இருக்கிறதா?

## 'சமூக நீதி' மாநிலமா? பாலியல் பயங்கரவாதக் கூடாரமா?

'சமூக நீதி' ஆட்சி நடப்பதாகக் கூறப்படும் பீகாரில் ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கு ஒரு பாலியல் வன்முறை என்கிற விகிதத்தில், பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்கள் கேள்வி முறையின்றித் தொடர்கின்றன. கடந்த அக்டோபர் 15-ந் தேதியன்று நாளந்தா மாவட்டம் அமீரா கிராமத்தில் ஷோபா குமாரி என்ற 7 வயதான சிறுமியை வன்புணர்ச்சி செய்து கொன்று விட நடந்த முயற்சியில் அவள் தப்பித்து வந்துள்ளதை அறிந்து, அம்மாநிலமே பீதியில் உறைந்து போயுள்ளது. கடந்த செப்டம்பர் மாதத்தில் நவாடா மாவட்டத்தில் 17 பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாயினர். ராஞ்சி நீதிமன்ற வளாகத்திலேயே ஒரு தாழ்த்தப்பட்ட பெண், கும்பல் வன்புணர்ச்சிக்குப் பிறகு கொல்லப்பட்டார். மீர்ஜாபூரில் ஒரு யாதவ் சாதி இளைஞன் வீட்டில் திருடியதாக குற்றம் சாட்டி, தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் குண்டு வீசி, இளம் பெண்களை நிர்வாணப்படுத்தி, யாதவ் சாதி இளைஞர்கள் கும்பல் வன்புணர்ச்சியை ஏவினர்.

கடந்த 8 மாதங்களில் மட்டும் 846 பாலியல் வன்முறைகள் நடந்துள்ளன. பீகாரில் லல்லு பிரசாத் யாதவின் மனைவி ராப்ரிதேவியின் 13 மாத கால ஆட்சியில் 1438 பாலியல் வன்கொடுமைகள் பெண்கள் மீது ஏவப்பட்டுள்ளன. போலீசு குற்றப் பதிவேடுகளின் படி, 1995-ஆம் ஆண்டில் நடந்த பாலியல் குற்றங்களைவிட, 1997-ஆம் ஆண்டில் இருமடங்கு அதிகமாக நடந்துள்ளன.



தீவிரமாகிவிட்ட பாலியல் கொடுமைகளுக்கு எதிராக பாட்னாவில் பெற்றோர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

14 வயதான இளஞ்சிறுமி ரேணுகுமாரி மணமாகாத நிலையில் வன்புணர்ச்சிக்கு ஆளாகி ஒரு குழந்தைக்கு தாயாகியுள்ள அவலம் அண்மையில் அம்பலமாகியது. லல்லுவின் கூட்டாளிகளான கிரிமினல் அமைச்சர்களின் விசுவாசியான தீனதயாள்ராஜ் என்ற ரௌடியாலும், மகராஜ்கன்ச் போலீசு ரௌடிகளாலும் அச்சிறுமி இந்நிலைக்கு ஆளாகியுள்ளாள். பாதிக்கப்பட்ட அச்சிறுமியின் தாய் இக்கொடுமைக்கு எதிராக போலீசிடம் முறையிட்டு பலனில்லாமல், நீதிமன்றத்தில் முறையிட்ட பிறகே வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் விசாரணையும் மருத்துவ சோதனைகளும் இன்றுவரை நடத்தப்படாமல் வழக்கை இழுத்தடித்து கிடப்பில்போடும் முயற்சியே தொடர்கிறது.

''இவை வெளியே தெரிந்த ஒரு சில கொடுமைகள்தான். இன்னும் மூடி மறைக்கப்பட்ட விவகாரங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் பீகாரில் எந்தவொரு பெண்ணுக்கும் பாதுகாப்பில்லை என்ற உண்மை தெள்ளத் தெளிவாகும். பாலியல் வன்முறை என்பது சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு தகுதியாக மாறிவிட்டது; கிரிமினல்கள் அரசியல் கட்சிகளில் தலைமைக்கு உயர்வதற்கான ஏணியாகி விட்டது'' என்று பாட்னாவின் சமூக ஆய்வியல் கழகம் குற்றம் சாட்டுகிறது. ''பீகாரில் பெண்களுக்கு எதிராகப் போலீசாரே நடத்திவரும் பாலியல் வன்முறைகள் எல்லை மீறிவிட்டது. தினமும் மதுவும் மங்கையும் ஏற்பாடு செய்யாத கீழ்நிலை போலீசாரை, உயர்நிலை போலீசு அதிகாரிகள் பழிவாங்குகிறார்கள்'' என்று பாட்னா உயர்நீதி மன்றமே அண்மையில் ஒப்புக் கொண்டுள்ளது.

தீவிரமாகிவிட்ட பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராகவும், பெண்களுக்குப் பாதுகாப்புக் கோரியும் தலைநகர் பாட்னாவில் பள்ளி - கல்லூரி மாணவிகளும் பெற்றோர்களும் கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். ஏற்கனவே தனது ஊழல் கொள்ளை - கிரிமினல் குற்றங்களால் நாறிப் போயுள்ள லல்லு கும்பலின் கேடு கெட்ட ஆட்சி, இப்புதிய நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் வழியில் உயர் கல்வி ஏட்டுச் சுரைக்காய் தானா?

**உயர் மருத்துவத் தேர்வினை தமிழ் மொழியில் எழுதிய மருத்துவர் சிவசுப்பிரமணிய ஜெயசேகருக்கு தி.மு.க. ஆட்சியில் நேர்ந்த அவலம்.**

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என முழங்கும் தமிழக அரசு அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. ஆங்கில மழலையர் பள்ளிகளை அகற்றக் கூட முன்வராத அரசின் இந்த வெற்று முழக்கம் மோசடித்தனமானது என்பதை அதனுடைய அன்றாட செயல்கள் நிரூபிக்கின்றன.

சமூக நலனில் அக்கறை கொண்ட ஐ.சிவசுப்பிரமணிய ஜெயசேகர் என்கிற மருத்துவர், தமது பட்ட மேற்படிப்புக்கான (எம்.டி) ஆய்வுரையையும், இறுதித் தேர்வுகளையும் தமிழில் எழுதி, நடைமுறைப்படுத்தி உள்ளார். இதை வரவேற்க வேண்டிய தமிழக அரசோ, இம்முயற்சியைக் கருக்கி விடுவதில்தான் கண்ணும் கருத்துமாக உள்ளது.

சிவசுப்பிரமணிய ஜெயசேகர் மருத்துவ மாணவராக இருந்த காலந்தொட்டே பல்வேறு இதழ்களில் மருத்துவ அறிவியல் கட்டுரைகளை எளிய தமிழில் எழுதி, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருபவர்.

இதே போல் அரசு மருத்துவராகப் பல கிராமங்களில் பணிபுரிந்த இவர் உழைக்கும் மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றவர். மருத்துவத் துறையில் மட்டுமின்றி சமூக நலனிலும் அக்கறை கொண்டவர்.

1995-ஆம் ஆண்டு பொது மருத்துவத் துறையில் பட்ட மேற்படிப்புக்காக (எம்.டி), தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார் சிவசுப்பிரமணிய ஜெயசேகர். அன்றிலிருந்து புற நோயாளிகள் சீட்டு, நோய்க்குறிப்பு, விடுவிப்புச் சீட்டு அனைத்தையும் கடந்த 3 ஆண்டுகளாக தமிழில் எழுதி வருகிறார்.

''தமிழில் எழுதுவதால், விட்டுப் போன நோய் அறிகுறிகள், தவறுதலாகக் குறிக்கப்பட்ட அறிகுறிகளை நோயாளிகள் சுட்டிக் காட்டுவதால் திருத்திக் கொள்ள முடிகிறது...'' என்கிறார் ஜெயசேகர், எத்துணை ஆழ்ந்த சமூக அக்கறை!


இந்த அனுபவத்திலிருந்து, ''பொதுவாகக் கல்வியை, அதிலும் குறிப்பாக மருத்துவக் கல்வியை தாய் மொழி வாயிலாகக் கற்பிப்பதே சரியானது என்பது என் அனுபவம். ஏனெனில் சிற்றூர்களில் நான் பணியாற்றிய போது, நோயாளிகள் தமிழில் தான் தங்கள் நோய் பற்றி விளக்குவார்கள். நானும் தமிழில்தான் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவேன். இதனால் என் மருத்துவப் பணி எளிதாகிறது. அதனால்தான் நான் பட்ட மேற்படிப்புத் தேர்வைத் தமிழில் எழுதத் துணிந்தேன்'' என்று முடிவு செய்கிறார் ஜெயசேகர்.

இம்முடிவுக்கு வந்தபின், துணிவுடன் முதலில் 1998 ஜூலையில் 'மேல் செரிமான மண்டல இரத்தக் கசிவுகள்: அகநோக்கி ஆய்வு' என்ற தமது பட்ட மேற்படிப்புக்கான ஆய்வுரையைத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதிப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்தார்.

அடுத்து செப்டம்பர் 16,17,19 ஆகிய நாட்களில் நடைபெற்ற பல்கலைக் கழக இறுதித் தேர்வுகளைத் தமிழில் எழுதினார். இதைத் தொடர்ந்து 24-ஆம் தேதி நடந்த செய்முறை, வாய்மொழித் தேர்வுகளிலும் தமிழிலேயே விடை தந்த பொழுது, தேர்வாளர்கள் தங்களால் மதிப்பீடு செய்ய இயலாது எனக் கூறிவிட்டனர்.

தமிழ்நாட்டில் தமது தாய் மொழியில் மருத்துவ அறிவியல் பற்றி ஆற்றல்மிகு கட்டுரைகள் ஏறத்தாழ 150-க்கு மேல் எழுதி பாராட்டுப் பெற்ற ஒரு மருத்துவர், தமது முதுநிலை மருத்துவப் பட்டத்திற்கான ஆய்வுரையையும், இறுதித் தேர்வுகளையும் தமது தாய்மொழியாம் தமிழிலேயே எழுதுவது என்று முடிவு செய்தது தீரமிக்க செயல். இவரது இம்முடிவை சக மருத்துவர்கள், சார் மருத்துவப் பணியாளர்கள் பலரும் வரவேற்றுள்ளனர்.

**மருத்துவர் ஜெயசேகரால் தமிழில் எழுதப்பட்ட நோய்க் குறிப்புச் சீட்டு**




தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட மருத்துவ நூல்களையும் அவற்றிலுள்ள கலைச் சொற்களையும் கையாண்டுதான் இவர் தேர்வுகளை எழுதியுள்ளார். இந்தத் துணிவான முயற்சியை ஆதரித்து பல்கலைக் கழகம் இவரது விடைத் தாள்களைத் திருத்தி இருக்க வேண்டும்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என முழங்கும் தி.மு.க. அரசு தனது இம்முயற்சிக்கு ஆதரவு தரும் என நம்பினார். தமது முயற்சியைத் துறைத் தலைவர்கள் எதிர்த்த போது, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் தமக்கு உதவுவார் எனக் கருதி அவரைச் சந்தித்தார். தமது முயற்சி பற்றி விளக்கி, உதவி கேட்ட போது, இது பெரும் முட்டாள்தனம் என அமைச்சர் நிராகரித்துவிட்டார். கலை, அறிவியல் பாடங்களை ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள் தமிழில் விடையளிக்க உரிமையிருப்பது, முன்னாள் கல்லூரி முதல்வரான அமைச்சருக்கு நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும், சிவசுப்பிரமணிய ஜெயசேகரின் முயற்சியை வரவேற்று ஆதரிப்பதற்கு பதில், சாடி நிராகரித்தது, அமைச்சரின் 'தமிழ்ப் பற்றை' அம்பலமாக்குகிறது.

ஜெயசேகரின் ஆய்வுரையைப் படிக்க நேர்ந்த, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அறி

**தொடர்ச்சி 24ஆம் பக்கம்**



படிப்பகம்

www.padippakam.com

# 'மார்க்சிஸ்ட்' கட்சி மாநாடு:
# சேற்றிலிருந்து புதை குழியை நோக்கி...

கல்கத்தாவிலுள்ள தியாகராசா அரங்கில், 34 ஆண்டுகளுக்கு முன்பு 'மார்க்சிஸ்ட்' கட்சியைத் தொடங்கி அதன் 7-வது மாநாட்டை நடத்தியபோது, அன்றைய 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைவரான பி.டி. ரணதிவே, காங்கிரசுக் கட்சியை நாட்டின் முதல் எதிரியாக வரையறுத்தார். அப்போது வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான டாங்கே, வலதுசாரி பிற்போக்கு ஜனசங்கம் மற்றும் சுதந்திரா கட்சியின் வளர்ச்சியை முறியடிக்க 'முற்போக்கான' காங்கிரசுக் கட்சியை ஆதரிக்கும் நிலையை எடுத்து, வலது கம்யூனிஸ்ட் கட்சியை காங்கிரசின் வாலாக மாற்றினார். டாங்கேயின் துரோகப் பாதையை எதிர்த்து சவடால் அடித்து வந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி, 34 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது கல்கத்தாவில் நஸ்ருல்மன்ச்சா அரங்கில் அண்மையில் நடத்திய 16-வது மாநாட்டில் டாங்கேயின் துரோகப் பாதையை வெளிப்படையாக உயர்த்திப் பிடித்துள்ளது. அன்றைய ஜனசங்கத்தின் புதிய அவதாரமான பாரதீய ஜனதாவை முறியடிக்க 'மதச்சார்பற்ற'' காங்கிரசுக் கட்சியை ஆதரிப்பதென மாநாட்டில் முடிவு செய்துள்ளது. 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தாய்க் கட்சியான வலது கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு முன்னோடியாக, சென்னையில் நடந்த மாநாட்டில் காங்கிரசுக் கட்சியை ஆதரிக்கும் முடிவை ஏற்கனவே எடுத்துள்ளது.

ஏறத்தாழ 7 ஆண்டுகளுக்கு முன்பு மே. வங்கத்தைச் சேர்ந்த 'மார்க்சிஸ்ட்' கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரமான சைபுதீன் சவுத்திரி, இதே வழியை முன்வைத்து வாதிட்டபோது அவர் மத்தியக் கமிட்டியிலிருந்து நீக்கப்பட்டார். நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டு அவர் முடக்கப்பட்டார். பாரதீய ஜனதா, காங்கிரசு - இரண்டுமே நாட்டின் எதிரிகள்தான்; இவற்றில் எந்தக் கட்சியையும் எந்த நிலையிலும் ஆதரிக்க முடியாது என்று அப்போது விளக்கமளித்த 'மார்க்சிஸ்டுகள்' சண்டிகரில் நடந்த தமது கட்சியின் 15-வது மாநாட்டிலும் இதை உறுதிப்படுத்தினர்.

இப்போது இந்த நிலையை சந்தர்ப்பவாதமாக நிராகரித்து விட்டு, காங்கிரசுக்குக் காவடி தூக்கும் முடிவை எடுத்துள்ளனர். ''காங்கிரசு, பாரதீய ஜனதா - இரண்டுமே நாட்டின் எதிரிகள்தான். அவற்றிலே பாரதீய ஜனதாதான் பிரதான எதிரி. அன்று வகுப்புவாத பாரதீய ஜனதா அதிகாரத்தில் இல்லை. இன்று அது அதிகாரத்துக்கு வந்துவிட்ட நிலையில் பிரதான எதிரியை வீழ்த்த இரண்டாம் பட்ச எதிரியுடன் கூட்டுச் சேருவதில் தவறில்லை'' என்று தமது பித்தலாட்டத்துக்கு சித்தாந்த விளக்கம் வேறு அளிக்கின்றனர்.

இரண்டு எதிரிகளில், அதிகாரத்தில் எது உள்ளதோ - அதுவே பிரதான எதிரி என்றால், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் வாதப்படி தேர்தலுக்கு முன்பு வரை காங்கிரசுதான் பிரதான எதிரி; எனவே இரண்டாம் பட்ச எதிரியான பாரதீய ஜனதாவுடன் 'மார்க்சிஸ்டுகள்' கூட்டணி கட்டி காங்கிரசை வீழ்த்தியிருக்க வேண்டும். ஆனால் அப்படி எந்தக் கொள்கை முடிவும் எடுக்கப்படவில்லையே, அது ஏன்? காங்கிரசுக்குக் கைத்தாளம் போடுவதை மூடிமறைக்க 'மார்க்சிஸ்டுகள்' முன்வைக்கும் வாதமே அவர்களை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

சுர்ஜித் - ஜோதிபாசு கும்பலால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த துரோகப் பாதையை 'மார்க்சிஸ்டு' கட்சியிலுள்ள ஒரு சிலர் மட்டுமின்றி 'இடதுசாரி' கூட்டணியிலுள்ள பார்வர்டு பிளாக், புரட்சி சோசலிஸ்டு கட்சி ஆகியனவும் கடுமையாகச் சாடியுள்ளன. கட்சி மாநாட்டிலே பிரகாஷ் கரத் தலைமையிலான ஒரு சிறு குழுவும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. எனவே தமது சந்தர்ப்பவாதத்தை மூடிமறைத்துக் கொண்டு, ''பா.ஜ.க. அரசு கவிழ்ந்து காங்கிரசு ஒரு மாற்று அரசு அமைக்குமானால், அதற்கு பிரச்சினை அடிப்படையிலான ஆதரவு தருவோம். காங்கிரசு கூட்டணியிலோ, அதன் அரசாங்கத்திலோ பங்கேற்க மாட்டோம். இந்தக் கொள்கை அடுத்த பொதுத் தேர்தல் வரை மட்டுமே நீடிக்கும். இதற்கிடையில் காங்கிரசு - பாரதீய ஜனதா அல்லாத, அதற்கு மாற்றாக மூன்றாவது அணியைக் கட்ட கடுமையாக முயற்சிப்போம்'' என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். காங்கிரசை ''மதச்சார்பற்ற சக்தி'' என்று வேறு சித்தரிக்கின்றனர். வகுப்புவாத பாரதீய ஜனதாவை முறியடிக்க காங்கிரசு உள்ளிட்டு அனைத்து மதச்சார்பற்ற சக்திகளின் முன்னணியைக் கட்ட வேண்டும் என்கின்றனர்.

காங்கிரசுக் கட்சியை எந்தவொரு முட்டாள்கூட மதச் சார்பற்ற கட்சி என்று ஏற்க மாட்டான். ஷாபானு ஜீவனாம்ச வழக்கில், இசுலாமிய அடிப்படைவாதிகளுக்கு அடிபணிந்து படுபிற்போக்கான ''ஷாரியத்'' சட்டத்தை அது உயிர்ப்பித்தது. இந்து வெறியர்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து கொண்டு, அயோத்தி பாபர் மசூதியில் இந்துவெறியர்கள் திருட்டுத்தனமாக வைத்த ராமன் சிலையை பூசை செய்ய அனுமதியளித்தும், ராமன் கோயில் கட்ட செங்கல் பூசை - ரதயாத்திரை மூலம் இந்து வெறியர்கள் ஆயிரக் கணக்கான முஸ்லிம்களை நரவேட்டையாடவும், கரசேவை என்ற பெயரில் மசூதியை இடிக்கவும், நாடெங்கும் கலவரத் தீயில் சிறுபான்மையினர் சிக்கி மடியவும் துணை நின்ற காங்கிரசுக் கட்சியை மதச்சார்பற்ற கட்சி என்று நம்புவதற்கு நாட்டு மக்கள் இளிச்சவாயர்கள் அல்ல.

மேடைக்கு மார்க்சியம்; பிழைப்புக்கு சந்தர்ப்பவாதம்.
'மார்க்சிஸ்ட்' கட்சி மாநாட்டில் சூளுரைக்கும் தலைவர்கள்.



போலிகள் கனவு காண்பது போல, பாரதீய ஜனதா ஆட்சி கவிழ்ந்து சோனியா தலைமையில் காங்கிரசு ஒரு மாற்று அரசை அமைக்க பாசிச ஜெயாவுடன் கூட்



படிப்பகம்

www.padippakam.com

# நகர்ப்புற குட்டி முதலாளிகள் கூடாரமாக போலி கம்யூனிஸ்ட் கட்சிகள்

நடந்து முடிந்த போலி கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநாடுகளில் பங்கேற்ற பிரதிநிதிகளை சற்று உற்றுப் பார்த்தாலே போதும்; இக்கட்சியின் வர்க்கத் தன்மை எப்படிப்பட்டது என்பது தெளிவாகி விடும்.

சென்னையில் நடந்த வலது கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், சட்டையின் ஊடாகத் தெரியும் பூணூல் அணிந்த பார்ப்பனர்களும், நெற்றியில் மெல்லிய சிவப்பு நாமம் தீட்டியவர்களும் பிரதிநிதிகளாகப் பங்கேற்றனர்.

கல்கத்தாவில் நடந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளில் 60%-க்கும் மேலானோர் நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் மேட்டுக்குடி தொழிலாளர்கள் ஆவர். இவர்களில் பெரும்பாலோனோரின் மாத வருமானம் ரூ. 5,000 முதல் ரூ. 10,000-க்கும் மேலாகும்.

இப்படி நடுத்தர வர்க்கத்தினரின் - குட்டி முதலாளிகளின் கட்சியாக 'மார்க்சிஸ்ட்' கட்சி மாறிவிட்டதால் தான் அதன் உறுப்பினர் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் 75,000 பேராக அதிகரித்துள்ளது. 1994-இல் 6,31,171 பேராக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை இப்போது 7,17,525 பேராக உயர்ந்ததற்கு இதுவே அடிப்படையாகும். ஆனாலும் இந்த வளர்ச்சி கேரளா, மே.வங்கம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மட்டும் தான். பிற மாநிலங்களில் பெயரளவுக்கே முன்னேறியுள்ளது. குறிப்பாக, இந்தி பேசும் வடமாநிலங்களில் கட்சி தேய்ந்து கட்டெறும்பாகிவிட்டது.

இதேபோல, தொழிலாளர் - விவசாய சங்க உறுப்பினர் எண்ணிக்கை கடுகளவே உயர்ந்துள்ள அதேசமயம், நகர்ப்புற இளைஞர், மகளிர் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை தான் பெருமளவு உயர்ந்துள்ளது. தொழிலாளி, விவசாயி ஆகிய அடிப்படை வர்க்கங்களின் உரிமைக்கான எந்தவொரு போராட்டத்தையும் நாடு தழுவிய அளவில் நடத்தாததும், அதற்கான திராணியின்றிக் கிடப்பதன் விளைவுதான் இது. நாடு தழுவிய அளவில் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் இப்போது தொழிலாளர் பலத்தில் 4-வது இடத்துக்குச் சரிந்து விட்டதை தொழிலாளர் நலத்துறை ஆவணங்களே நிரூபித்துக் காட்டுகின்றன. அக்கட்சியின் தலைமையிலான இந்திய மாணவர் சங்கம் மே. வங்கத்திலேயே பலமிழந்து செல்லாக்காசாகி விட்டது.

எனவே, இந்தி பேசும் மாநிலங்களில் கட்சியை முனைப்பாகக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு கட்சியின் அமைப்பு விதிகளை மாநாட்டில் தளர்த்தியுள்ளனர். கட்சித் தலைமையிலான மக்கள் திரள் அமைப்புகளில் 3,4 ஆண்டுகள் செயல்பட்டவர் தான் கட்சி உறுப்பினராக முடியும் என்ற விதியைத் தளர்த்தி, தனிச் சிறப்பான நிலைமைகளை ஒட்டி, மாநிலக் கமிட்டி யாரையும் முழு உறுப்பினர் தகுதியுடன் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம் என தீர்மானித்துள்ளனர். கட்சி மாறிகள், பிழைப்புவாதிகள், சந்தர்ப்பவாதிகள், கிரிமினல்கள் எனப் பலரையும் கட்சியில் சேர்த்துக் கொண்டு, அடுத்து வரும் தேர்தலுக்கு ஓட்டுப் பொறுக்குவதற்கான புதிய ஏற்பாடுதான் இது.

கல்கத்தாவில் நடந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி மாநாட்டில் வெளிநாட்டு 'கம்யூனிஸ்ட்' கட்சிப் பிரதிநிதிகளுக்கும், மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் குளிர்பதன வசதி கொண்ட தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து பிரதிநிதிகளுக்கும் விருந்தினர் - பத்திரிகையாளர்களுக்கும் தினமும் 3 புட்டிகள் கோகோகோலா வழங்கப்பட்டன. கோகோகோலாவைக் குடித்துவிட்டு "ஏகாதிபத்தியம் ஒழிக!" என்று பிரதிநிதிகள் முழக்கமிட்டார்களாம்!

டணி சேர்ந்தால், அந்த அரசை இப்போலிகள் ஆதரிப்பார்களா? அல்லது எதிர்ப்பார்களா? சோனியா தலைமையிலான மாற்று அரசு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க பாசிச ஜெயா கும்பலின் ஆதரவைப் பெற, தி.மு.க. ஆட்சியைக் கலைத்தால் இப்போலிகள் அதை எதிர்ப்பார்களா? அல்லது சோனியாவின் 'மதச் சார்பற்ற' மாற்று அரசு கவிழ்ந்து விடக்கூடாது என்பதற்காக தி.மு.க. ஆட்சிக் கலைப்பை ஏற்பார்களா? தெரியவில்லை. நாற்காலி சுகம் காண்பதே லட்சியமாகி விட்ட பிறகு இப்போலிகள் எத்தகைய சந்தர்ப்பவாதப் பித்தலாட்டத்தையும் நியாயப்படுத்தக் கிளம்பி விடுவார்கள் என்பதை மறுக்கவும் நியாயமில்லை.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இந்துவெறி பாசிஸ்டுகளை நாடாளுமன்றத் தேர்தல் வழிமுறைகள் மூலம் வீழ்த்திட முடியுமா என்பதுதான். அது சாத்தியம் என்றால், போலி கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் நடந்த ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயே, இந்துவெறி பாரதீய ஜனதாவின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு முடமாகியிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. மாறாக, புதிய பலத்துடன் அது அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளதற்குக் காரணம் என்ன? உண்மையில் இந்துவெறியர்களின் பலம் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் இல்லை. நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் அதன் பலம் உள்ளது. எனவே நாடாளுமன்ற தேர்தல் வழிமுறைக்கு வெளியே, சக்திமிக்க மக்கள் திரள் போராட்டங்கள் மூலம்தான் இந்துவெறி பாசிஸ்டுகளை முறியடிக்க முடியும். இந்த உண்மை மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட பிறகும்கூட, திரும்பவும் நாடாளுமன்ற செக்குமாட்டுப் பாதையிலேயே போலிகள் பீடு நடை போடுகின்றனர்.

இப்படி அரசியல் - சித்தாந்த ரீதியாக முதலாளித்துவக் கட்சியாக சீரழிவதை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வரும் 'மார்க்சிஸ்டுகளின்' கட்சியில், இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே குழுச் சண்டைகள் புழுத்து நாறுகிறது. கேரளாவில் அச்சுதானந்தன் - சி.ஐ.டி.யு. குழுக்கள், மே. வங்கத்தில் ஜோதி பாசு - பிமன்போஸ் குழுக்களின் நாய்ச் சண்டைகள் போதாதென்று, பிரகாஷ் கரத், எச்சூரி முதலான இளந் தலைவர்களைச் சுற்றி புதிய குழுக்களும் அக்கட்சியில் உருவாகியுள்ளன. தீவிரமாகி விட்ட குழுச் சண்டைகள் காரணமாகவே,






படிப்பகம்

www.padippakam.com

மாநாட்டில் மத்தியக் கமிட்டியைத் தேர்வு செய்த பிறகு, அரசியல் தலைமைக் குழு தேர்தல் நடைபெறவில்லை. இப்படி அரசியல் தலைமைக் குழு தேர்வு தள்ளிப் போடப்பட்டிருப்பது அனைத்துலக கம்யூனிச இயக்க வரலாற்றில் இதுவரை நடந்திராத அதிசயமாகும். ஆனாலும் குழுச் சண்டைகளை மூடி மறைத்து, நடைபெறவுள்ள 4 வடமாநில இடைத்தேர்தல் வேலைகள் காரணமாகவே, அரசியல் தலைமைக் குழுவைத் தேர்ந்தெடுப்பதை தள்ளி வைத்துள்ளதாக இப்போலி கம்யூனிஸ்டுகள் பூசி மெழுகுகின்றனர்.

இவை ஒரு புறமிருக்க, நாட்டை மறு அடகுவைக்கும் "காட்" ஒப்பந்தத்தையும், தாராளமயப் பொருளாதாரக் கொள்கையையும் எதிர்த்து நாக்கைச் சுழற்றி வீரதீர சவடால் அடித்து வந்த இப்போலிகள் இப்போது, அத்தகைய போராட்டங்களையும் கிடப்பில் போட்டுவிட்டனர். நாட்டை மறுகாலனியாக்கி வரும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக எவ்விதப் போராட்டத் திட்டமும் மாநாட்டில் அறிவிக்கப்படவில்லை. அதேசமயம், தாராளமயக் கொள்கையை மன்மோகன் சிங்கே அதிசயக்கும் அளவுக்கு ஆதரித்து, அன்னிய முதலீடுகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும் மே. வங்க தொழிலமைச்சர் சோமனாத் சட்டர்ஜியை மத்திய கமிட்டி உறுப்பினராக்கியுள்ளனர்.

சித்தாந்த ஓட்டாண்டித்தனமும், பாசிச காங்கிரசுக்குக் காவடி தூக்கும் துரோகத்தனமும், தீவிரமாகி விட்ட குழுச் சண்டைகளும் இன்னுமொரு முதலாளித்துவக் கட்சியாக சீரழிந்து வருவதைத்தான் 'மார்க்சிஸ்டு' கட்சி மாநாடு நிரூபித்துக் காட்டியுள்ளது. கேடுகெட்ட முதலாளித்துவ நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பது, புரட்சியைப் பூசையறையில் வைப்பது, அன்னிய ஏகபோக மூலதனத்தை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பது, ஆளும் வர்க்கக் கட்சிகளின் தரகர்களாகச் சீரழிவது - என்பதையே இம் மாநாட்டின் மூலம் போலிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர். ஆனால் புரட்சிகரமான வாய்ச் சவடால்கள் மூலம் இவற்றைத் திறமையாக மூடி மறைக்க முயற்சிக்கின்றனர்.

போலி கம்யூனிஸ்டுகளின் இந்த மோசடிகளை அக்கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகள் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இக்கட்சி என்றாவது ஒருநாள் புரட்சிக்குத் தலைமையேற்று வழி நடத்தும் என்று இனிமேலும் நம்பி ஏமாற முடியாது. கட்சித் தலைமையின் துரோகத்தை மக்களிடம் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த அவர்கள் முன் வர வேண்டும். நக்சல்பாரி புரட்சியாளர்களுடன் ஐக்கியப்பட்டு, மார்க்சிய - லெனினியத்தைப் பற்றிப் பாதுகாத்து புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் இன்றைய மகத்தான பணிக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

• குமார்

# நோபல் பரிசும் ஏகாதிபத்திய நலனும்

உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படும் நோபல் பரிசு, இந்த ஆண்டு, இந்திய நாட்டைச் சேர்ந்தவரும், பொருளாதாரப் பேராசிரியருமான அமர்த்யா சென்னுக்குக் கிடைத்துள்ளது. மேற்கு வங்கத்தில் பிறந்து, வளர்ந்து, படித்து, பட்டம் பெற்ற அமர்த்யா சென், தற்பொழுது இங்கிலாந்து நாட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

"அமர்த்யா சென், பிற முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களைப்போன்றவர் அல்ல; ஏழைகளின், கிராமங்களின் முன்னேற்றம் குறித்து அக்கறை கொண்டவர். கல்வி, சுகாதாரம், பொது மருத்துவம் போன்ற சமூக நலத் துறைகளில் அரசு அதிக அளவு முதலீடு செய்ய வேண்டும். கல்வி, விவசாய சீர்திருத்தம் போன்ற துறைகளில் இந்திய அரசு அக்கறை செலுத்தாததால்தான், நாடு முன்னேறவில்லை என்ற இடதுசாரி சிந்தனை கொண்டவர்" என்று அமர்த்யா சென்னைப் பற்றி இந்தியப் பத்திரிகைகள் புகழ்ந்து எழுதியுள்ளன.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த "நோபல்" என்ற ஏகபோக நிறுவனத்தைச் சேர்ந்த டிரஸ்டினால் வழங்கப்படும் நோபல் பரிசு, ஏழை நாடான இந்தியாவைச் சேர்ந்த அமர்த்யா சென்னுக்கு வழங்கப்பட்டிருப்பது கூட ஆச்சரியப்படத் தக்கதல்ல. ஆனால், "கல்வியா, தனியாருக்கு விடு; ரேஷன் கடையை இழுத்து மூடு; விவசாயத்திற்கு மானியத்தை வெட்டு" என்று ஏழை நாடுகளுக்கு, தாராளமயம் என்ற பெயரில் கட்டளையிட்[illegible]ரும் மேற்குலகைச் சேர்ந்த ஏகபோக [illegible]வனம், அதற்கு மாறான பொருளாதாரக் கருத்துக்களைக் கொண்ட, இடதுசாரி என்ற முத்திரை குத்தப்பட்ட அமர்த்யா சென்னுக்கு வழங்கியிருப்பதுதான் ஆச்சரியப்படத்தக்கது.

எனினும், ஏகாதிபத்தியங்களின் பொருளாதார — அரசியல் நலன்களை ஒட்டித்தான், நோபல் பரிசு வழங்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டால், இந்த ஆச்சரியமும் அல்பாயுசில் மறைந்துவிடும். இதை நாம் வறட்டுத்தனமாகக் கூறவில்லை; ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பதாலேயே, நோபல் பரிசு பெறுவதற்கு அறிஞர்கள் தேர்ந்தெடுக்கும் அடிப்படையைக் கொச்சைப்படுத்தவுமில்லை. சென்ற ஆண்டு பொருளாரத்திற்காக நோபல் பரிசு பெற்ற இரு அறிஞர்களின் மேதைமைக்கு நேர்ந்த அதோகதியைத் தெரிந்து கொண்டால், நோபல் பரிசின் இலட்சணத்தைப் புரிந்து கொண்டு விடலாம்.

அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் மெர்டன், மைரோன் ஷோல்ஸ் என்ற இரு பொருளாதார நிபுணர்கள், பங்குச் சந்தை முதலீடு குறித்து நடத்திய ஆய்வுக்காக சென்ற ஆண்டு பொருளாதாரத் துறையில் நோபல் பரிசைப் பெற்றனர். இவர்களுக்கு நோபல் பரிசு வழங்கியதையும் பங்குச் சந்தை சூதாட்டம்தான் ஏகாதிபத்திய நிறுவனங்களின் முக்கியத் தொழிலாக மாறியிருப்பதையும் இதோடு முடிச்சுப் போட்டு பார்த்துக் கொள்ளுங்கள். இந்த இரு பொருளாதார நிபுணர்களும் பங்குதாரராக இருந்து நிர்வகித்து வந்த, "லாங் டெர்ம் கேபிடல் மேனேஜ்மெண்ட்" என்ற நிதி நிறுவனம் இன்று மரணப் படுக்கையில் வீழ்ந்துவிட்டது. 12,000 கோடி ரூபாயைக் கொட்டினால்தான் அந்த நிறுவனம் திவாலாவதைத் தடுக்க முடியும்!

அந்த அமெரிக்க நிறுவனம் திவாலானதைப் போல, உலகப் பொருளாதாரமும் போண்டியாகி விடுமோ என்ற அச்சம் ஏகாதிபத்தியவாதிகளைப் பிடித்து ஆட்டத் துவங்கிவிட்டது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, மெக்சிகோ நாட்டில் இந்த அபாய மணி ஒலித்தது. மெக்சிகோவில் அமெரிக்க டாலரைக் கொண்டு வந்து கொட்டிய ஏகாதிபத்தியங்கள், "தாராளமயமாக்கலை இம்மி பிசகாமல் நடைமுறைப் படுத்தினால், எந்தத் தொந்தரவுமில்லை" என்று ஆருடம் கூறினார்கள்.

அவர்கள் கூறியபடி, தாராளமயமாக்கலை இம்மி பிசகாமல் நடைமுறைப்படுத்திய, தென் கொரியா, தாய்லாந்து, இந்தோனேஷிய நாடுகள், மெக்சிகோவாவை விட மோசமாக போண்டியாகிப் போயின. தென் கிழக்கு ஆசிய நாடுகளைத் தூக்கி நிறுத்துவதற்குள், ஜப்பான் மண்ணைக் கவ்வியது; ஜப்பானைத் தொடர்ந்து ரசியாவும் மீள வழியில்லாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது.

இப்பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக ஏற்பட்ட சமூக நெருக்கடிகள் சகிக்கவே முடியாததாக மாறியதால், இந்தோனேஷியா மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கி, அந்நாட்டு அதிபர் சுகர்டோவைப் பதவியில் இருந்து தூக்கியெறிந்தனர்; ஜப்பானில் ஏற்கனவே இருந்த மந்திரிசபை கவிழ்ந்து, புது மந்திரிசபை பதவியேற்றது. ரசியாவில், அதிபர் யெல்ட்சின்



படிப்பகம்

போலி கம்யூனிஸ்டுகளுடன் சமரசம் செய்து கொண்டார்; முன்னாள் போலி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிரிமகோவ் ரசியாவின் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.



நோபல் பரிசு இந்தியாவைச் சேர்ந்த அமர்த்யா சென்னுக்கு வழங்கப் பட்டுள்ளதைக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை.

இப்பொருளாதார வீழ்ச்சியால் நேரடியாகப் பாதிக்கப்படாவிட்டாலும், தாராள மயமாக்கலின் எதிர் விளைவாக, ஜெர்மனியில் நடந்த தேர்தலில், ஆட்சியில் இருந்த வலதுசாரி கிறித்துவ ஜனநாயகக் கட்சியைத் தோற்கடித்துவிட்டு, சமூக ஜனநாயக் கட்சிக் கூட்டணி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சியும், பிரான்சில் சோசலிசக் கட்சியும் அந்நாடுகளை ஆண்டு வருகின்றன.

இந்த மாற்றங்களைக் காட்டி, ''ஐரோப்பாவில் மீண்டும் கம்யூனிச பூதம்'' என்று ஏகாதிபத்தியவாதிகளும், ''சோசலிச ஆட்சி'' என்று போலி கம்யூனிஸ்டுகளும் டமாரமடிக்கத் தொடங்கிவிட்டனர்; உண்மையைச் சொன்னால், ஐரோப்பா கண்டத்திலுள்ள சில நாடுகளில் நடப்பது கம்யூனிஸ்ட் ஆட்சியோ, சோசலிச ஆட்சியோ அல்ல. நமது நாட்டை ஆண்ட ஐக்கிய முன்னணி போன்ற கதம்ப ஆட்சிதான்.

தாராளமயத்தால் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி, ''ஏழ்மை, வறுமை, வேலையின்மையால் திண்டாடும் கோடிக் கணக்கான உழைக்கும் மக்கள் ஒரு புறம்; உலகத்தின் மொத்த செல்வத்தின் பெரும் பகுதியை அபகரித்துக் கொண்ட கையளவேயான ஏகபோக முதலாளிகள் மறுபுறம்'' என உலகை எதிரும் புதிருமான இரு கூறுகளாகப் பிரித்துவிட்டது. இன்று உலகின் சரி பாதி மக்கள் - 230 கோடி பேர் - வாழும் நாடுகளின் மொத்த ஆண்டு வருமானம், 358 பெரும் கோடீசுவரன்களின் மொத்த சொத்திற்குப் பக்கத்தில் கூட நெருங்க முடியாது.

இந்த ஏற்றத்தாழ்வுகள் சமூகக் கொந்தளிப்புகளை உருவாக்கி, இதைவிட தீவிரமான அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தி விடுமோ என அஞ்சும் ஏகாதிபத்திய அறிஞர்கள், ''தாராளமயமாக்கலை நடைமுறைப்படுத்திக் கொண்டே, சமூகக் கொந்தளிப்புகள் உருவாகிவிடாமல் தடுப்பதற்கு வழியுண்டா?'' என் மண்டையைக் குடைந்த பொழுது விடையாய்க் கிடைத்தவர்தான் அமர்த்யா சென். ''ஒரு நாட்டின் பொருளாதாரத்தை தாராளமயப்படுத்தும் பொழுது, கூடவே, அரசு கல்வி, சுகாதாரம் போன்ற சமூக நலத் துறைகளில் அதிக முதலீடு செய்யும் பொழுதுதான் உண்மையான பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்'' என்கிறார் அமர்த்யா சென்.

அமர்த்யா சென், கூறியிருப்பதன் பின்பாதியை 'இடது' சாரிகள் பிடித்துக் கொள்கின்றனர். முன் பாதியை வலது சாரிகள் சொந்தம் கொண்டாடுகின்றனர். ''அமர்த்யா சென்னை ஆதரிப்பதில் 'இடது'களும், வலதுகளும் இணைந்து அர்த்த நாரீஸ்வரர் போல் காட்சி தருவது, அரசியலிலும் நடக்கும்; முதலாளித்துவ அமைப்பை, நடத்திச் செல்வதில், வலது சாரிகளும், நவீன இடதுகளும் கை கோர்த்துக் கொள்வார்கள்'' என்கிறார் தாராள மயமாக்கலின் தீவிர ஆதரவாளரான சந்தன் மிஸ்ரா என்ற பத்திரிகையாளர். காங்கிரசை அரியணையில் அமர வைக்க இடது - வலது போலிகள் துடிப்பது ஏன் என்று இப்பொழுது புரிகிறதா?

அமர்த்யா சென்னின் ரசிகர் பட்டாளம், ''அவருக்கு எப்பொழுதோ நோபல் பரிசு கிடைத்திருக்க வேண்டும்'' என அங்கலாய்த்துக் கொள்கிறார்கள். தாராளமயத்தை தீவிரமாக ஆதரிக்கும் பத்திரிகையாளர் சந்தன் மிஸ்ரா, இந்த அங்கலாய்ப்புக்கு, ''அதற்கெல்லாம் காலமும் நேரமும் கூடி வர வேண்டாமா?'' எனப் பச்சையாகவே பதில் அளித்துவிட்டார்.

ஆம்... அவர் சொல்வது உண்மைதான். 1991-இல் இந்தியாவைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்து விட்டதற்குப் பரிசாக சுஷ்மிதா சென்னுக்கும், ஐஸ்வர்யா ராய்க்கும் உலக அழகிப் பட்டம்! 1998-இல் சீக்கு பிடித்துக் கிடக்கும் ஏகாதிபத்திய உலகின் நெருக்கடிகளைத் தீர்க்க ஒரு வழியைச் சொன்னதற்காக அமர்த்யா சென்னுக்கு நோபல் பரிசு!!

• ரஹீம்

20 ஆம் பக்கத் தொடர்ச்சி

வியல் தமிழ் வளர்ச்சித் துறைத் தலைவராயிருந்து ஓய்வு பெற்ற முனைவர் இராம. சுந்தரம் மனம் திறந்து பாராட்டி வரவேற்றுள்ளார். இத்துறையிலிருந்து 14 மருத்துவ நூல்களையும் 13 பொறியியல் நூல்களையும், 6 கலைச் சொல்லகராதிகளையும் வெளியிட்டவர் இவர். சிவசுப்ரமனிய ஜெயசேரின் ஆய்வுரையில் சில புதிய கலைச் சொற்களை ஆக்கியுள்ளதை வாழ்த்திப் பாராட்டுகிறார். நுட்பமான மருத்துவச் செய்திகளைக் கூட எளிதில் புரியும்படிக் கூறியுள்ள இவரது திறனைக் கண்டு, தமிழ்ப் பல்கலைக்கழக மருத்துவப் பாடநூலாக்கத் திட்டத்தில் பங்கு கொண்டு நூல்கள் எழுதித்தர வேண்டியுள்ளார். இது தமிழில் மருத்துவக் கல்வி வரவேண்டும் என விரும்புவரின் ஆர்வம்.

இதன்பின் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'பொது மருத்துவம்' என்ற நூலைத் தமிழில் உருவாக்கித் தர ஜெயசேகருக்கு இசைவு தெரிவித்துள்ளது.

''என் தாய் மொழியில் - இம்மாநிலத்தின் ஆட்சி மொழியில் - விடையளிக்கும் உரிமையை அங்கீகரித்து, தமிழில் மதிப்பீடு செய்யத் தகுதியுடைய பேராசிரியர்களைக் கொண்டு மதிப்பிட ஆவண செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சுப்பிரமணிய ஜெயசேகர் மருத்துவப் பல்கலைக் கழகத்திடமும் அரசிடமும் விண்ணப்பித்துள்ளது மிக நியாயமானது. இதைக் கோரும் உரிமை அவருக்கு உண்டு.

அன்டை இலங்கையில் இன்று சிங்கள இனவெறி அரசு இனப்படுகொலைகளைச் செய்து வந்தாலும், அங்கு பல ஆண்டுகளாக பொறியியல், மருத்துவம் உட்பட அனைத்துக் கல்வியையும் தமிழிலேயே கற்க உரிமை பெற்றுள்ளனர் ஈழத் தமிழர்கள்.

இங்கே தமிழக அரசு அனுமதி கொடுத்தும் மத்திய அரசு பொறியியல் கல்வியைத் தமிழில் கற்க அனுமதி மறுக்கிறது. இது ஒரு தேசிய இனத்தின் உரிமையைப் பறித்து ஒடுக்குவதுதான். தமிழ், தமிழினம் எனப் பேசி ஓட்டுப் பொறுக்கிச் சென்றவர்கள் தமிழ் வழி பொறியியல் கல்வியை நிலைநாட்டுவதற்குப் பதில், மத்திய அரசின் இந்த ஒடுக்குமுறைக்குத் துணைபோகிறார்கள்.

மருத்துவக் கல்வியில் தாய் மொழியில் கற்க எந்த முயற்சியும் அரசு இதுவரை எடுக்காதது தவறு. இதனை சிறப்பாகச் செய்ய முடியும் என்று சிவசுப்பிரமணிய ஜெயசேகர் நடைமுறையில் நிரூபித்துள்ளார். அவரது இறுதித் தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடுவது மட்டுமல்ல, அவரது முயற்சியை வரவேற்று, சிறப்பித்துப் பாராட்ட வேண்டியதும் மருத்துவத்தில் தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வருவதும் தமிழக அரசின் கடமை.

தகவல்:
ம.க.இ.க., தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க.: சாதியவாதிகள் - கிரிமினல்களின் கூடாரம்

கொள்கை, கோட்பாடுகளைக் கொண்ட, லட்சியங்களை விட்டுக் கொடுக்காத ஒரே கட்சி என தனக்குத் தானே ஒளிவட்டம் போட்டு ஓட்டுப் பொறுக்கிய கட்சி தான் பாரதீய ஜனதா.

ஏற்கனவே பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் லஞ்ச ஊழல் புழுத்து நாறுகிறது. உ.பி.யில் கட்சி மாறிய கிரிமனல்களை மந்திரிகளாக்கியது, நாடு முழுதும் பா.ஜ.க.வின் பதவி வெறியைத் திரை கிழித்தது. எப்படியாவது ஆட்சியைப் பிடிப்பது, பதவி சுகம் அனுபவிப்பது என்றுள்ள பா.ஜ.க. சாதி - மதவெறி பிடித்த, லஞ்ச ஊழலில் ஊறிய, கிரிமனல்களைக் கொண்ட கட்சிதான் என திரும்பத் திரும்ப நடைமுறையில் அம்பலமாகிறது.

சமீபத்தில் டில்லியில் நடந்த முதல்வர் மாற்றம் இதன் சாதி அரசியலையும், உ.பி. மாநில கிரமினல் - மாஃபியா தலைவன் சிறீ பிரகாஷ் சுக்லா விவகாரம் இதன் கிரிமினல் அரசியலையும் நார் நாராகக் கிழித்து அம்பலப்படுத்தி நாறடித்து விட்டன.

★☆★

இந்தியாவிலேயே கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், மிரட்டிப் பணம் பறித்தல் ஆகியவற்றில் முதலிடம் வகிப்பது டில்லி என மத்திய உள்துறை அமைச்சர் அத்வானியே வாக்குமூலம் தந்துள்ளார்.

சமூக விரோதச் செயல்கள் மட்டுமல்ல, கடும் கோடையில் அடிக்கடியும் நீண்ட நேரமும் மின்சாரம் இல்லாதது; குடிநீர் பற்றாக்குறை; வரலாறு காணாத வெங்காய விலை ஏற்றம்; கலப்பட எண்ணெய்ச் சாவுகள் என அதிகாரிகள், ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட கொடுமைகள், பாரதீய ஜனதா ஆட்சியின் செயலற்ற தன்மையை வெளிச்சமிட்டுக் காட்டின.

இந்நிலையில் வரும் நவம்பர் தேர்தலில் பாரதீய ஜனதா தில்லியில் மீண்டும் வெற்றி பெறுமா என்ற சந்தேகம் உருவானது. இதற்கேற்ப சமீபத்தில் நடந்த கருத்துக் கணிப்பும் தேர்தலில் தோல்வி எனக் கூறியது.

வர்மா முதல்வராக நீடித்தால், தோல்வி உறுதி என முடிவெடுத்தது பாரதீய ஜனதா தலைமை. வாஜ்பாய், அத்வானி, கட்சித் தலைவர் குசாபாவ் தாக்கரே, குரானா, செயலர் வெங்கைய நாயுடு, பிரமோத் மகஜன், வர்மா, சுஷ்மா சுவராஜ் ஆகியோர் கூடி ஆட்சியைப் பிடிக்க என்ன செய்வது என ஆலோசித்தனர்.

புதிய முதல்வரை நியமிப்பது என முடிவானது. பதவி பறிபோகிறதே என்ற ஆத்திரமும் கோபமும் வர்மாவுக்கு. முன்னாள் முதல்வர் குரானா தவிர வேறு யார் முதல்வரானாலும் சரி எனக் கூறிவிட்டு, வர்மா கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

அதன் பின் நடந்த நாடகங்களும் இரகசிய பேரங்களும் ஒரு திரைப்படம் போல விரிந்தன. வர்மாவின் ஜாட் ஜாதியினர், முதல்வர் வீட்டின் முன் குவிந்தனர். வர்மா பதவி நீக்கம் என்ற செய்தி பரவி, வர்மா ஆதரவு முழக்கங்கள் எழுந்தன. வெங்கையா நாயுடு வெளியே வந்து, அப்படி ஏதுமில்லை என மறுத்தார்.

வர்மா வேகமாக வெளியேறிய பின், முதல்வர் பதவி காலி என உறுதியானது. கூட்டத்தில் வர்மா நிலைகுலைந்தார், வெளியேற்றப்பட்டார் என்பதை வெங்கையா நாயுடு மறுத்தார். வதந்திகளை நம்ப வேண்டாம் என்றார்.

நீண்ட நேர எதிர்பார்ப்புக்குப் பின் இரவு $7^1/_2$ மணிக்கு வர்மா ராஜினாமா செய்ததால் சுஷ்மா சுவராஜ் முதல்வரானார் என அறிவிக்கப்பட்டது. 'இந்த மாற்றத்தின் மூலம் வாக்காளர்களுக்கு நல்ல செய்தி தரவில்லை' என வர்மா குமுறினார். இரவிலிருந்தே ஜாட் ஜாதியினர் வர்மா வீட்டின் முன் குவியத் தொடங்கினர். சிலர் மண்ணெண்ணெய் டின்களுடன் தற்கொலை நாடகத்திற்கு வந்தனர். ஆண், பெண் வேறுபாடின்றி பலரும் அழுது புலம்பினர்.

மறுநாள் காலையிலிருந்து பாரதீய ஜனதாவிற்கு எதிரான முழக்கங்கள் கிளம்பின. 'ஜாட் ஜாதியினருக்கு அவமானம்' என்று 67 வயது முதியவர் ஆத்திரத்துடன் கூறினார். ஆட்சி செயலற்றுப் போய், மக்கள் அவதிப்பட்ட போது, அது ஜாட் சாதிக்கு அவமானமாகப்படவில்லை.

வர்மாவை நீக்கி நல்ல ஆட்சி என நாடகமாடி, மக்களை ஏய்க்க முயன்றது பாரதீய ஜனதா. இதில் கட்சியின் யோக்கியதை அம்பலமானதுடன் கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக ஜாட் சாதியினர் எதிர்ப்பும் சேர்ந்து கொண்டது. தில்லி புறநகர் பகுதியில் 25 சட்டமன்ற தொகுதிகளின் வெற்றி ஜாட் சாதியினர் கையில்.

முழித்துக் கொண்ட பாரதீய ஜனதா, அடுத்த நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கியது. 'மூத்த தலைவர்கள் முடிவு கட்சி நல்லனுக்குத்தான்' என வர்மா தனது சாதியினரை சமாதானப்படுத்தினார். மத்திய அமைச்சரவையில் வர்மா சேர்க்கப்படுவார் என்ற தூண்டில்தான் வர்மாவை இப்படிப் பேச வைத்தது.

கூட்டணிக் கட்சி நிர்பந்தங்களால் மத்திய மந்திரி சபை விரிவாக்கத்தை டிசம்பருக்குத் தள்ளி வைத்திருந்தார் வாஜ்பாய். தமது கட்சி நெருக்கடியைத் தீர்க்க வர்மாவை மட்டும் மந்திரியாக்குவதா என எதிர்ப்புத் தெரிவித்தனர் பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதலும், ஜெயலலிதாவும்.

உடன் நாடகத்தின் இறுதிக் கட்டம் அரங்கேறியது. மந்திரி சபையில் சேரும்படி வாஜ்பாய் வர்மாவுக்கு கடிதம் அனுப்பினார். வர்மாவோ 'டில்லி ஆட்சியைக் கைப்பற்றிய பின்புதான் மத்திய மந்திரி பதவி' என சபதமேற்றார். அதற்கு முன்னதாக வாஜ்பாய் கண்ணீர் மல்க வர்மாவை கட்டித்தழுவினார்.

இத்தனைக்கும் அடிப்படை ஜாட் ஜாதியினர் ஓட்டைப் பொறுக்கி பதவி சுகம் அனுபவிக்கும் ஒரே நோக்கம்தான். கொள்கையாவது வெங்காயமாவது. சந்தையில் வெங்காய விலை மக்களை மிரட்டுகிறது. சாதியவாத பாரதீய ஜனதா கட்சியின் யோக்கியதை நாறுகிறது.

★☆★

உத்திரப் பிரதேச

**வெங்காயம் வாங்க வரிசையில் நிற்கும் தில்லி நகர மக்கள்: பா.ஜ.க. ஆட்சியின் இலட்சணம்**




படிப்பகம்

www.padippakam.com

மாநிலத்தில் சிரீ பிரகாஷ் சுக்லா என்கிற கிரிமினல் - மாஃபியா கும்பல் தலைவன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு, பாரதீய ஜனதாவின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது.

ஏற்கனவே கொலை, கொள்ளைக்கு பேர் போன உ.பி. பாரதீய ஜனதா எம்.பி. சாக்சி மகராஜ் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். 'முதல்வர் கல்யாண் சிங்கைக் கொல்ல, பாரதீய ஜனதா தலைவர்கள் சிலரே சுக்லாவிடம் 5 கோடிக்கு பேரம் பேசியுள்ளனர்' என பத்திரிக்கையில் அறிக்கை விட்டார் எம்.பி.

'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதால் கல்யாண் சிங் பீதியடைந்தார். சுமார் ஐந்தாண்டுகளாக உ.பி., பீகார், டில்லி என மூன்று மாநிலங்களை கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், பணம் பறித்தல் என பீதியில் உறைய வைத்தவன் சுக்லா. தன் உயிருக்கு ஆபத்து என்ற பின்தான் அவனை உயிருடனோ, பிணமாகவோ கொண்டு வர வேண்டும் என கல்யாண்சிங் ஒரு புதிய சிறப்பு அதிரடிப்படையை ஏப்ரலில் ஏவினார்.



தில்லி முதல்வர் பதவியில் இருந்து விலகிய பின் பேருந்தில் பயணம் செய்யும் எளிமை வேடதாரி சாகிப் சிங் வர்மா

5 மாதமாகியும் சுக்லா பிடிபடவில்லை. சிறப்பு அதிரடிப் படையை கல்யாண் சிங் ஒரு பிடிபிடிக்கவே, பதிலுக்கு அதிரடிப்படைத் தலைவர், அதிரடியாக ஒரு பட்டியலை முதல்வர் பார்வைக்கு வைத்தார்.

மாநில மந்திரிகள், பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் அதிகாரிகள் என சுக்லாவுக்கு பாதுகாப்பு தருபவர்கள், உதவுபவர்கள் பட்டியல்தான் அது.

• பிரபா திவேதி - தொழிலாளர் நல அமைச்சர். சுக்லா, திவேதியுடன் பலமுறை பேசியது மட்டுமின்றி, வீட்டிற்கும் சென்றுள்ளான். பிரபா திவேதியின் கணவரான பா.ஜ.க. தலைவர் பிரம் தத் திவேதியைக் கொன்றவன் பா.ஜ.க. எம்.பி.யான சாக்ஷி மகராஜ். எனவே பழிக்குப் பழி வாங்க சுக்லாவை நியமித்தனர் அமைச்சரும் அவரது உறவினர்களும். இது தெரிந்த எம்.பி. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே கல்யாண் சிங் பற்றி கதை கட்டினான்.

• அமர்மணி திரிபாதி - கால்நடைத் துறை அமைச்சர் சுக்லாவின் சகோதரர்களுக்கு மருந்து வழங்கும் ஒப்பந்தம் கிடைக்க தனது செல்வாக்கைப் பயன்படுத்தியவர். தொழில் அதிபர் குனால் ரஸ்தோகியைக் கடத்தி, 5 கோடி பறித்த வழக்கில் சுக்லா பயன்படுத்திய சுற்றுலாக் காரை வாடகைக்கு அமர்த்தியது, இந்த அமைச்சர் வீட்டிலிருந்துதான்.

• ரமாபதி திரிபாதி - சுகாதாரத்துறை அமைச்சர், சுக்லாவுடன் தொடர்புள்ளவர். அவனது சகோதரர்களுக்கு மருந்து வழங்கும் ஒப்பந்தம் கிடைக்கத் தடையாயிருந்த மாவட்ட மருத்துவ அதிகாரிகளை மாற்றினார்.

• மார்க்கண்டே சந்த் - சிறுபான்மைத் துறை அமைச்சர்.

• ஜெய் நாராயன் திவாரி - பொதுத் துறை அமைச்சர்.

• சுந்தர் சிங் பாகல் - முன்னாள் பால் வளத் துறை அமைச்சர். இந்த சுக்லாவைத் தமது வீட்டில் தங்க வைத்து பாதுகாத்தனர்.

பல வகையிலும் உதவியுள்ளனர்.

• ஜிஜேந்திர குமார் ஜெய்ஸ்வால் - பண்பாட்டுத் துறை அமைச்சர். ஜெய்ஸ்வாலுடன் அவரது காரில் சுக்லா பயணமாவதை அறிந்த அதிரடிப்படை அமைச்சர் காரை மறித்த போது சுக்லா தப்பி விட்டான்.

• சிவ் பிரதாப் சுக்லா - சிறைத்துறை அமைச்சர். சுக்லாவின் சிறைப்பட்ட கிரிமினல்களின் உத்தரவுப்படி, கட்டுப்பாடான சிறைத்துறை அதிகாரிகளை மாற்றினார்.

இன்னும் முன்னாள் பா.ஜ.க. அமைச்சர் ஆர்.கே. சௌத்ரி, பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் அகிலேஷ் சிங், ஷெர் பகதூர் ஷா, ராம் பிர் உபாத்யாயி, பீகார் பா.ஜ.க. எம்.எல்.ஏ. திலிப் சிங், முன்னாள் பா.ஜ.க. எம்.பி.க்கள் பிரிஜ்பூஷன் கரண் சிங், அஷ்ட் புஜா சுக்லா, காங்கிரசு எம்.எல்.சி. மதன் சிங் முதலியோர் கிரிமினல் - மாஃபியா தலைவனான சுக்லாவிற்கு உதவி, பாதுகாத்துள்ளனர். மேலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். கீழ்மட்ட போலீசு உட்பட 40 அதிகாரிகளும் சுக்லாவிற்கு உதவியுள்ளனர்.

சுக்லாவைச் சுட்டுக் கொன்ற கல்யாண் சிங் அரசு, இவனுடன் தொடர்பு வைத்திருந்த தனது கிரிமினல் மந்திரிகள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் மீதான நடவடிக்கையைத் தொடரவில்லை. சிறுபான்மை அரசு கவிழ்ந்துவிடும் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

இதில் இன்னும் கீழ்த்தரமான விசயம் என்னவென்றால் கிரிமினல் - மாஃபியா கும்பல் தலைவன் சுக்லாவிற்கு செய்த ஒவ்வொரு உதவிக்கும், தப்பிக்க தந்த முன்னெச்சரிக்கைத் தகவலுக்கும் சுக்லாவிடம் பேரம் பேசி பணமும் கறந்துள்ளனர். திருடனிடமே பணம் பறிப்பவனின் யோக்கியதை எப்படிப்பட்டதாயிருக்கும்? இவர்கள்தான் பா.ஜ.க.வின் மந்திரிகள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள்!

**சுட்டுக் கொல்லப்பட்ட உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த மாஃபியா சிறீ பிரகாஷ் சுக்லா**



ஆனாலும் பதவி வெறி பிடித்தலையும் இந்த பார்ப்பன மத வெறி பாசிச பாரதீய ஜனதாக் கட்சி, இன்னும் தமது யோக்கியமான, கொள்கைப் பிடிப்புள்ள கட்சி என்ற பொய்ப் பிரச்சாரத்தை நிறுத்துவதாயில்லை. • ராசு


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## போலி மதச்சார்பின்மைக்கு வேட்டு

இந்து மதப் பண்டிகை நாளான விஜயதசமியன்று, குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினால், ''குழந்தைகளுக்கு சரஸ்வதியின் கடாட்சம் கிடைக்கும்'' என்பது பார்ப்பனர்களால் புகுத்தப்பட்ட மூடநம்பிக்கை. மைய அரசின் கீழ் இயங்கும் ''சாகித்ய அகாடமி'' என்ற கலை - இலக்கிய அமைப்பு, கேரளாவில், விஜயதசமியன்று பல்வேறு மதங்களைச் சேர்ந்த குழந்தைகளைக் கூட்டி வைத்து, அக்குழந்தைகளின் நாக்கில், ''ஹரி ஸ்ரீ கணபதே நமஹா'' என்ற பார்ப்பன மந்திரத்தை எழுதி, விஜயதசமியைக் கொண்டாடியது. அரசு நிறுவனங்களை இந்து மயமாக்கும் பா.ஜ.க.வின் இச்சதித்தனத்தை எதிர்த்து, கேரளாவெங்கும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

## வழுவாத நீதியா? பழுதான நீதியா?

ஆந்திர மாநிலத்திலுள்ள கரம்சேடு கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண்ணுக்கும், கம்மா சாதியைச் சேர்ந்த இளைஞனுக்கும், தண்ணீர் எடுக்கும்போது ஏற்பட்ட வாய்ச்சண்டையையடுத்து, கம்மா சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்டோர்களின் குடியிருப்பைத் தாக்கி, எட்டு தாழ்த்தப்பட்டோரைப் படுகொலை செய்தனர். இப்படுகொலை 1985 ஆம் ஆண்டு நடந்தது. இவ்வழக்கை விசாரித்த குண்டூர் மாவட்ட நீதிமன்றம், ஐந்து மேல்சாதி வெறியர்களுக்கு ஆயுள் தண்டனையும், 53 பேர்களுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும், 36 பேர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து, 94-ஆம் ஆண்டில் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து ஆந்திர உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்த ரெட்டப்ப ரெட்டி, ஹனுமந்தப்பா என்ற இரு நீதிபதிகள், அரசு போதிய ஆதாரங்கள் தரவில்லை எனக் கூறி, சாதிவெறி பிடித்த குற்றவாளிகள் அனைவரையும் விடுதலை செய்துவிட்டனர்.

## இந்தியப் பசுவின் மீதும் காப்புரிமை?!

வேம்பு, மஞ்சள், பாசுமதி அரிசி - இவற்றையடுத்து, ''வெச்சூர்'' என்ற இந்திய வகைப் பசுவின் மீதும் ஏகாதிபத்தியங்கள் கண் வைத்து விட்டன. ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ரோஸ்லின் ஆய்வு நிறுவனம், நமது நாட்டைச் சேர்ந்த வெச்சூர் இனப் பசுவின் மீது காப்புரிமை கேட்டு இரகசியமாக விண்ணப்பித்துள்ளதாக, தில்லியைச் சேர்ந்த வந்தனா சிவா என்ற சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானி அம்பலப்படுத்தியுள்ளார். இப்பசுக்களின் நுணுக்கங்களை, இந்திய விஞ்ஞானிகளே கடத்திச் சென்று விற்றுவிடலாம் என்றும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

## இந்து வெறியர்களின் அதிகார முறைகேடுகள்

மகாராஷ்டிரா மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசு, அம்மாநில அரசின் சார்பில் தொடுக்கப்பட்டிருந்த 1,074 வழக்குகளைத் திரும்பி பெற்றுக் கொண்டுவிட்டது. தாழ்த்தப்பட்டோர், மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள் போன்றோர் மீது தொடுக்கப்பட்டிருந்த அரசியல் வழக்குகள் இவை என இந்துமதவெறியர்கள் பெருந்தன்மையாகக் கூறிக் கொண்டாலும், அதன் பின்னே அவர்களின் நரித்தனமும் அடங்கியுள்ளது. பாபர் மசூதி இடிப்புக்கு முன், இந்து மதவெறியர்கள் நடத்திய ராம ஜென்ம பூமி இயக்கத்தையொட்டி, அக்கும்பலின் மீது தொடுக்கப்பட்டிருந்த குற்ற வழக்குகளையும், அரசியல் வழக்குகள் என மோசடி செய்து, கூட்டத்தோடு கோவிந்தாவாகத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டனர்.

## இந்து வெறியர்களின் ஆட்சியில் தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல்

மகாராஷ்டிரா மாநிலம் - சங்கிலி மாவட்டத்திலுள்ள போர்காவோம் கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திர மானே என்ற தாழ்த்தப்பட்ட இளைஞனுக்கும், மராத்தா மேல் சாதியைச் சேர்ந்த ரேகா சோன்கர் என்ற பெண்ணுக்கும் இடையே இருந்த தகாத உறவைச் சாக்காக வைத்து, மராத்தா சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோரின் வீடுகளைத் தகர்த்து தரைமட்டமாக்கிவிட்டனர். அக்கிராம பஞ்சாயத்துத் தலைவர் துணையோடு, 600-க்கும் மேற்பட்ட மேல்சாதி வெறியர்கள் ஒன்றாகத் திரண்டு, இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக நடத்திய தாக்குதலில், 10 தாழ்த்தப்பட்டோரின் வீடுகள் தீக்கிரையாயின; 48 வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டன.

## பா.ஜ.க. ஆட்சியும், வெங்காயமும்

சண்டிகர் நகரிலுள்ள துணிக்கடையொன்றில், ''எங்கள் துணிக்கடையில் ஒரு சூட் தைத்துக் கொள்ளும் அளவு துணி எடுப்பவர்களுக்கு, ஒரு கிலோ வெங்காயம் இனாம்'' என அறிவித்த நாளில் இருந்தே, அத்துணிக் கடையில் விற்பனை இருமடங்காகி விட்டதாம்! இராசஸ்தான் மாநிலத்தில் 'கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள்' செயற்கைகோள் தொலைக்காட்சி இணைப்பிற்கான மாதாந்திர சந்தாவைப் பாக்கி வைக்காமல் செலுத்தும் சந்தாதாரர்களுக்கு, வெங்காயம் இனாம் என அறிவித்துள்ளார்களாம்! பா.ஜ.க.வின் அரைகுறை இந்து ராஜ்ஜியத்தின் இலட்சணமே இதுதான் என்றால், முழுமையான இந்து ராஜ்ஜியம் எப்படி இருக்கும்?

## அமெரிக்காவின் மேலாதிக்க வெறி

வளைகுடாப் போர் தொடங்கி, கடந்த ஆறேழு ஆண்டுகளாக ஈராக் அதிபர் சதாம் உசேனைப் பதவியில் இருந்து தூக்கியெறிவதற்காக அமெரிக்கா செய்து வந்த அடாவடித்தனங்கள் தோல்வியடைந்த பின்னும், அதன் மேலாதிக்க வெறி தணிந்தபாடில்லை. சதாம் உசேன் எதிர்ப்பு கோஷ்டிகளுக்கு, 386 கோடி ரூபாய் பெறுமான நிதி மற்றும் ஆயுத உதவி அளிப்பதற்கான அதிகாரத்தை அதிபர் கிளிண்டனுக்கு வழங்கும் சட்டம், அமெரிக்க காங்கிரசில் இயற்றப்பட்டுள்ளது. ஆட்சிக் கவிழ்ப்பும், தலையாட்டி பொம்மைகளைப் பதவியில் அமர்த்துவதும்தான் அமெரிக்க பாணி ஜனநாயகம்!

**வாடிக்கையாளர்களுக்கு வெங்காயம் இனாம்!**
**பா.ஜ.க. ஆட்சியின் இலட்சணம்**




## தொடரும் சுதேசி மோசடிகள்

ஐக்கிய முன்னணி ஆட்சியின் பொழுது, காப்பீட்டுத் துறையை அந்நிய முதலாளிகளுக்குத் திறந்து விடுவதை எதிர்த்த இந்து மதவெறியர்கள், இப்பொழுது, தங்களின் ஆட்சியில், காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலாளிகள் 26 சதவீதம் வரை முதலீடு செய்ய அனுமதியளிக்கும் முடிவை சுமுகமாக எடுத்துவிட்டனர். இத்துறையில் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டையும் சேர்த்தால், கிட்டதட்ட 40 சதவீத முதலீடு அந்நிய முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கும்!

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



தமிழ் வழிபாட்டிற்குத் தடை போடும் பார்ப்பன சாதி வெறியை எதிர்த்து, பல்வேறு தமிழ் அமைப்புகளும் கூட்டாக இணைந்து சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை, ''தமிழகத்திலுள்ள கோவில்களில் இறைவழிபாடு தமிழில்தான் நடத்தப்படவேண்டும்; கோவில் குடமுழுக்கு விழாவின் போது, வேத மந்திரங்களுக்குப் பதிலாக, தமிழ் பாசுரங்களை ஓத வேண்டும்'' எனச் சமீபத்தில் உத்திரவிட்டது.

''தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இந்து பக்தர்கள், தங்களது சொந்த மொழியில் இறைவனை வழிபட உரிமை வேண்டும்'' என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட இந்த நியாயமான உத்தரவு, பார்ப்பன பத்திரிகைகளுக்கும், பார்ப்பன சாதி வெறியர்களுக்கும், இந்து முன்னணிக்கும் மட்டும் அநியாயமாகப்படுகிறது. ஆர்.எஸ்.எஸ். பெத்துப் போட்டிருக்கும் குரங்கு குட்டிகளில் ஒன்றான இந்துக் கோவில்கள் பாதுகாப்பு கமிட்டி, ''சமஸ்கிருதம்தான் கடவுளின் மொழி; தமிழ் பாசுரங்களை, மந்திரமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகம விதிகளின்படிதான் ஆலயங்கள் இயங்க வேண்டுமே தவிர, அரசாங்க உத்தரவுப்படியல்ல'' எனப் பார்ப்பன ஆதிக்கத் திமிரைக் கக்கி, இந்த உத்தரவுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

இட ஒதுக்கீடும், தீண்டாமைக்குத் தடையும் சட்டப்படி கூட நுழைய முடியாத இடங்கள் உண்டென்றால், அவை, பார்ப்பனர்களின் முழு ஆதிக்கத்தின் கீழுள்ள இந்துக் கோவில்கள்தான். அங்கே, பார்ப்பானைத் தவிர வேறு சாதியினர் அர்ச்சகராக முடியாது; சூத்திரனே - சண்டாளனே கருவறைக்குள் நுழையாதே என இந்துமத தர்மப்படி மட்டுமல்ல, சட்டப்படியும் சொல்ல முடியும். இந்தப் பார்ப்பன சாதி ஆதிக்கமும், திமிரும், கோவில்களில் அவர்கள் அடிக்கும் கொள்ளையும் கேள்விக்கிடமின்றி என்றும் தொடர வேண்டும் என்பதற்காகதான் ஆகம விதிகளை உருவாக்கிக் கொண்டு, கோவில்களில் அரசு தலையிடக் கூடாது என்கிறார்கள்.

1970-இல் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதைத் தடுத்து நிறுத்திய பார்ப்பனக் கும்பல், இப்பொழுது, ''உன் தமிழ்ப் பண்களையும், பாசுரங்களையும் கோவிலில் ஓரமாக வைத்து கொள்; ஆனால், கருவறைக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம்'' என தமிழை இழிமொழியாக, தீண்டத்தகாத மொழியாக இழிவுபடுத்துகிறது.





தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழிக்கான உரிமையைக் கோரி, தமிழ் மேம்பாட்டுக் கூட்டமைப்பினர் சென்னையில் நடத்திய பேரணி.

தமிழ் பக்தர்கள் உண்டியலில் போடும் காசைக் கொண்டு தயாரிக்கப்படும் படையலை ஆகம விதிப்படி ஏற்றுக் கொள்ளும் ஆண்டவன், தமிழை ஏற்றுக் கொள்ள மாட்டான் எனக் கூறுவது எந்தவகை நியாயம்? கடவுளைக் கடல் தாண்டிக் கொண்டு போய், அமெரிக்கா போன்ற 'மிலேச்ச' தேசங்களில் வைத்து ஆறு காலப் பூசை செய்வதை அனுமதிக்கும் ஆகமம், 'சைவத்தையும், வைணவத்தையும் வளர்த்த தமிழைக் கருவறைக்குள் நுழைய அனுமதிக்க மாட்டேன்' என்பது நன்றி கொன்ற செயல் இல்லையா? கால மாற்றங்களுக்கு ஏற்ப, ஆகமத்தை வளைத்துக் கோவிலுக்குள் குழல் விளக்கு, மின் விசிறி போட்டுக் கொள்ளவும், கோவில் திருவிழாக்களில் சினிமா பாட்டுக் கச்சேரி நடத்தவும் அனுமதிக்கும் பார்ப்பனர்கள், ''தமிழில் அர்ச்சனை செய்'' எனும் போது மட்டும், ஆகமத்துக்கு விரோதம் எனக் கூப்பாடு போடுவது ஏன்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை ஒன்றுதான். தமிழகக் கோவில்களில் கோலோச்சி வரும் பார்ப்பன ஆதிக்கம், சாதித் திமிரை பார்ப்பனக் கும்பல் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதுதான். இந்திய அரசியல் சாசனத்தின் 25 ஆவது பிரிவு, 'மத சுதந்திர உரிமை' என்ற பெயரில், பார்ப்பனர்களுக்கு இந்த உரிமையை வழங்கி, மனு தர்மத்தின் மறுபதிப்பாக உள்ளது.

தமிழக இந்து பக்தர்களே, இது உங்களுக்காக, தமிழ் மொழியின் மீதும், தமிழ் இனத்தின் மீதும் பற்று கொண்டவர்கள் நடத்தும் போராட்டம். இந்த உரிமைப் போரில், நீங்கள் முன்னணியில் நிற்கப் போகிறீர்களா? ஆண்டவனுக்கு அடியார்களாக இருப்பதைப் போலவே, பார்ப்பானுக்கும் அடிமையாய் இருந்துவிட்டுப் போகிறோம் என வாய்மூடிக் கிடந்து, தமிழ்மொழி இழிவுபடுத்தப்படுவதற்கு இனியும் துணை போகப் போகிறீர்களா?